
தமிழரசு
மார்ச் 2005





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
மாசி – பங்குனி
மலர்: 36 இதழ்: 9
மார்ச் 2005
விலை ரூ.10

## இந்த இதழில்...

★ நிதி நிலை அறிக்கை 2005–2006 ........ 2

★ தொழில் உற்பத்தித்துறையில்அந்நிய முதலீட்டை ஈர்த்து வரும் முதன்மை மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் உயர்ந்துள்ளது (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை) ........ 38

★ சுனாமியால் குழந்தைகளை இழந்தோர் மீண்டும் குழந்தைப்பேறு பெற்றிட இலவச அறுவை சிகிச்சை (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை 28.2.2005) ........ 60

★ நல்லன்போடு வாரி வழங்கிய நெஞ்சங்களுக்கு உள்ளன்போடு நன்றியை உரித்தாக்குகிறேன் (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நன்றி அறிவிப்பு) ........ 62

★ எச்ஐவி இறப்புகளைக் குறைத்திட எச்ஐவி பாசிட்டிவ் குடும்பங்களுக்கான முழுப் பாதுகாப்பு மற்றும் சிகிச்சை வழங்கும் திட்டம் ........ 63

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மகளிர் தின வாழ்த்துச் செய்தி ........ 64

★ சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிக்கு பன்னாட்டுத் தரச் சான்றிதழ் ........ 65

★ பல்வேறு துறைகளின் பயன்பாட்டுக்கென 52 புதிய வாகனங்கள் ........ 66

★ தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடம் ........ 68

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் நிர்மல் கிராம் புரஸ்கார் விருது பெற்றவர்கள் சந்திப்பு ........ 69

★ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு புதிய வலைதளம் ........ 71

★ திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் கணினிமயமான மின்தடை நீக்கப் பணி மையங்கள் ........ 72

★ தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ........ 73

★ கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் ........ 76

★ மூன்று திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கொடை ........ 78

★ அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில் வென்ற காவல்துறையினருக்கு ரொக்கப் பரிசுகள் ........ 79

★ மாணவ – மாணவிகளுக்கு கல்வி நிதி உதவி ........ 80

### அட்டைப்பட விளக்கம்

**முதலாம் பக்க அட்டை :** 2005–2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினைச் சட்டப்பேரவையில் சமர்ப்பிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் வருகை தரும் மாண்புமிகு நிதியமைச்சர்.

**இரண்டாம் பக்க அட்டை :** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் நிர்மல் கிராம் புரஸ்கார் விருது பெற்ற ஊராட்சித் தலைவர்கள் சந்திப்பு.

**நான்காம் பக்க அட்டை :** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு பன்னாட்டு ரோட்டரி சங்கம் "வாழ்நாள் சாதனையாளர் விருது" வழங்கும் விழா

*ஆசிரியரும் வெளியிடுபவரும்*: **சி. முத்துக்குமாரசாமி**, இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



# நிதிநிலை அறிக்கை
# 2005 - 2006


மாண்புமிகு நிதியமைச்சர்
திரு. சி. பொன்னையன் அவர்கள்,
2005-2006 ஆம் ஆண்டிற்கான
வரவு–செலவுத் திட்டத்தை,
2.3.2005 அன்று
சட்டமன்றப் பேரவை முன் வைத்து
ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறையென்று வைக்கப்படும்.

*(நீதி தவறாத, நேர்மையான ஆட்சிமூலம், குடிமக்களின் நலன்களைப் பேணிகாக்கும் மன்னன், மனித உருவிலான தெய்வமாகக் கருதப்படுவான்).*

நுண்மாண் நுழைபுலமும், வாரி வழங்கும் வள்ளல் தன்மையும், தொலை நோக்குச் சிந்தனையும் கொண்ட, நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் நல்லாட்சியைச் சித்தரிக்கும்



வண்ணம் அமைந்துள்ள, வள்ளுவர் பெருந்தகையின் இச்சொற்களை நினைவு கூர்ந்து, 2004-2005 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், 2005-2006 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம்மாமன்றத்தின் முன்வைக்க நான் விழைகின்றேன். திண்ணிய மன உறுதியுடனும், திடமான நம்பிக்கையுடனும், முழுமையான ஈடுபாட்டுடனும், தெள்ளத் தெளிவான சிந்தனையுடனும், தான் மேற்கொண்ட நடவடிக்கைகளின் வாயிலாக, முந்தைய ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் நிலவிய நம்பிக்கையற்ற, இருள் கவ்விய படுகுழியிலிருந்து தமிழகத்தை மீட்டு, மாநில மக்கள் அனைவருக்கும் வளமான வாழ்க்கையினையும், அளப்பரிய வாய்ப்புகளையும் அளித்து, இந்தியாவிலேயே முதல் நிலை மாநிலம் என்ற இலக்கை எய்திடும் நோக்கோடு, வலுவான வளர்ச்சி நிறை மாநிலமாகத் தமிழகத்தை மாற்றியுள்ள, நமது ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் நல்லாசியுடன் நான் என் பணியைத் தொடர்கின்றேன்.

2. முந்தைய ஆட்சியின் இறுதிக்காலத்தில் நமது மாநிலம் சந்தித்த நிதிச் சீரழிவு, பொருளாதாரத் தேக்கநிலை, பாதுகாப்பற்ற, தடம்புரண்ட நிலை ஆகியவற்றிலிருந்து மாநிலத்தை மீட்கும் பொறுப்பை, தமிழ்நாட்டு மக்கள் 2001 ஆம் ஆண்டு மே திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு அபார வெற்றிமூலம் அளித்தார்கள். தமிழ்நாட்டின் முன்னைப் பெருமை, பலமுனை வளர்ச்சி, வளமை ஆகியவற்றை மீட்டுத்தந்து, வன்முறை மற்றும் அமைதியின்மை பற்றிய அச்சம் ஏதுமின்றி மக்களுக்கு மகிழ்ச்சியான ஒரு வாழ்க்கையை மீண்டும் தந்ததன் மூலம் இன்று நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், மக்களிட்ட இந்தக் கட்டளையை நிறைவேற்றி யுள்ளார்கள். பெரும் குழப்பத்திற்கும், துயரங்களுக்கும் வித்திட்ட, முந்தைய ஆட்சியின் எழுச்சியற்ற, களையிழந்த, நெஞ்சுறுதியற்ற நிருவாகத்தால் ஏற்பட்ட கட்டுத்தளைகளைத் தகர்த்து, தமிழகம், எங்களது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆற்றலும், எழுச்சியும்மிகு தலைமையின்கீழ் முன்னேறிவருகிறது. நிதிநிலையைச் சீர்செய்து தமிழ்நாட்டை ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லவும், தமிழ்நாட்டு மக்களுக்கு அமைதியுடன் கூடிய வளமான வாழ்க்கையை அமைத்துத் தருவதற்கும் நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் அளப்பரிய முயற்சியினை மேற்கொண்டுள்ளார்கள். இத்தகைய பலதரப்பட்ட சிக்கலான, பாதகமான சூழ்நிலைகளில், இந்தப் பெரும் சவாலானப் பணியை வேறு எவரொருவராலும் வெற்றிகரமாகச் சாதித்திருக்க முடியாது. இன்று, ஒவ்வொரு தமிழனும் தலைநிமிர்ந்து தனது இலக்கு நோக்கி முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றான் என்பதே, தடைகள்

அனைத்தையும் தகர்த்தெறிந்து வியத்தகு சாதனைகள் புரிந்துள்ள, தொலைநோக்குப் பார்வை கொண்ட, நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குக் கிடைத்துள்ள மிகச் சிறந்த பாராட்டாகும்.

3. இந்த அரசு, 2001 மே திங்களில் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, மாநிலத்தைச் சூழ்ந்திருந்த, முற்றிலும் சீர்குலைந்திருந்த நிதி நிலைமையை இம்மாமன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவு கூரவிழைகின்றேன். வளர்ச்சிப் பணிகள் கைவிடப்பட்டதாலும், பட்டிகளுக்குத் தொகை வழங்கப்படாததாலும், அரசின் நம்பகத் தன்மையே முற்றிலுமாகப் பாதிக்கப் பட்டிருந்தது. இத்தகைய நிதி நெருக்கடியால், படுகுழியில் தள்ளப்பட்டிருந்த நமது மாநிலத்தை மீட்பது என்பது நடைமுறையில் சாத்தியப்படாத ஒரு சவாலாகவே இருந்தது. நிதிச் சீர்திருத்தம் என்பது ஒரு இலக்கு மட்டுமல்லாமல், அதிக வேலைவாய்ப்பு, மேம்பட்ட வருமானம் மற்றும் மக்களுக்கு நல்ல தரமான வாழ்க்கை ஆகியவற்றை உறுதி செய்வதற்குத் தேவையான ஒரு வழிமுறையும் ஆகும் என்பதை இம்மாமன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். விரைவான வளர்ச்சியை உறுதி செய்வதற்கு, நிதிச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் படுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டபோது, நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், நிதிநிலை விரைந்து சீர் செய்யப்படுவதையும், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட காலக் கட்டம் முழுமையிலும், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்தார்கள். தமிழ்நாட்டில் மட்டும்தான் பட்டினிச் சாவுகள் முற்றிலுமாகத் தவிர்க்கப்பட்டன. இவ்வளவு குறுகிய காலத்திலும், அதே நேரத்தில், இத்தகைய நிதிச் சீர்திருத்த நடவடிக்கைகளின் தீவிரத்திலிருந்து ஏழை எளிய மக்கள் முற்றிலுமாகப் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கின்ற விதத்திலும், வேறு எந்தவொரு மாநிலத்திலும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நிதிச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதிலும், விரைந்த வளர்ச்சி மற்றும் வளமான பாதையில் மாநிலத்தை மீண்டும் இட்டுச் செல்வதிலும் நமது அரசு கண்ட வெற்றிக்கு நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் துணிச்சலான, 'ஆற்றல்மிக்க, உறுதியான, தயாள குணமுடைய தலைமைதான் முழுமுதற் காரணம் ஆகும்.

## மக்களைப் பேணிக்காக்கும் முதலமைச்சர் அவர்களின் அயராதசேவை

4. சாதாரணக் காரணங்களுக்காகக் கூட, சட்டம் – ஒழுங்கு நிலைமை சீர்குலைவது ஒருபுறம் இருக்க, பயங்கரவாதம், கிளர்ச்சி, வன்முறை, போராட்டப் போக்குகள், தீவிரவாதம் போன்ற காரணங்களினால் பல மாநிலங்களின் வளர்ச்சிப் பணிகள் முற்றிலுமாக முடங்கிப் போனதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். தமிழ்நாட்டில் மக்களின் பாதுகாப்பிற்கும், பத்திரமான வாழ்வுக்கும் உத்திரவாதம் அளிக்கப் பட்டுள்ளது. இதனை ஒரு சாதாரண நிகழ்வாக எண்ணத்தோன்றும். ஆனால், மாநில எல்லைக்கு அப்பால் நடைபெறும் சம்பவங்களைப் பார்க்கும்போது, அவ்வாறு எண்ணுவது பெருந்தவறு என்பது புலனாகும். நமது சமூகக் கட்டமைப்பைத் தகர்த்தெறியும் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும், தீங்கு விளைவிக்கக் கூடிய, பிளவு சக்திகளை எதிர்கொண்டு மாநிலத்தின் இறையாண்மையைத் தனது தளர்வற்ற, தீரமிக்க, உறுதியான, துணிச்சலான தலைமையின் கீழ் கட்டிக் காத்து வருவதற்காக, நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களை மனமாரப் பாராட்டுவதில் அனைவரும் பங்கேற்க வேண்டும். இவைதான் நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களைத் தலைவர்களுக்கெல்லாம் தலைவராகவும், ஒப்பற்றத் தலைவராகவும், உறுதியான கொள்கை உடையவராகவும், பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் சமரசத்திற்கு இடமளிக்காதவராகவும், மிக நுணுக்கமாகத் திட்ட மிடுபவராகவும், மதிநுட்பம் மிக்க செயலாக்கம் கொண்டவராகவும், அச்சுறுத்தல்களுக்கு அடிபணியும் ஆட்சிகளால் ஏற்படும் வேதனைகளிலிருந்து குடிமக்களைப் பாதுகாக்கும் திறன் கொண்ட அமைப்பாக, தமிழகக் காவல் துறை உருவாக வேண்டும் என்பதில் தீவிர நம்பிக்கை உடையவராகவும், திகழச் செய்கின்றன. நமது தலைவியின் தயக்கமற்ற, மனம் தளராத உறுதிப்பாடு மற்றும் செயலாக்கத்தின் காரணமாகத் தான், பயங்கரக் கொலைகாரன், காட்டுக் கொள்ளையன் வீரப்பனையும், அவனுடைய கும்பலையும் ஒழித்துக் கட்டி, தீய சக்திகளிடமிருந்து மாநிலத்தைக் காத்து மாபெரும் சாதனை படைக்க முடிந்தது. தமிழ்நாட்டு மக்களைப் பேணிப் பாதுகாப்பதில், நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் அயராத, அர்ப்பணிப்பு கொண்ட சேவையை, எப்படிப் பாராட்டினாலும் மிகையாகாது.

## நடுத்தரக் கால நிதி நிலைத் திட்டம்

5. 2004 பிப்ரவரியில், 2004-2005 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் நான் தாக்கல் செய்த நடுத்தரக் கால நிதிநிலைத் திட்டம் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். மாநிலத்தின் நிதி நிலைமையை, மிகச் சிறந்த முறையில் நிருவகித்ததன் காரணமாகத்தான், 2004-2005ஆம் ஆண்டுக்கான நடுத்தரக் கால நிதிநிலைத் திட்டத்தில் தெரிவிக்கப் பட்டிருந்த இலக்குகளை முழுமையாக எய்த முடிந்தது என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். சீரானதும் சாத்தியமானதுமான நிதி நிலைமையை நிலை நிறுத்தி, ஏழை எளிய மக்களுக்கு அதிக அளவு பாதுகாப்பு அளித்தல், அதே வேளையில், வளர்ச்சியையும் மேம்பாட்டையும் ஊக்குவித்தல் ஆகிய இரு நோக்கங்களையும் மனதில் இருத்தி, நாளது வரையான நடுத்தரக் கால நிதி நிலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இந்த நிதிநிலை அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. நிதி நிலையை மேலும் சீரமைக்க வழிவகுக்கும் நோக்கில், 2005-2006ஆம் ஆண்டிலும், நிதிநிலைமையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நிலைநிறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை, இந்த நடுத்தரக் கால நிதிநிலைத் திட்டத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். 2008-2009ஆம் ஆண்டுவாக்கில், வருவாய்க் கணக்கில் உபரி நிலையை எட்டுவதை நோக்கமாகக் கொண்டு, வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையைக் குறைக்கும் போக்கு தொடர்ந்து கடைபிடிக்கப்படும். 2008-2009 ஆம் ஆண்டுவாக்கில் மத்திய அரசும் மாநில அரசுகளும் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ஏதும் இல்லாத நிலையை அடையவேண்டும் என்று பன்னிரண்டாம் நிதிக் குழுவும் குறிப்பிட்டுள்ளது.

6. 2003ஆம் ஆண்டு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தையும், 2004 ஆம் ஆண்டு, இச்சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். 2008ஆம் ஆண்டு, மார்ச்31 வாக்கில், மொத்த வருவாயில், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையின் விகிதாச் சாரத்தை, 5 சதவிகிதத்திற்கும் கீழ் குறைப்பதன் நோக்கம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் கூறியுள்ளவாறு, நடுத்தரக் கால நிதிநிலைத் திட்டம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிதிநிலை குறிப்பிடத்தக்க அளவு சீரடைந்துள்ளது என்பதையும், 2003ஆம் ஆண்டு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள இலக்குகளுக்கும், போக்கிற்கும் உட்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிடும் வகையில், 2005-2006 ஆம் ஆண்டில், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை 4.64 சதவிகிதம் என்ற நிலையை அடையும் என்பதை 2005-2006ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் காட்டுகின்றன. இதுபோன்ற நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தை 5 மாநிலங்கள் மட்டுமே செயல்படுத்தியுள்ளன என்பதும், அவற்றுள் தமிழ்நாடும் ஒன்று என்பதும் முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இத்தகைய சட்டத்தைச் செயல்படுத்தி, நிலையான அடிப்படையில் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையைக் குறைக்கும் விதத்தில் நிதிநிலையை நிருவகிக்கும் மாநிலங்கள் மட்டுமே, கணிசமான நிதியுதவியைப் பெறத்தகுதி உடையவையாக இருக்கும் என்பதை பன்னிரெண்டாம் நிதிக் குழு தற்போது தெளிவாகக் கூறியுள்ளது. நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையால்தான், சரியான நேரத்தில், தமிழ்நாட்டில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்பது தற்போது கண்கூடாகிறது.

7. பதினோராவது நிதிக்குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், 2000-2005 ஆம் ஆண்டு கால அளவிற்கு, மத்திய அரசு கொண்டுவந்த 'நிதிச் சீர்திருத்த உதவி நிதி' பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர் என்பதில் ஐயமில்லை. நிதிநிலையை நிருவகிப்பதில், நல்ல சாதனை படைக்கும் மாநிலத்திற்கு, இந்த நிதிச் சீர்திருத்த உதவி நிதியிலிருந்து ஆண்டு மானியமாக ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது. நமது மாநிலத்தில் நிதிநிலை சிறந்த முறையில் நிருவகிக்கப்படுவதை மத்திய அரசு அங்கீகரித்து, தொடர்ந்து நான்காவது ஆண்டிற்கும் தமிழ்நாட்டிற்கு நிதிச் சீர்திருத்த ஊக்க உதவி மானியத்தை வழங்கியுள்ளது. இத்தகைய பெருமையைப் பெற்ற ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இம்மாநிலத்தின் நிதிநிலையைச் சரி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும், 2000-2001ஆம் ஆண்டு இறுதியில் இம்மாநிலத்தில் காணப்பட்ட நிதி நிலைச் சிக்கலும், குழப்பமும் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் நான் தெளிவாக விவரித்துள்ளேன். 2000-2001ஆம் ஆண்டில் வளர்ச்சிப் பணியை முற்றிலும் நிலை குலையச் செய்தது போன்ற சீர்கேடு மீண்டும் ஏற்படாத வண்ணம் தடுத்து நிறுத்த நிதிச் சீர்கேட்டினைச் சரிசெய்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையின் கீழ் இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுவர் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

நிதிநிலையைச் சீரமைப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சீரிய கவனத்தினால், மாநிலத்தின் வளர்ச்சிக்கான இலக்குகளை எய்துவதில், இம்மாநிலம் தீவிரமாக முன்னேற்றம் காண இயலும் என்பது உறுதியாகியுள்ளது.

## தமிழ்நாட்டின் பொருளாதாரம்

8. 2000-2001 ஆம் ஆண்டு இறுதியில் நிலவிய நிதி நெருக்கடியோடு, வளர்ச்சியில் ஏற்பட்ட முட்டுக்கட்டையும் சேர்ந்து, பொருளாதாரத்தில் தேக்கநிலை ஏற்பட வழிவகுத்தன. தொடர்ந்து 3 ஆண்டுகளாக நிலவிய கடும் வறட்சி நிலையினால், இத்தேக்க நிலையிலிருந்து மீள்வது மேலும் சிக்கலாகியது. தமிழகத்தை உயர் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் வகுத்திட்ட 15 அம்சத் திட்டத்தைப் பற்றி மதிப்பிற்குரிய பேரவை உறுப்பினர்கள் அறிவர். நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் வகுத்த புதிய அணுகுமுறை, வறட்சி நிலையை மாநிலம் திறம்படச் சமாளிக்க வழிவகுத்தது மட்டுமின்றி, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்த, குறைந்த வளர்ச்சி நிலையிலிருந்து, மீண்டுவருவதற்கும் வகை செய்துள்ளது. தமிழ்நாட்டை ஒரு உயர் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்வதற்கேற்ப, இந்த அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சமசீர் வளர்ச்சிக்கான முன் முயற்சிகள், விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான புதிய அணுமுறைக்கு வழிவகுக்கும். மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பு (Gross State Demestic Product), நடப்பாண்டில், நிலையான விலைகளில் 8 சதவிகிதத்திற்கு மேல் அதிகரிக்கும் என்று அண்மைக்கால புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இவ்வாறாக, பொருளாதாரத்தில், வளர்ச்சி வேகத்தை நாங்கள் மீண்டும் கொண்டு வந்துள்ளதும், இதனால் தமிழ்நாட்டு மக்களுக்கு அதிக வாய்ப்புகளை அளிக்கும் வண்ணம், உயரிய வளர்ச்சிப் பாதையில் மாநிலம் மீண்டும் முன்னேறிச் செல்ல இயலும் என்பதும் தெளிவாகிறது. முதன்மைத் துறை, வலுவான முறையில் புத்துயிர் பெற்றதாலும், தயாரிப்புத் துறையில் புதிய தொழிலகங்கள் தொடங்கும் வண்ணம் நல்ல முதலீட்டுச் சூழ்நிலை நிலவுவதாலும், மூன்றாம் நிலைத் துறையில் உயரிய வளர்ச்சி நிலவுவதாலும் தமிழ்நாடு, ஒரு புதிய வளர்ச்சிமிகு முன்னேற்றப் பாதையில் நடைபோடத் தொடங்கியுள்ளது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

## ஆண்டுத் திட்டம்

9. இந்த அரசு, 2001ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, வளர்ச்சிப் பணிகளில் செயலாக்கம் எவ்வாறு முற்றிலும் சீர்குலைந்திருந்தது என்பதை இம் மாமன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இம்மாநிலத்தைக் கடுமையாகப் பாதித்து, தீவிரமாகப் பல்கிப் பெருகிய நிதிநெருக்கடி நிலை, இந்தச் சீர்கேட்டிலிருந்து மாநிலம் மீள்வதைச் சாத்தியமற்றதாக்கியது. தொடர்ச்சியாக ஏற்பட்ட வறட்சி நிலையும் அதை மேலும் சிக்கலாக்கியது. 'புத்தாயிரம் கால வளர்ச்சி இலக்குகள்' போன்ற முக்கியமான இலக்குகளை, எய்துவதற்கான திட்டமிட்ட வளர்ச்சிப் போக்கே முற்றிலும் பாதிக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டது. நிதி நெருக்கடிக்கு ஈடுகொடுக்கும் முதலீட்டுத் திறனை மாநிலம் கொண்டிருக்காததால், 2001-2002 ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு 6,040 கோடி ரூபாய், எவ்வாறு 5,200 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவு கூரலாம். மாநிலத்தை வேகமான வளர்ச்சிப் பாதையில் மீண்டும் கொண்டுவர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்தார்கள். பாதகமான பல சூழ்நிலைகள் நிலவிய போதிலும், இது நிறைவேற்றப்பட்டது. 2002-2007 ஆம் ஆண்டு கால அளவிற்கான பத்தாவது திட்ட ஒதுக்கீடு, 40,000 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது. அது, தமிழ்நாட்டை அனைத்து நிலைகளிலும் வளமிக்கதாக இட்டுச் செல்லும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நம்பிக்கையையும் உறுதியையும் பிரதிபலிக்கிறது. இது சாத்தியமற்றது என்று பலரும் ஐயப்பாடு தெரிவித்தனர். இந்த பின்னணியில்தான், 2004-2005 ஆம் ஆண்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு 8,001 கோடி ரூபாய், முற்றிலும் எய்தப்படும் என்று இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். வரவு–செலவுத் திட்டத்தின்போது அதிக அளவிற்கான திட்ட ஒதுக்கீடுகளை அறிவித்துவிட்டு, நடைமுறையில் அதை எய்த முடியாமல் இருக்கும் பல மாநிலங்களைப் போல் அல்லாமல், தமிழ்நாட்டில், நாங்கள் 2002–2003 ஆம் ஆண்டு முதற்கொண்டு, ஒவ்வோராண்டும் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கும்மேல், நடைமுறையில் விஞ்சியுள்ளதை உறுதி செய்துள்ளோம்.

10. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 30.11.2004 ஆம் நாளன்று, மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் நடத்திய கலந்தாய்வில், திட்ட இலக்குகளை எய்துவதில் கண்ட வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு, அதிகத் திட்ட

ஒதுக்கீட்டிற்கான வலுவான வாதங்களை முன்வைத்து, 2005-2006ஆம் ஆண்டிற்கு சாதனை இலக்காக, 9,100 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீட்டைப் பெற்றார். 2005–2006 ஆம் ஆண்டில் இந்த அதிக அளவிலான திட்ட ஒதுக்கீடு 9,100 கோடி ரூபாயை எய்தும் வகையில் 2005-2006 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தொண்ணூறாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் நிலவிய நெருக்கடிகளிலிருந்து மீண்டு, திட்டமிட்ட, ஒரு புதிய, வேகமான வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு முன்னேறி வருகிறது என்பது தெள்ளத் தெளிவு. ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு, 2001-2002 ஆம் ஆண்டு அளவைவிட 75 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்று 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் குறிப்பிடுகின்றன. இவ்வியத்தகு திருப்புமுனை நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் செயலாக்கத்திறன் ஆகியவற்றால் மட்டுமே சாத்தியமாயிற்று.

## பன்னிரண்டாவது நிதிக் குழு

11. திறமையோடு சிறப்பாகச் செயல்பட்டு வரும் மாநிலங்களுக்கான நிதி ஆதாரங்களைக் குறைத்து விட்டு, செயல்திறன் குறைந்த மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி ஆதாரங்களை அளிக்கும் போக்கு நிறுத்தப்பட வேண்டும் என்ற வலுவான கோரிக்கையை, பன்னிரண்டாவது நிதிக் குழு, 2004 பிப்ரவரியில், தமிழ்நாட்டிற்கு வருகை தந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் அந்தக் குழுவின் முன் வைத்தார்கள் என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த வலுவான வாதத்தை கருதிப்பார்த்து, ஏற்றுக்கொண்ட, புகழ்பெற்ற பொருளாதார வல்லுநரான டாக்டர் சி. ரங்கராஜன் தலைமையிலான பன்னிரண்டாவது நிதிக் குழு, அதனுடைய பரிந்துரைகளை அளித்துள்ளது. இதனை, மத்திய அரசு ஏற்றுக் கொண்டு, அண்மையில், மத்திய வரவு–செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ளது. பதினொன்றாவது நிதிக் குழு, மத்திய வரிகளின் தொகுப்பில் மாநிலங்களுக்கான பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கை எவ்வாறு, 6.637 சதவிகிதத்திலிருந்து பெருமளவிற்கு, அதாவது 18.86 சதவிகிதம் குறைத்து, 5.385 சதவிகிதமாக நிர்ணயித்தது என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். முந்தைய அரசு, மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தபோதும், இந்த நிதி நிலைமையில் ஏற்பட்ட பேரிடரைத் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டது. மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளபடியான, நிதிப் பகிர்வுக் கொள்கை குறித்த பன்னிரெண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளிலிருந்து, 2005-2010ஆம் ஆண்டுக் கால அளவில், மத்திய வரிகளில் பிரித்துக் கொடுக்கத் தக்க தொகுப்பில், தமிழ்நாட்டின் பங்கு, 5.305 சதவிகிதமாக இருக்கும் என்பது தெரியவருகிறது. இது, முந்தைய அளவைவிட சற்று குறைவே என்றாலும், முன்னர் நாம் அஞ்சியபடி, பெருமளவிற்குக் குறையவில்லை. இவ்வாறு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டை மற்றுமொரு கண்கூடான நிதி இடர்பாட்டிலிருந்து காப்பாற்றியுள்ளார்கள்.

12. மாநிலங்களுக்குகிடையேயான நிதிப் பகிர்வுமுறை தற்போது பின்வரும் கோட்பாட்டின்படி அமைகிறது:

- மாநிலத்தின் நபர்வாரி வருமானத்திற்கும் அதிகபட்ச நபர்வாரி வருவானத்திற்கும் இடையான வித்தியாசத்தின் அடிப் படையில் 50 சதவிகிதம்.
- மக்கள் தொகைக்கு 25 சதவிகிதம்.
- புவியியல் பரப்பளவின் அடிப்படையில் 10 சதவிகிதம்.
- வரி விதிப்பு அடிப்படையில் 7.5 சதவிகிதம்.
- நிதி பொறுப்புணர்வின் அடிப்படையில் 7.5 சதவிகிதம்.

13. மத்திய வரிகளில் பகிர்ந்தளிக்கத்தக்க தொகுப்பில் அனைத்து மாநிலங்களுக்கான மொத்தப் பங்கினை 29.5 சதவிகிதத்திலிருந்து, 30.5 சதவிகிதமாக உயர்த்த பன்னிரண்டாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. இவ்வரசு இதனை, 29.5 சதவிகிதத்திலிருந்து, 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமெனக் கோரியிருந்தது. இவ்வாறாக, பன்னிரண்டாவது நிதிக் குழு பரிந்துரைத்திருக்கும் இந்த உயர்வு, ஏமாற்றமளிப்பதாக உள்ளது. ஆனாலும், இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படக் கூடிய இழப்புகளைச் சரிசெய்யவும், மறுவாழ்வு அளிக்கவும் ஆகக் கூடிய செலவுகளுக்கான மானியத்தை உயர்த்தியும், உள்ளாட்சி மன்றங்களுக்கான மானியங்களை உயர்த்தியும், சாலைகள், கட்டடங்களின் பராமரிப்பிற்கான மானியங்களுக்கு வகை செய்தும், இந்த பன்னிரண்டாவது நிதிக் குழு, அளித்துள்ள

பாராட்டத்தக்க பரிந்துரைகள் ஆறுதல் அளிப்பனவாக உள்ளன. இவை, வரவேற்கத்தக்க நடவடிக்கைகள் ஆகும்.

14. பன்னிரண்டாம் நிதிக்குழுவின் பரிந்துரைகளில் தமிழ்நாடு போன்ற மாநிலங்களை விட்டுவிட்டு, பற்றாக்குறை மானியமாக 15 மாநிலங்களுக்கு மட்டும் கணிசமான அளவு மானியம் வழங்கியிருப்பது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் தங்களது அரிதான நிதி ஆதாரங்களைக் கொண்டு நல்ல வளர்ச்சிகளைக் கண்டுள்ள தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்களை, ஒதுக்கித் தள்ளிவிட்டு, குறிப்பிட்ட சில மாநிலங்களுக்கு மட்டும் இத்துறைகளின் மேம்பாட்டிற்காக பெருமளவில் மானியங்களை பன்னிரண்டாம் நிதிக்குழு பரிந்துரைத்திருப்பது மீண்டும் ஏமாற்றமளிக்கும் ஒரு போக்காகும். இந்தத் துறைகளில், அனைத்து மாநில அரசுகளும், கணிசமான அளவிற்கு இன்னும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஒருசில மாநிலங்களுக்கு இந்த நிதிகளை அளிக்க மறுப்பதானது, இத்தகைய மாநிலங்களுக்கு அளிக்கப்படும் ஒரு தண்டனையாகவே அமைகிறது. குறிப்பிட்ட தேவைகளுக்கான மானியங்களில் தமிழ்நாட்டிற்களிக்கப்படும் பங்கு ஏமாற்றமளிப்பதாக உள்ளது. தேசிய நலனைக் கருத்திற்கொண்டு, பன்னிரண்டாவது நிதிக்குழு இந்த நிதியாதாரங்களைச் சமமாகவும் நியாயமாகவும் பகிர்ந்தளித்திருக்க வேண்டும்.

15. மாநிலங்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்க வகை செய்யும், பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி, 31.3.2004 வரை பெறப்பட்டு, 31.3.2005 ஆம் நாள் நிலவரப்படி, மத்திய அரசுக்கு, மாநில அரசுகள் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ள கடன் நிலுவைகள் அனைத்தும், ஒரு புதிய கடனாகத் தொகுக்கப்பட்டு, ஆண்டொன்றுக்கு 7.5 சதவிகித வட்டியுடன், 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்த நிவாரணம், நிதிநிலை பற்றிய பொறுப்புடைமைச் சட்டத்தைப் பின்பற்றும் மாநிலங்களுக்கு மட்டுமே என்ற நிபந்தனைக்கு உட்பட்டதாகும். வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையை ஒவ்வோர் ஆண்டும் குறைத்து, நிதிப்பற்றாக்குறையை 2004-2005ஆம் ஆண்டு நிலையைப் பராமரிப்பதோடு இணைந்த கடன் தள்ளுபடித் திட்டம் ஒன்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்கவேண்டும் என்ற நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் வலுவான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையைக் குறைப்பது மற்றும் நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக புதிய கடன்களைக் கட்டுப்படுத்துவதுமான கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிய வேண்டும்.

16. மொத்தத்தில், இந்தப் பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகள், பின்தங்கிய மாநிலங்கள் என்று சொல்லப் படுகின்றவற்றுக்கு அதிக நிதிகளை அளிக்கும் வாலாயமான பழைய போக்கினைத் தவிர்த்து, நிதி ஆதாரப் பகிர்வுகளைத் தீர்மானிப்பதில் திறமையையும் நல்லாளுமையையும் கொண்ட மாநிலங்களை ஊக்குவிப்பதில் அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

**சுனாமி நிவாரண நடவடிக்கைகள்**

17. 2004ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாளன்று ''சுனாமி'' ஆட்கொல்லிப் பேரலைகள், எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி தமிழ்நாட்டுக் கடற்கரையோரப் பகுதிகளைத் தாக்கின. இது முன் எப்போதும் கண்டிராத வகையிலான பேரிடராகும். சுமார் 8,018 நபர்களின் உயிர்களைப் பறித்து, இலட்சக் கணக்கான மக்களை உறைவிடமிழக்கச் செய்து, கடற்கரைப் பகுதிகளிலுள்ள மீனவர்கள் மற்றும் ஏனைய மக்களின் வாழ்வாதாரங்களைச் சேதப்படுத்தி, சிதைத்த இப்பேரலைகள் கடற்கரையோரம் நெடுகிலும் அளப்பரிய பேரழிவை ஏற்படுத்தியுள்ளன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி, நிவாரணப் பணிகளையும் தொடங்குவதற்காக, நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26 அன்றே சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்தார். நமது தலைவி 27.12.2004 அன்று மீண்டும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்றதோடு, கடலூர், நாகப்பட்டினம், நாகர்கோவில் ஆகிய இடங்களில், 30.12.2004 அன்று உடனடி நிவாரணத் தொகுப்பு உதவிகளையும் வழங்கினார்.

18. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணப் பணிகளை மூன்று கட்டங்களாக மேற்கொண்டார். காணாமல் போனவர்களைத் தேடுதல், மீட்புப் பணிகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்டோரை பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்தல், சடலங்களை எரிக்க/புதைக்க ஏற்பாடுகள் செய்தல் மற்றும் நிவாரண முகாம்களை அமைத்தல் ஆகியன முதல் கட்டப்பணியில் அடங்கும். உடனடி நிவாரண உதவி அளிப்பது இரண்டாம்

கட்டப் பணியாகும். நிரந்தர மறுவாழ்வு அளிப்பது மூன்றாம் கட்டப் பணியாகும். முதல் இரண்டு கட்டப்பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்ட பின், தற்போது நாம் நிரந்தர மறுவாழ்வு அளிக்கும் மூன்றாம் கட்டப் பணியைத் தொடங்கியுள்ளோம். நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு, நிவாரணம் மற்றும் பாதுகாப்பு உதவிகளை அளிக்கும் செயல்திறன் கொண்டதாக ஒட்டுமொத்த நிருவாக இயந்திரத்தை முடுக்கி விட்டவிதம், உலக அளவில் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. மாநிலம் முழுவதுமுள்ள துப்புரவுப் பணியாளர்களைத் திரட்டி, இறந்தோரின் சடலங்களை மீட்டு, அடையாளம் கண்டு, பின் அச்சடலங்களைப் புதைப்பதற்கு அல்லது எரியூட்டுவதற்கான பணிகளைத் திறம்பட மேற்கொண்டதன்மூலம் தொற்று நோய் பரவும் அபாயம் தவிர்க்கப்பட்டது. தொற்று நோய் பரவும் அபாயத்தைத் தவிர்த்திட, மருத்துவர்களும் பொதுச் சுகாதாரப் பணியாளர்களும் விரைந்து செயலாற்றினார்கள். இலட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு உணவு, ஆடைகள் மற்றும் இருப்பிட வசதிகள் அளிக்கப்பட்டன.

19. பேரழிவு மற்றும் சேதங்களை விவரித்து, நிவாரணம் வழங்குதல் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக, மத்திய அரசிடமிருந்து 4,800 கோடி ரூபாய் நிதியுதவி கோரி, இந்த அரசு விரிவான கோரிக்கை மனு ஒன்றை அளித்தது. இத்துடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 5,000 கோடி ரூபாய் செலவில், கடலோர பசுமைத் தடுப்புகள், மாங்குரோவ் காடுகள், கருங்கற்களிலான கடற் தடுப்புச் சுவர்கள் மற்றும் கான்கிரீட் கடற்தடுப்புச் சுவர்கள் ஆகியவற்றை அமைப்பது உள்ளடக்கிய கடலோரப் பாதுகாப்புத் திட்டமொன்றைச் செயற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார். இதுவரையில், மத்திய அரசு, 31.1.2005 ஆம் நாளிட்ட அனுமதி ஆணை ஒன்றின் மூலமாகவும் 24.2.2005 ஆம் நாளிட்ட மற்றொரு ஆணையின் மூலமாகவும், 1,726.72 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. முன்பணமாக 250 கோடி ரூபாய் வழங்கப்பட்டதைத் தவிர, இதுவரையிலும் மாநில அரசுக்கு நிதி ஏதும் விடுவிக்கப்படவில்லை. நிரந்தர மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக தேசிய இயற்கைச் சீற்றங்கள் குறித்த எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட நிதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டுமென, இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்துகிறது. மீனவர்களுக்கு நிரந்தர மறுவாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள, நூறு சதவிகித உதவித் தொகை வழங்கவேண்டும் என்றும் மாநில அரசுக்கு நேரடியாக நிதிகளை விடுவிக்க வேண்டும் என்றும் இந்த அரசு, மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. மேலும், சுனாமி பேரழிவினால் இழந்துபோன சொத்துக்களை மீள உருவாக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக, கூடுதல் நிதி வழங்க வேண்டுமெனவும் இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்துகிறது. மீனவர்கள், வணிக வங்கிகளுக்கும், கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிகள் அனைத்தையும் தள்ளுபடி செய்து மத்திய அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

20. தற்காலிக நிவாரணப் பணிகளுக்காகவும், நிரந்தர மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காகவும், இந்த அரசு, இதுவரையிலும், 895.18 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. நிவாரண உதவி அனைத்தும் மாநில அரசு மூலமாகவே வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் மத்திய அரசுக்குத் தெளிவுபடக் கூறியுள்ளார். கொள்கைப்பூர்வமான இந்த நிலைப்பாடு, பரவலாக அனைவராலும் வரவேற்கப்பட்டுள்ளது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், புதிய நிலையான வீடுகள் கட்டுதல், குறிப்பாக, மீனவர்களுக்கு வாழ்வாதாரங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேதமடைந்த கட்டமைப்பு வசதிகளை மீண்டும் உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கிய, நிவாரணம் மற்றும் நிரந்த மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்காக சிறப்பு உதவி வழங்கவேண்டும் என்று ஆசிய வளர்ச்சி வங்கியையும் உலக வங்கியையும் நாம் அணுகியுள்ளோம். அரசு சாரா அமைப்புகள், தன்னார்வக் குழுமங்கள் மற்றும் நிறுவன அமைப்புகள் ஆகியன நிவாரணப் பணிகளுக்குப் பேராதரவு அளித்து வருகின்றன. நிரந்தர மறுவாழ்வு நடவடிக்கைகளில் இந்த அமைப்புகள் தொடர்ந்து பங்குபெறுவதற்காக, நமது அரசு, தெளிவான திட்டமொன்றை வகுத்துள்ளது.

21. மீனவர்களுக்கு நிரந்தர மறு வாழ்வளிப்பது தொடர்பான பிரச்சினைகளை, பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். மீனவர்களுக்கு வாழ்வாதாரங்களை வழங்கும் பணி, தற்போது, முழுவீச்சில் நடைபெற்றுவருகிறது. 2005 ஏப்ரல் திங்கள் இறுதிக்கு முன்னர் இதில் அதிகபட்ச முன்னேற்றம் எய்தப்படும். பாதிக்கப்பட்ட 3 இலட்சம் குடும்பங்களுக்கு, 2005, பிப்ரவரி திங்கள் தொடங்கி,

மாதமொன்றுக்கு குடும்பம் ஒன்றிற்கு 1,526 ரூபாய் வீதம், மொத்தம் 137 கோடி ரூபாய் தொகுப்பு உதவி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இந்த உதவி, 2005 ஏப்ரல் திங்கள் கடைசிவரையில் தொடரும்.

### நாட்டிலேயே மிகச் சிறந்த காவல்படை

22. 2005-2006 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில், காவல் துறைக்கு 1339.33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை செயல்பாட்டின் ஒவ்வொரு அம்சத்திலும் தனிக் கவனம் செலுத்தி, தமிழ்நாடு காவல் படை, நாட்டிலேயே மிகச் சிறந்த படை என்ற நிலையை உருவாக்கிட, பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். பயங்கரக் காட்டுக் கொள்ளையன் வீரப்பனையும் அவனது கும்பலையும் ஒழித்துக் கட்டியதானது, நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையின் கீழ், தமிழ்நாடு காவல் படை, தொழில் ரீதியான அணுகுமுறை, வீரம், திறமை மற்றும் சாதனை ஆகியவற்றில் தன்னிகரற்ற ஒரு படையாக விளங்குகிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.



### நவீனமயமாகும் காவல்துறை

23. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தில், அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். இத்திட்டம், 427.59 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும், கணினிகள், வீடியோ கேமிராக்கள், நவீன ஆயுதங்கள், உயர் தொழில்நுட்பத் தகவல் தொடர்பு சாதனங்கள், நிகரி (FAX), போட்டோ படிபெருக்கிகள் (Photo Copier) முதலியன போன்ற அலுவலகப் பயன்பாட்டுச் சாதனங்கள் வழங்கப்பட்டு, அவை முழுமையாக நவீன மயமாக்கப்பட்டுள்ளன. இதன் பயனாக, காவல் துறை, தற்போது, குற்றங்களைக் கண்டு பிடித்து, சட்டம்–ஒழுங்கைப் பேணிக்காத்து அமைதியை நிலை நாட்டிடத் தேவையான அனைத்து நவீன வசதிகளையும் பெற்றுள்ளது. 961 பெண் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 10,737 காவலர் பணி இடங்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்து நியமனம் செய்யும் பணி 2004-2005 ஆம் ஆண்டில் முடிவடைந்துவிட்டது. காவலர் பணியிடங்களில் மேலும், உள்ள 2,219 காலி இடங்களை நிரப்புவதற்கான ஆட்தேர்வுப் பணி தொடங்கிவிட்டது. இது, காவல் துறையை மேலும் வலுப்படுத்த பெரிதும் உதவும்.

24. அனைத்து வசதிகளும் கொண்ட காவலர் பயிற்சிக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டியது மிக அவசியம் என நீண்ட காலமாகவே உணரப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள், 48 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்கள். வண்டலூருக்கு அருகில் ஒணமாஞ்சேரி கிராமத்தில் அமைந்துள்ள இக்கழகம், தமிழ்நாடு காவல் துறை, திறமை, கட்டுப்பாடு மற்றும் திறம்பட்ட செயல்பாடு ஆகியவற்றில் எப்போதும் முன்னிலை வகிக்கும் வகையில், நவீன வசதிகளுடன் வடிவமைக்கப் பட்டுள்ளது.

25. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் காவல் படையில் மகளிரைச் சேர்த்துக் கொள்வதில் எப்போதும் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. இதுவரையிலும், 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. நாட்டிலேயே முதலாவதாக, அனைத்து மகளிர் படைப் பிரிவையும், அனைத்து மகளிர் அதிரடிப்படையையும் கொண்டிருக்கும் ஒரே மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. இதனால் பொது மக்கள், குறிப்பாக, மகளிர் தங்களுடைய குறைகள் திறம்படக்

களையப்படும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் காவல் துறையினரை அணுகலாம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.



26. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாடு காவல் படையினருக்கு மிகச் சிறந்த வசதிகள் செய்து கொடுக்கப்படுவதில் தனி அக்கறை காட்டி வருகிறார்கள். 2001-2004 ஆண்டுகளில் 6,000 புதிய வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில் மேலும் தீவிரப்படுத்தப்படும். காவல் படையினரின் ஒழுக்க நெறி எப்போதும் உயர்நிலையில் இருக்கும் வகையில், குறை தீர்க்கும் அமைப்பு பெரிதும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

27. காவல் துறைத் தலைமை இயக்குநர் மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளின் அலுவலகங்களுக்காக, தரமணியில், 30 கோடி ரூபாய் செலவில் புதிய அலுவலக வளாகம் ஒன்று கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்துள்ளார். இது, நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் துணிச்சல் மற்றும் ஆற்றல் மிகுந்த தலைமையின் கீழ், தமிழ்நாடு காவல் துறை, புதிய சிகரங்களை எட்டியுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

**சிறைச்சாலைகள்**

28. சிறைவாசிகள் விரைவில் திருந்தி, மறுவாழ்வு பெற்று, மீண்டும் நவீன சமுதாய நீரோட்டத்தில் கலந்து வாழ்வதற்கு தகுந்த உதவிகளை அரசு அளித்து வருகிறது. சிறைவாசிகளின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி, எதிர்காலத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடுவதை முற்றிலுமாகக் கைவிடுவதற்கான, பல புதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு முற்போக்கு நடவடிக்கையாக, 10 கிளைச் சிறைகள் / தனி கிளைச் சிறைகள், முற்றிலும் பெண்களாலேயே நிருவகிக்கப்படும் மகளிர் கிளைச் சிறைகளாக / தனி கிளைச் சிறைகளாக மாற்றப்பட்டுள்ளன. மாநிலத்தில், முதல் முறையாக, கைதிகளின் காவல் வைப்பு, தனித்தன்மை வாய்ந்த தொலைக்காட்சி வழி கலந்துரையாடல் ஏற்பாட்டின் மூலம் (video conferencing system) நீட்டிக்கப்பட்டு வருகிறது. இந்த ஏற்பாட்டின் கீழ் 62 நீதிமன்றங்களையும், 16 சிறைச் சாலைகளையும் இணைக்கும் இத்திட்டம் 8.61 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுவருகிறது. 2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் சிறைத் துறைக்கு 91.41 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத் துறைக்கு 96.08 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலை நிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். இதற்காக, 11.78 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. புழலில் புதிதாக சிறைச்சாலை அமைக்கும் பணி நடந்தேறி வருகிறது. விரைவில் இப்பணி முடிவடையும்.

**தீத்தடுப்பும் – மீட்புப் பணிகளும்**

29. தீத்தடுப்பு–மீட்புப்பணித் துறையை நவீனப்படுத்தி, தீத்தடுப்பு மற்றும் மீட்புப் பணிகளை மேலும் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கு

ஏற்றவாறு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கும் நோக்குடன், இப் பணிகள் குறித்த அனைத்து அம்சங்களையும் பரிசீலிப்பதற்காக, ஓய்வு பெற்ற நீதிபதி திரு. கே.எஸ். பக்தவச்சலம் தலைமையில் தீத்தடுப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையம் ஒன்று அமைக்கப் பட்டது. இந்த ஆணையம், அதன் அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளது. இதன் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பழைய தீயணைப்புச் சாதனங்களுக்குப் பதிலாக, புதிய, நவீன சாதனங்களை வாங்குவதற்கான பெருந்திட்ட மொன்றைச் செயற்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. பேரிடர்கள் ஏற்படும்போது, தீயணைப்புப் படை வீரர்கள், தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு ஏற்ற உயரிய திறனைப் பெற்றிருக்கின்ற வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும், சுமார் 20 அதிரடிப்படை வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் தீவிரப் பயிற்சி பெற்று, இத்துறைக்கு அரியதொரு சொத்தாக விளங்கி வருகிறார்கள். கும்பகோணம் பள்ளியில் ஏற்பட்ட தீவிபத்து துயரச் சம்பவத்தைக் கருத்திற்கொண்டு, பயிற்சி, தீத்தடுப்பு மாதிரி செயற்பயிற்சிகள் அளித்தல், தீ விபத்து குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகளுக்கு, தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துறைக்கு 2004-2005 ஆம் ஆண்டுத் திருத்த மதிப்பீட்டில் 61.64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தம் 68.55 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### நீதித் துறைக்கு கூடுதல் நிதி

30. மதுரையில் உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற தென் தமிழ்நாட்டு மக்களின் நீண்டநாள் கனவு 2004 ஜூலையில் நிறைவேறியுள்ளது. இந்த அரசு, 65.45 கோடி ரூபாய் செலவில் இதற்கான வளாகத்தைக் கட்டி முடித்துள்ளது. நீதிமன்றக் கட்டடங்களைப் பராமரிப்பதற்கென ஒரு சிறப்புத் திட்டம் 7.58 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தையும், ஏனைய நீதிமன்றங்களையும் கணினிமயமாக்குவதற்குத் தனி முக்கியத்துவம் அளிப்பதுடன், தேவையான அனைத்துக் கட்டமைப்பு மற்றும் பிற வசதிகளையும், அரசு செய்துவருகிறது. திண்டுக்கல் மாவட்டம், நத்தத்தில் புதிதாக மாவட்ட முன்சிப் மற்றும் நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதி மன்றம் ஒன்று ஏற்படுத்தப்படும். நீதி நிருவாகத்திற்காக 2004-2005 ஆம் ஆண்டுத் திருத்த மதிப்பீட்டில் 178.88 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் அது 193.79 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

31. நீதித் துறையின் திறம்பட்ட செயலாக்கத்திற்கு வேண்டிய சிறந்த, திறமையான வழக்குரைஞர்களை உருவாக்க, சட்டக் கல்லூரிகளுக்கும், சட்டப் பல்கலைக்கழகத்திற்கும் தேவையான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் அரசு வழங்கி வருகிறது. அரசு சட்டக் கல்லூரிகளில் அதிகரித்துவரும் மாணவர்களுக்குத் தேவையான இடவசதி செய்து கொடுக்கும் நோக்குடன், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரிலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக வளாகத்தில், சிறப்பு சட்ட கல்வி மையத்திற்காக 1.30 கோடி ரூபாய் செலவில் தனிக் கட்டடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக சட்டக் கல்லூரி கட்டுவதற்காக, அப்பல்கலைக் கழகத்திற்கு 10 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, அங்கு கட்டுமானப் பணிகள் நடந்தேறி வருகின்றன. 2005-2006 ஆம் ஆண்டில் 1.18 கோடி ரூபாய் செலவில், திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி மாணவிகளுக்காக, மாணவியர் இல்லம் ஒன்று கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### புத்துயிர் பெற்ற முதன்மைத் துறையை நோக்கி வேளாண்மை


32. என்னுடைய சென்ற ஆண்டு வரவு–செலவுத் திட்ட உரையில், முதன்மைத் துறைக்கு, குறிப்பாக வேளாண்மைத் துறைக்குப் புத்துயிர் அளிப்பதற்கான இந்த அரசின் புதிய உத்திகள் குறித்து கோடிட்டுக் காட்டியிருந்தேன். இந்த உத்திகளைச் செயல்படுத்தியதன் பயனாக, முதன்மைத் துறை புத்துயிர் பெறத் தொடங்கியுள்ளது. நடப்பு ஆண்டில், முதன்மைத் துறை, கடந்த ஆண்டில் இருந்ததைவிட, நடப்பு விலைகளில் 16 சதவிகித வளர்ச்சி அடையும் என்பதை அறிந்து மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். மொத்தத்தில், நடப்பாண்டில் உணவுத் தானிய உற்பத்தி, 90 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவை விஞ்சும். இவ்வாறு வேளாண்மை புத்துயிர் பெற்றிருப்பதுகண்டு ஊரகப் பகுதி மக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

33. இந்த அரசு பின்பற்றிவரும் உத்திகளில், மாற்றுப் பயிர்த் திட்டம், ஒட்டுமொத்தத் தரிசு நில

மேம்பாட்டின் மூலம் மேலும் அதிக நிலங்களைச் சாகுபடியின் கீழ் கொண்டுவருதல், நீரைத் திறம்படப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், துல்லிய பண்ணை முறையைப் பின்பற்றுதல், புதிய தொழில்நுட்ப உத்திகளைப் பரப்புதல் மற்றும் பின்பற்றுதல், விவசாயிகளுக்கு, அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க சிறப்பான அங்காடி வசதி, வேலைவாய்ப்பைப் பெருக்க பண்ணை சாரா ஊரகத் துறையில் அதிக கவனம் செலுத்துதல், விவசாயிகளுக்குச் சிறப்பாகச் சேவையாற்ற, கூட்டுறவுக் கடன் வசதி அமைப்புகளுக்குப் புத்துயிர் ஊட்டுதல் ஆகியவை அடங்கும். இவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் பல்வேறு கூறுகளின் கீழ் விரைவான முன்னேற்றம் கண்டுள்ளோம்.

## மாற்றுப் பயிர்த் திட்டம்

34. மாற்றுப் பயிர்த் திட்டம், நல்ல உத்வேகத்தைப் பெற்றுள்ளது. தக்க விலையும், உறுதியான விற்பனை வாய்ப்புகளும் கிட்டுமாயின், குறைவான நீரே தேவைப்படும் மாற்றுப் பயிர்களைப்




பயிரிட விவசாயிகள் தயாராக உள்ளனர். இனிப்புச் சோளம், சர்க்கரைக் கிழங்கு, காட்டா மணக்கு போன்ற குறைவான நீரில் விளையக்கூடிய பயிர்களைப் பயிரிடுவதற்கான மாற்றுப் பயிர் உத்திகளை, நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் வகுத்துள்ளார்கள். சர்க்கரை ஆலைகளிலும் உயிரி எரிபொருள் தயாரிப்புத் தொழிற்சாலைகளிலும், இந்த விளை பொருள்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான உறுதியான இணைப்பு வசதியுடனேயே இந்தப் பயிர்கள் பயிரிடப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. ஒப்பந்தப் பண்ணை ஏற்பாடுகளால், சிறந்த தொழில்நுட்பங்கள் பின்பற்றப்பட்டு, நிலையான விற்பனை வாய்ப்புகள் உருவாகும். தோட்டக் கலைக்கு முக்கியத்துவம் அளிப்பதும், மாற்றுப்பயிர் திட்டத்தின் ஓர் அங்கமே. 2011-2012 ஆம் ஆண்டுக்குள் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியை இருமடங்காக்குவதே நமது குறிக்கோளாகும். தோட்டக்கலை இயக்கத்தின் ஓர் அங்கமாக மாதிரி கிராமத் திட்டம் செயற்படுத்தப்பட்டு, தோட்டக்கலைப் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதன் பயனாக, அதிக அளவில் நீரைப் பயன்படுத்தி, குறைந்த மதிப்புள்ள பயிர்களைச் சாகுபடி செய்கின்ற நிலைமாறி, குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தி அதிக மதிப்புள்ள தோட்டக்கலை பயிர்களைச் சாகுபடி செய்யும் நிலை உருவாகி வருகிறது. இதற்கு மேலும் ஊக்கம் அளிக்கப்படும்.

35. நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்த ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், உழவர்கள் தங்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களைப் பசுமைச் சாகுபடியின் கீழ் கொண்டு வந்துள்ளனர். நடப்பாண்டில், இதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இத்திட்டம், 35 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். 1.5 இலட்சம் ஏக்கர் நிலங்களில், மர வகைகள் மற்றும் தீவனப் பயிர்கள், இச் சாகுபடியின் கீழ் கொண்டுவரப்படும்.

## துல்லியப் பண்ணைத் திட்டம்

36. பாசனத்திற்கு நபர்வாரி நீர் அளவு மிகக் குறைவாகவே இருப்பதாலும், தொடர்ந்து ஏற்பட்ட வறட்சியினால் உருவான நீர் நெருக்கடியினைக் கருத்தில் கொண்டும், இம்மாநிலத்தில் உழவர்கள் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை நாம் ஊக்குவிக்க வேண்டும். சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன முறை மூலம் இது பிரபலப்படுத்தப்படும். சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன முறையைப் பின்பற்றும் சிறு மற்றும் குறு உழவர்களுக்கு 50 சதவிகித உதவித் தொகை வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. பெரும் உழவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் 25 சதவிகித உதவித் தொகை தொடரும். இந்த மாநிலத் திட்டத்திற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. ஒரு முன்னோடி அடிப்படையில், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் இந்த அரசு தொடங்கிவைத்த துல்லியப் பண்ணைத் திட்டம், நன்கு செயல்பட்டுவருகிறது. 2005-2006 ஆம் ஆண்டில், 10 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் ஏனைய மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

37. வேளாண்மைப் பணியில் புதிய தொழில்நுட்ப உத்திகளைப் பின்பற்றுவது மிகவும்

இன்றியமையாத ஒன்றாகும். ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் அதிக உற்பத்தித் திறனை எய்தும் வகையில் முதன்மைப் பயிர்களுக்கான தனித் திட்டங்களை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் கேட்டுக்கொள்ளப்படும். தற்போது, 12 மாவட்டங்களில் உழவர் பயிற்சி மையங்கள் உள்ளன. வரும் ஆண்டில், மேலும் 11 மாவட்டங்களில், உழவர் பயிற்சி மையங்களை ஏற்படுத்த இந்த வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் சேர்க்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உழவர்கள் புதிய தொழில்நுட்ப உக்திகளையும், நடைமுறைகளையும் தெரிந்து கொள்ள, தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான ஒரு புதிய திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். விரிவாக்கப் பணிகள் உழவர்களுக்கு உடனுக்குடன் கிடைக்கச் செய்வதற்காக, வட்டார அளவிலான விரிவாக்க மையங்கள் மீண்டும் ஏற்படுத்தப்படும். இதனால் உழவர்கள் தங்களுக்குத் தேவையான தகவல் மற்றும் வசதிகளை வட்டார அளவிலேயே பெற்றுக்கொள்ள முடியும்.

### வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்

38. உழவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க, அவர்களுக்கு முறையான அடிப்படையில், புதிய அங்காடி வசதிகள் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டியது அவசியமாகிறது. இதன் காரணமாகத்தான், இந்த அரசு, 65.34 கோடி ரூபாய் செலவில், ஒசூர், ஊட்டி, தேனி ஆகிய இடங்களில், வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை ஏற்படுத்தியுள்ளது. 10.36 கோடி ரூபாய் செலவில், கடலூரில், முந்திரிக்கான புதிய வேளாண் ஏற்றுமதி மண்டலம் ஒன்றை இந்த அரசு ஏற்படுத்தும்.

39. 1.1.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள உலக வர்த்தக நிறுவனத்தின் விதிமுறைகளின் காரணமாக, துணித்தொழிலுக்கு உருவாகியுள்ள வளமான வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு, ஒப்பந்தப் பண்ணை அடிப்படையில், பருத்தி பயிரிடுவோரை, அதனைப் பயன்படுத்தும் ஆலைகளுடன் இணைப்பதற்கான முயற்சி தீவிரப்படுத்தப்படும். ஆதாயம் தரும் வேளாண்மை என்னும் அடிப்படையிலும், நுகர்வோரிடையே, குறிப்பாக, நகர்ப்புற அங்காடிகளில் நிலவும் விருப்ப உரிமையைக் கருத்திற்கொண்டும், உயிரிப் பண்ணைமுறை (Organic Farming), தற்போது முக்கியத்துவம் பெற்று வருகிறது. இந்த உயிரிப் பண்ணைமுறை, நகர்ப்புற அங்காடிகளை ஒட்டிய பகுதிகளில், முனைப்பாக ஊக்குவிக்கப்படும்.

### நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

40. நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கிவைத்த மழைநீர் சேகரிப்பு இயக்கத்தைச் செயல்படுத்தியதன் மூலம் கிடைத்துள்ள பயன்களை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த இயக்கம், பெரிய அளவிலான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டமாக விரிவுபடுத்தப்பட வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதன்படி, மாநிலம் முழுவதையும், சிறுசிறு நீர்வரத்துப் பகுதிகளாகப் பிரித்து, மழைநீர் சேகரிப்பு பணி மேற்கொள்ளப்படும். மண்ணின் ஈரத் தன்மையைக் காத்து வறட்சியிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் பண்ணைமுறையோடு சேர்ந்து தமிழ்நாட்டில் இந்தச் சிறிய நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஊரகப் பகுதிகளில் நிலையான பயனை அளிக்கும். மாநிலம் முழுவதும், 126 பெரிய அளவிலான நீர்வரத்துப் பகுதிகளாகவும், 19,206 சிறிய அளவிலான நீர்வரத்துப் பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இதுவரை, 20 ஆண்டுகளில், பல்வேறு திட்டங்களின் கீழ், இங்கும் அங்குமாக, 6,000 சிறிய அளவிலான நீர்வரத்துப் பகுதித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்னும் 66 இலட்சம் எக்டேர் பரப்பளவு நிலத்தை உள்ளடக்கிய 13,206 நீர்வரத்துப் பகுதித் திட்டப்



பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அனைத்து வளங்களையும் ஆதாரங்களையும் பயன்படுத்தி மக்களின் பங்கேற்புடன், இந்த நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் பெரிய அளவில், நிறைவேற்ற வேண்டியது முக்கியம் ஆகும்.

41. தற்போது, பல்வேறு திட்டங்களின் கீழ், ஓராண்டில், 300 சிறிய நீர்வரத்துப் பகுதித் திட்டப் பணிகளை மேற்கொள்வது மட்டுமே சாத்தியம் என்ற நிலை உள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில், புதிதாக 1000 சிறிய நீர்வரத்துப் பகுதித் திட்டப் பணிகளை மேற்கொள்ள இயலும் வகையில், இந்த நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுடன், அரசு சாரா மற்றும் தன்னார்வ அமைப்புகளையும் ஈடுபடுத்தி, பெரிய அளவில், நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள, நபார்டு நிதியுதவியுடன், ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும். மக்களின் முழுப் பங்கேற்புடன் செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம், சமுதாயத்திற்கு நிலையான பயன் கிடைப்பதை உறுதி செய்வதோடு, வேளாண்மைக்குப் பாதுகாப்பையும் அளிக்கும். 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வேளாண்மைக்கான மொத்த ஒதுக்கீடு 854.41 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### பாசனம்

42. நமது நாட்டில், நபர்வாரி நீரின் அளவு மிகக் குறைவாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. ஒரு சில ஆண்டுகளில், ஒரு சில வடிநிலப் பகுதிகளில், கடலில் சென்று கலக்கின்ற மிகக் குறைந்த அளவிலான நீரைத் தவிர, மற்றபடி, பாசனத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும் வகையில் கிடைக்கின்ற மேற்பரப்பு நீரின் அளவு மிகச் சொற்பமே என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில்தான், நதிகளை இணைக்கும் திட்டத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். குறிப்பாக, மகா நதியைக் குண்டாறுடன் இணைக்கும், தீபகற்ப நீர்க் கட்டமைப்புப் பணியை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். தென்னக மாநிலங்களின் வளர்ச்சிக்குப் புதிய உத்வேகத்தை அளிக்கக்கூடிய இந்த முக்கியமான திட்டம் குறித்து, மத்திய அரசு நடவடிக்கை எதுவும் எடுக்காதது மிகவும் துரதிருஷ்டவசமானதாகும். நாட்டின் ஏனைய பகுதிகளில் இத்தகைய பன் மாநிலத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவரும்போது, தென்னகத்திற்கு, அதிக பயன் அளிக்கக்கூடிய இத்தகைய ஒரு பெருந்திட்டம் தள்ளிப்போடப்பட்டு வருவது ஏன் எனத் தெரியவில்லை. இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்துவதற்கு ஏதுவாக இதனை விரைவுத் திட்டங்களின் கீழ்க் கொண்டுவர வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்துவதில் அனைத்து உறுப்பினர்களும் ஒன்று சேருவர் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

## காவிரி ஆற்றில் முறையான நீர்வரத்தை உறுதி செய்யத் தக்கதொரு திட்டம்

43. கருநாடகா போதிய அளவு தண்ணீரைத் திறந்துவிடாததால், 2004-2005ஆம் ஆண்டில்கூட காவிரி வடிநிலப்பகுதியில் குறுவையைப் பயிரிட முடியவில்லை என்பதை இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். அம்மாநில நீர்த் தேக்கங்களின் உபரி நீர் மட்டுமே தமிழ்நாட்டை வந்தடைய அனுமதிக்கப்பட்டது. நல்வாய்ப்பாக, நல்ல பருவமழை பெய்ததால், சம்பா பயிர்ச் சாகுபடியை மேற்கொள்ள முடிந்தது. அப்படி இருந்தும், காவிரி நீர்த் தகராறு நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி, கருநாடகம் வழங்காத தண்ணீரின் மொத்தப் பற்றாக்குறை அளவு, 28.2.2005 நிலவரப்படி 39.62 டி.எம்.சி கன அடி ஆகும். உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளையொத்த அதிகாரமுடையவை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள 'நடுவர்மன்ற ஆணைகளை' நிறைவேற்ற, போதிய அதிகாரங்களைக் கொண்ட முறையான ஏற்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. காவிரி நதிநீர்த் தகராறு நடுவர் மன்றம், விரிவானதொரு திட்டத்தை வகுத்தளித்து, நடுவர் மன்ற ஆணைகள் செயல்படுத்தப்படும்போது, இந்தத் திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதையும் தெளிவாக வரையறுத்துக்கூற வேண்டும் என்று இவ்வரசு காவிரி நதிநீர்த் தகராறு நடுவர் மன்றத்தில் நீர் ஒதுக்கீடு குறித்து நடைபெற்ற இறுதியான வாதத்தின்போது வலியுறுத்தியுள்ளது. காவிரி வடிநிலப் பகுதியில் ஒவ்வோர் ஆண்டும் குறுவை மற்றும் சம்பாப் பயிர்களைச் சாகுபடி செய்ய ஏதுவாக, காவிரி ஆற்றில் முறையான நீர் வரத்தை உறுதி செய்ய தக்கதொரு திட்டத்தை வகுத்தளிக்க வேண்டிய கடமை மத்திய அரசுக்கு உள்ளது.

44. தற்போது, கிடைக்கக்கூடிய நீராதாரங் களைச் சிறந்தமுறையில் நிருவகிப்பதை உறுதி செய்வதற்குரிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையின் கீழ்தான், தமிழ்நாட்டில் நீராதார ஒருங்கிணைப்புத் திட்டம்–I ஐச் செயல்படுத்த உலக வங்கி ஒப்புதல் அளித்தது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். கிடைக்கக்கூடிய நீராதாரங்களை ஒருங்கிணைத்து, நிருவகிக்க, இத்திட்டத்தின் கீழ் 17 பெரிய அளவிலான வடி நிலப்பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. நவீனப் படுத்துதல், திறன்மேம்பாடு, சிறந்த மேலாண்மை நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றின் மூலம், நீராதாரங்களைச் சிறந்த முறையில் நிருவகிக்கும் இந்தக் கோட்பாடு, திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி வடிநிலப் பகுதியில் அநுமாான் நதி துணை வடிநிலப் பகுதியில் செயற்படுத்தப்பட்டது. இந்த முன்னோடித் திட்டத்தின் பயன்களின் அடிப்படையில், நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம்–II–க்கு விரைவில் ஒப்புதலளிக்குமாறு உலக வங்கி கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. உலக வங்கியிடமிருந்து அனுமதியை எதிர்பார்த்து, இத்திட்டத்தை உடனடியாக மேற்கொண்டு, படிப்படியாகச் செயல்படுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். 20 கோடி ரூபாய் செலவில் பாலாறு வடிநிலத்தில் இத்திட்டத்தைச் செயற்படுத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**பாசனத் திட்டங்கள்**

45. பாசனத் திட்டங்களை மேற்கொள்வதற் காக, 'நபார்டு' நிறுவனத்திடமிருந்து நிதியைப் பெற, இவ்வரசு எடுத்துள்ள தனி முயற்சிகளை இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். நபார்டு நிறுவனத்திடமிருந்து நிதி உதவியைப் பெற்று, 209.07 கோடி ரூபாய் செலவில், அத்தகைய 28 பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மொத்தம் 42.38 கோடி ரூபாய் செலவாகக்கூடிய மேலும் 16 பாசனத் திட்டங்களுக்கு நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இவை தற்போது செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

46. பாசன ஏரிகளை ஆழப்படுத்தி, நவீனமாக்க வேண்டியதன் அவசியத்தை இம்மன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். பொதுப்பணித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பாசன ஏரிகளை ஆழப்படுத்தி, செம்மையுடன் சீரமைப்பதற்கான புதிய திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்காக, 2005-2006ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 62.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஏரிகளை முறையாகவும், முழுமையாகவும் ஆழப்படுத்த, மண் அகற்றும் இயந்திரம் பயன்படுத்தப்படும். ஒவ்வொரு ஏரியும் முறையான ஒரு நீர்த்தேக்கமாகப் பயன்படும் வகையில், முழுமையானச் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். 62,500 ஏக்கர் பண்ணை நிலங்கள் பயனடையும் இந்தப் புதிய முயற்சிகளை இம்மன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பர் என நம்புகிறேன்.

**கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்களுக்குப் புத்துயிர்**

47. கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்கள், பண்ணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உழவர்களுக்கும், பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள, ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து நபர்களுக்கும் கடன் வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. 2001 மே திங்களில், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது, எதிர்கொண்ட கடுமையான பிரச்சினைகளில், கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்களின் மிக மோசமான நிதிநிலையும் ஒன்றாகும். அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சி, இந்த நிறுவனங்கள் எதிர்கொண்ட நிதிப் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கியது. கூட்டுறவுக் கடன்வசதி நிறுவனங்கள் புத்துயிர்பெற இயலும் வகையில், அவற்றிற்குக் கூடுதல் நிதிகளை வழங்க இந்த அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்தப் பெருமுயற்சியின் அடிப்படையில்தான், கூட்டுறவுக் கடன்வசதி நிறுவனங்கள், நடப்பாண்டில் 1,037.68 கோடி ரூபாய் அளவிற்குப் பயிர்க் கடன்களை வழங்க முடிந்தது. 2003-2004 ஆம் ஆண்டில், 616.59 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே கடன் வழங்கப்பட்டது. இவ்வாறாகக்




கூட்டுறவுக் கடன்வசதி நிறுவனங்கள் புத்துயிர் பெறுவதை, இந்த அரசுதான் உறுதிப்படுத்தியது என்பதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறியலாம். 31.3.2004ஆம் நாள் நிலவரப்படி, கூட்டுறவுக் கடன்வசதி நிறுவனங்களுக்கு, உழவர்கள் வட்டியுடன் சேர்த்து கொடுக்க வேண்டிய கடன் பாக்கியான மொத்தம் 2,598 கோடி ரூபாயைப் புதிய கடனாக மாற்றியதால், அவர்கள் புதிய பயிர்க்கடன்களைப் பெற முடிந்துள்ளது. இத் தொகையை, அவர்கள், கடன் தவணை நீட்டிப்புக் கால அளவான 2 ஆண்டுகளையும் சேர்த்து 5 ஆண்டுக்கால அளவில் திருப்பிச் செலுத்தவேண்டும். ஒரு சில மாநிலங்கள் மட்டுமே உழவர்களிடமிருந்து வரவேண்டிய இந்தக் கடன்களைப் பெரிய அளவில் புதிய கடனாக மாற்றி அமைத்துள்ளன.

48. உழவர்களின் கடன்களை இவ்வாறு மாற்றியமைத்ததனால், கூட்டுறவுக் கடன்வசதி நிறுவனங்களுக்குப் பெரும் நிதிச் சுமை ஏற்பட்டுள்ளது. கூட்டுறவுக் கடன்வசதி நிறுவனங்கள், தங்களுடைய செயல்பாடுகளைத் தொடர இயலும் வகையில், அவற்றுக்குப் புதிய சமவிகிதப் பங்குத் தொகையை அளிப்பதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில், 50 கோடி ரூபாய் நிதியொதுக்கம் சேர்க்கப்படுகிறது. மத்திய அரசிடமிருந்து எவ்வித நிதியுதவியும் பெறாமலேயே, கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்களுக்குப் புத்துயிரூட்டும் இந்த நடவடிக்கையை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். வறட்சியினால் பாதிக்கப்பட்ட உழவர்களின் கடன்களைத் தள்ளுபடிச் செய்வதற்குத் தக்கதொரு திட்டத்தைச் செயல்படுத்துமாறு, மத்திய அரசை, இந்த அரசு வலியுறுத்துகிறது. இதில், கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் மட்டுமல்லாது, வணிக வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்களும் அடங்கும்.

### கால்நடைகளுக்கு மருத்துவ வசதிகள் விரிவாக்கம்


49. 'ஆரோக்கியமான கால்நடைகளே ஒரு நாட்டின் செல்வம்' என்ற கூற்றிற்கிணங்க, இந்த அரசு, கால்நடை வளர்ப்பிற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளித்துள்ளது. கால்நடை மருத்துவ வசதிகள் போதுமான அளவிற்கு அமையப்பெறாத குக்கிராமங்களுக்கும் அந்த வசதி சென்றடைய வேண்டும் என்ற இலக்கோடு, 2004-2005 ஆம் ஆண்டிலும் கால்நடை சிறப்புப் பாதுகாப்பு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில், 1.85 கோடி ரூபாய் செலவில், அத்தகைய 5,005 முகாம்கள் நடத்தி முடிக்கப்படும். இத்திட்டம், வரும் ஆண்டிலும் தொடரப்படும்.

50. இந்த அரசு, மிகப் பெரிய அளவில் கால்நடை மருத்துவப் பராமரிப்பு வசதிகளை விரிவுபடுத்தி வருவது குறித்து மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். 2001 ஆம் ஆண்டிலிருந்து, 316 கால்நடை மருத்துவத் துணை நிலையங்கள், 'கால்நடை மருந்தகங்களாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன. இதனால், மாநில முழுவதிலும் மேம்பட்ட கால்நடை மருத்துவ வசதிகள் கிடைத்து வருகின்றன. நடப்பாண்டில், அனைத்து வசதிகளையும் பெற்றுள்ள 234 கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கால்நடைகளுக்குப் பயனுள்ள வகையில் மருத்துவப் பராமரிப்பு வழங்கும், கால்நடை மருந்தகங்களின் மொத்த எண்ணிக்கை 1,156 ஆக உயர்ந்துள்ளது.




### பால் கொள்முதல் அதிகரிப்பு

51. கால்நடைகளின் தர மேம்பாட்டில், தமிழ்நாடு விரைவான முன்னேற்றம் கண்டுள்ளது. இனப்பெருக்க நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகவரமைப்பு நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. செயற்கைக் கருவூட்டல் திட்டச் செயலாக்கத்தில், இந்தியாவிலேயே, தமிழ்நாடு முதன்மை வகிக்கிறது. மாநிலத்தில் கால்நடைகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில், 2001-2004 ஆம் ஆண்டு கால அளவில், 114 இலட்சம் செயற்கைக் கருவூட்டல்கள் நடத்தப்பட்டன. 2003ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட கால்நடை கணக்கெடுப்பிலிருந்து, கலப்பினக் கால்நடைகளின் விகிதாச்சாரம் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்திருப்பது தெரியவருகிறது. நடப்பாண்டில், பால் கொள்முதல் வெகுவாக அதிகரித்துள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் சராசரி தினசரி பால் கொள்முதல் 20.37 இலட்சம் லிட்டராக இருக்க, இது 2004-2005ஆம்



ஆண்டில் 23.86 இலட்சம் லிட்டராக அதிகரித்துள்ளது. நுகர்வோர் மீது சுமையை ஏற்றாமல், பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் விலையை, லிட்டர் ஒன்றுக்கு ரூ.1/- அதிகரித்துக் கொடுத்ததால் இது சாத்தியமாயிற்று. பால் பதப்படுத்துதலில், மேம்பட்ட நடைமுறைகளும் சிறந்த சுகாதார வழிமுறைகளும் பின்பற்றப்படுவதை உறுதிசெய்வதன் வாயிலாக, தூய்மையான பால் உற்பத்திக்குத் தற்போது முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. 8 மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில், 12.72 கோடி ரூபாய் செலவில், ஏனைய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் அனைத்திற்கும் விரிவுபடுத்தப்படும்.

### வீட்டுப் பண்ணை முறை


52. கால்நடைத் தீவனப் பயிருடன், புன்செய் வேளாண் நிலங்களின் சீரிய மேலாண்மை மற்றும் உயர்தர வெள்ளாட்டு இனங்களுடன் ஒருங்கிணைந்த கால்நடைப் பண்ணைகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய வீட்டுப் பண்ணை முறை ஊக்கப்படுத்தப் பட்டு வருகிறது.

53. 2005-2006 ஆம் ஆண்டில், கால்நடைத் தீவனத் தயாரிப்பு, பால் பண்ணை, செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு, வீட்டுப் புழக்கடைகளில் கோழி வளர்ப்பு முதலியவற்றில், சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

54. 2005-2006ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் பண்ணை வளர்ச்சிக்கான மொத்த ஒதுக்கீடு 178.01 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

### மீனவர்களுக்கு மறுவாழ்வு உதவிகள்

55. கடற்கரையோரம் நெடுகிலும், பல்வேறு மாவட்டங்களில், மீனவர்களின் வாழ்வாதாரங்களைச் சீரழித்துவிட்ட சுனாமி துயரச் சம்பவத்தின் பின்னணியில், இம்மாநிலத்தில், மீனள மேம்பாட்டிற்காக விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்படும். மீனளத் துறையை மிகவிரைவாக மேம்படுத்துவது குறித்து, புதிய அணுகுமுறைகளைப் பரிந்துரைப்பதற்காக, வல்லுநர்களைக் கொண்ட ஒரு பணிக்குழு அமைக்கப்படும். சுனாமி துயரச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கு, 2005-2006 ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்கப்படும். சுனாமி துயரச் சம்பவத்தையடுத்து, மறுவாழ்வுப் பணிகளுக்காக, வரவு–செலவுத் திட்டத்தில், ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகையான 1,000 கோடி ரூபாயில், பெரும்பகுதி, மீனவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கவும், கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுக்கவும், நிரந்தரமான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் ஒதுக்கப்படும்.




56. சேமிப்புடன் கூடிய நிவாரண திட்டம், கடல்சார் மீனவப் பெண்களுக்கும் நீட்டிக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில், 1,68,198 கடல்சார் மீனவர்களுக்காக 16 கோடி ரூபாயும், 50,993 மீனவப் பெண்களுக்காக 6.05 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத்திட்டம், 28 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன், 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### மீன்களைக் கரை சேர்க்கும் தளங்கள்

57. பழவேற்காடு மற்றும் முடசலோடை ஆகிய இடங்களில் 2.49 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட

இரண்டு புதிய, 'மீன்களைக் கரை சேர்க்கும் தளங்களை' (Fish landing centres), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20.12.2004 அன்று தொடங்கி வைத்தார்கள். 12.48 கோடி ரூபாய் செலவில் மேலும், இது போன்ற ஏழு தளங்கள் கட்டப்படும். சென்னை மற்றும் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகங்களில், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்று 12.42 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். சுனாமி பேரலைகளால் சேதமடைந்த மீன்பிடி துறைமுகங்களைச் சீரமைக்கும் பணி, 9.94 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். நதி முகத்துவாரங்களில் தூர்வாரி, செப்பனிட 1 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இது முறையான மீன் வளர்ப்பினை மேற்கொள்ளப் பெரிதும் உதவும்.

58. நம்முடைய கடல்சார் மீனள ஆதாரங்களைப் பெருக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. கடல்சார் பண்ணை வளர்ப்பு மற்றும் கடல் அடிமட்டத்தில் செயற்கைப் பாறைகளை நிறுவுதல் போன்ற தொழில்நுட்ப உத்திகளை நாம் பின்பற்ற வேண்டியுள்ளது. தமிழ்நாட்டில் அத்தகைய ஒரு திட்டம், தொடங்கப்பட வேண்டுமென்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகவும் குறிப்பாக உள்ளார்கள். கடல்சார் மீனள வாயில்களைப் பெருக்குவதற்கான இத்திட்டம், 2.78 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த அவையில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதில் காணும் முன்னேற்றத்தின் அடிப்படையில், இத்திட்டம், சாத்தியமான ஏனைய இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

59. நம்மிடம் 8 பெரிய மீன்பிடி துறைமுகங்கள் உள்ளன. 12.42 கோடி ரூபாய் செலவில் சென்னை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் 2 மீன்பிடி துறைமுகங்களை உலகத்தர அளவுக்கு மேம்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. அனைத்து மீன்பிடி துறைமுகங்களையும் மேம்படுத்துவதற்கான விரிவான திட்டம் ஒன்றைத் தொடங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.


60. மீனளத் துறைக்காக, 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், மொத்தம் 79.91 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**வனப்பகுதிகள் பராமரிப்பு**

61. பன்னாட்டுக் கூட்டுறவிற்கான ஜப்பான் வங்கியின் நிதியுதவி பெறும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் நிலை–II 2005-2006 ஆம் ஆண்டிலிருந்து 567.42 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கு, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 85.89 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நிலை–I பணிகள் முடிவடைந்த நிலையிலும், இந்த அரசு, 2004-2005ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளதை அறிந்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். 2004-2005 ஆம் ஆண்டில், 69.03 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியதால், இத்திட்டத்தைத் தொய்வின்றித் தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாகியது. இது, அனைவரின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில், வனப் பகுதியை ஒட்டியுள்ள 135 கிராமங்களும், பழங்குடியினர் கிராமங்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். ஏற்கெனவே உருவாக்கப்பட்ட வனப் பகுதிகளைப் பராமரிப்பதுடன், காடுகள் அழிந்துவிட்ட சுமார் 72,000 ஏக்கர் பரப்புடைய வனப் பகுதி நிலங்களிலும், ஏனைய நிலப்பகுதிகளிலும் மீண்டும் காடுகள் வளர்க்கப்படும்.

**மாங்குரோவ் காடுகள் உருவாக்கம்**

62. கடலோரப் பசுமைத் தடுப்புகள் மற்றும் மாங்குரோவ் காடு வளர்ப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம், தமிழ்நாடு கடற்கரையோரப் பகுதிகளை சுனாமி அலைகள் தாக்கியபோது, பெரிதும் உணரப்பட்டது. பசுமைத் தடுப்புகளை ஏற்படுத்தும் திட்டம் ஒன்று தொடங்கப்பட வேண்டும் என்றும், சாத்தியமான இடங்களிலெல்லாம் மாங்குரோவ் காடுகளை வளர்க்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை இட்டுள்ளார்கள். இத்திட்டத்திற்காக, தொடக்க நிதியொதுக்கமாக, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 7.48 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. தேவைகளின் அடிப்படையில் இது அதிகப்படுத்தப்படும்.



## நீரின் தரத்தை மேம்படுத்தும் புதிய திட்டம்

63. நிலையான வளர்ச்சி என்பது வெறும் கோட்பாடாக மட்டும் அல்லாமல், தற்போது ஒரு அத்தியாவசியத் தேவையாகவும் உருவெடுத்துள்ளது. நமது நீராதாரங்கள் அனைத்தும் தூய்மையாகப் பராமரிக்கப்பட வேண்டியதையும், குறிப்பாக, குடியிருப்புப் பகுதிகளை ஒட்டிய நீர் வரத்துக் கால்வாய்கள் மாசுபடாமல் இருக்க வேண்டியதையும் நாம் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. குடியிருப்புப் பகுதிகளை ஒட்டியிருக்கின்ற அனைத்து நீர்நிலைகளையும் சீரமைத்து, மக்களுக்கு நீராதாரமாகப் பயனளிக்கக் கூடிய வகையில், நீரின் தரத்தை மேம்படுத்தும் புதிய திட்டம் ஒன்றை நமது தலைவி முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கியுள்ளார். இத்திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.


64. தொழில் பிரிவுகள் மாசுக் கட்டுப்பாடுடன் கூடிய மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பின்பற்றுவதை உறுதி செய்ய, அவற்றோடு, பேச்சு வார்த்தை நடத்தி, தொழிற்சாலைகளால் ஆற்றுநீர் மாசுபடும் சிக்கலான பிரச்சினையைத் தீர்க்கக் கருதப்பட்டுள்ளது. தொழில் பிரிவுகளின் முழு அளவிலான பங்கேற்புடன் இத்தகைய திட்டத்தைச் செயற்படுத்த இயலும் பொருட்டு சிறப்புப் பணிக்குழு ஒன்று ஏற்படுத்தப்படும். சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைக்கான மொத்த ஒதுக்கீடு 228.44 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## நமது கிராமம் திட்டம்

65. நமது தலைவி மாண்புமிகு முதல்மைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், 15.8.2004 ஆம் நாளன்று 'நமது கிராமம்' திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார் என்பதை பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்திட்டத்தின் கீழ், அனைத்துக் கிராமங்களும் பயனடையும். இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கிராமத்திற்கும் தெருவிளக்குகள், சிமெண்ட் சாலைகள் முதலியவை போன்ற கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும்; தவிர, பள்ளிகளில் 100 சதவிகித மாணவர் சேர்க்கை, குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்தல், கருவிலிருக்கும் பெண் சிசுக் கொலையை ஒழித்தல், வறுமைக் குறைப்பு மற்றும் கிராமத் துப்புரவு ஆகியவை போன்ற குறிப்பிட்ட சமூக நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில் நன்கு செயல்படும், ஊராட்சி ஒவ்வொன்றும், ரூபாய் 3 இலட்சம் வரையிலான செயல்பாட்டு அடிப்படையிலான கூடுதல் நிதியுதவி பெறுவதற்குத் தகுதிபெறும். பொது மக்களின் பங்கேற்புடன் அனைத்து சமூகப் பணித் துறைகளிலும் முன்னேற்றம் காணப்படுவதை உறுதி செய்கின்ற ஊராட்சி ஒவ்வொன்றையும் ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும். 2004-2005 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு 200 கோடி ரூபாய் ஆகும். 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இதே அளவு ஒதுக்கீடு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. சமுதாயப் பிரச்சினைகளில் கிராம ஊராட்சிகளை ஈடுபடுத்த இந்த அரசு எடுத்துள்ள சிறப்பு முயற்சிகளைப் பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பாராட்டுவர்.

## ஊரகப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு

66. ஊரகப் பகுதிகளில் உள்ள வீடுகளை நிலையுயர்த்துவதற்கும், புதிய வீடுகளைக் கட்டுவதற்கும் இந்த அரசு கணிசமான நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்துவருகிறது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த அரசு, 2001 மே திங்களில் பொறுப்பேற்ற பின்னர், 498.81 கோடி ரூபாய் செலவில் பல்வேறு திட்டங்களின் கீழ், 1,48,000 புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 66.96 கோடி ரூபாய் செலவில் 70,942 கச்சா வீடுகள் நிலையுயர்த்தப் பட்டுள்ளன. 2005-2006 ஆம் ஆண்டில் இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் நிதியொதுக்கம் 35.13 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது, 2005-2006 ஆம் ஆண்டில் 37,676 புதிய வீடுகள் கட்டப்படுவதையும், 19,265 கச்சா வீடுகள் நிலையுயர்த்தப்படுவதையும் உறுதி செய்யும்.




67. ஊரக மக்களுக்கு மேம்பட்ட குடியிருப்பு வசதியைச் செய்து கொடுப்பதற்காக, கூரை

மற்றும் கச்சா வீடுகளை நிலையுயர்த்துவதற்கான புதிய திட்டமொன்றை நாங்கள் இறுதி செய்துள்ளோம். தகுதியுடைய குடும்பங்கள் அனைத்திற்கும் நிதியுதவி கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், இத்திட்டம் ஊரக சுயஉதவிக் குழுக்கள் மூலம் செயற்படுத்தப்படும். வீடு ஒன்றை நிலையுயர்த்துவதற்கான செலவு 10,000/- ரூபாயாக இருக்கும். இச்செலவு, முக்கியமாக, அரசு வழங்கும் 2,500/- ரூபாய் உதவித் தொகையைக் கொண்டும், வர்த்தக வங்கி வழங்கும் 7,000/- ரூபாய் கடனைக் கொண்டும் மேற்கொள்ளப்படும். பயன்பெறுவோர் தமது சிறு பங்களிப்பாக 500/- ரூபாய் மட்டும் இதற்கு அளிக்க வேண்டி இருக்கும். 2005-2006 ஆம் ஆண்டில் இத்தகைய ஒரு இலட்சம் வறிய குடும்பங்கள் பயனடைகின்ற வகையில் இத்திட்டத்தைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது: இதற்கு மானியம் வழங்குவதற்காக, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 25 கோடி ரூபாய் நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

### ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனை

68. தடை செய்யப்படாத புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு, அதற்கான வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகிறது என்பதை பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். தற்போதுள்ள அரசு நிலங்களைக் கொண்டு, வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குவது மிகவும் கடினமாகி வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் மொத்தச் செலவில், ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் புதிய திட்டம் ஒன்றைத் தொடங்க நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் முடிவு செய்துள்ளார். இத்திட்டத்தின் கீழ், வீட்டு மனைகள் தேவைப்படும் ஊரக ஏழை மக்கள் கண்டறியப்பட்டு, தேவையான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அவர்களுக்குத் தக்க வீட்டுமனைகள் வழங்கப்படும். புதிய குடியிருப்புகளுக்கு முறையான துப்புரவு வசதிகளுடன், தேவையான கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, இத்திட்டம், ஊரக மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும். இந்தப் புதிய பெருந் திட்டத்தின் கீழ், 2005-2006 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஏழை குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படும். உள்ளூரில் நிலத்தைக் கையகப்படுத்தி, வீட்டுமனைகள் வழங்குவது குறித்து முடிவுகள் எடுப்பதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும். பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், இந்தப் புதிய திட்டத்தைப் பெரிதும் வரவேற்பர் என நம்புகிறேன்.

### ஊரகச் சாலைகளின் மேம்பாடு

69. ஊரகப் பகுதிகளில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும், வேளாண் விளை பொருட்களை அங்காடிகளுக்கு எளிதில் எடுத்துச் செல்வதற்கான வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதிலும், ஊரகச் சாலைகளின் முக்கியத்துவத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்குஅறிவர். தமிழ்நாட்டில், நெடுஞ்சாலைத் துறையால் மேம்படுத்தப்பட்டு, முக்கியமாக ஊரகப் பகுதிகளுக்குப் பயன் அளித்து வரும் 41,192 கிலோ மீட்டர் ஏனைய மாவட்டச் சாலைகளும், 5,850 கிலோ மீட்டர் ஏனைய சாலைகளும் உள்ளன. 1,635 கிலோ மீட்டர் கரும்பாலைப் பகுதி சாலைகளையும் நெடுஞ்சாலைத் துறை பராமரித்து வருகிறது. கிராம ஊராட்சிகளை இணைக்கும் 32,053 கிலோ மீட்டர் சாலைகளை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. 56,544 கிலோ மீட்டர் கிராமச் சாலைகளின் பராமரிப்பு, கிராம ஊராட்சிகளின் பொறுப்பு ஆகும். இத்தகைய அனைத்து வகையான சாலைகளின் தரத்தை உயர்த்துவதற்குரிய ஒட்டுமொத்தத் திட்டமொன்றை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

70. மொத்தமுள்ள 41,192 கிலோ மீட்டர் ஏனைய மாவட்டச் சாலைகளில், 2001 ஆம் ஆண்டு முதல், இதுவரை 23,156 கிலோ மீட்டர் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நல்ல நிலையில் உள்ள சாலைகள் போக, எஞ்சிய 5,018 கிலோ மீட்டர் சாலைகளும் 2005-2006ஆம் ஆண்டில் தரத்துடன் மேம்படுத்தப்படும். 2005-2006ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் இதற்காக, 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. நபார்டு நிதியுதவியுடன் 214 கோடி ரூபாய் செலவில் ஏனைய மாவட்டச் சாலைகளையும், ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும் தரத்துடன் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரும்பாலைப்



பகுதிகளில் 246 கிலோ மீட்டர் சாலைகளைத் தரத்துடன் மேம்படுத்தும் பணி 29 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### சாலைகள் மேம்பாடு

71. நெடுஞ்சாலைத் துறையால் நிலை யுயர்த்தப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகளான ஏனைய வகைச் சாலைகள் கடந்த காலத்தில் சரிவரப் பராமரிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருந்தன. 300 கோடி ரூபாய் செலவில் இச்சாலைகளைச் சரி செய்வதற்கான சிறப்புத் திட்டம் ஒன்று தற்போது நிறைவேற்றி முடிக்கப்பட்டு வருகிறது. பிரதமரின் கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில் 160 கோடி ரூபாய் செலவில் நெடுஞ்சாலைத் துறையினால் செயல்படுத்தப்படும். ஒட்டுமொத்தச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 100 கோடி ரூபாய் செலவில் தற்போதைய ஊராட்சி ஒன்றியச் சாலைகளை தரத்துடன் மேம்படுத்தும் சிறப்புத் திட்டம் ஒன்று 2005-2006 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

72. கிராம ஊராட்சி சாலைகளைப் பராமரிப்பது கிராம ஊராட்சிகளின் பொறுப்பாகும். 'நமது கிராமம்' திட்டத்தின் கீழ், சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்குக் கிராம ஊராட்சிகளுக்கு உதவி அளிக்கப்பட்டு வருகிறது. முழுமையான கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் (SGRY), கிராம ஊராட்சி சாலைப்பணிகளும் மேற்கொள்ளப்படும்.


73. ஊரக மக்களுக்கு மேம்பட்ட தரமானதொரு வாழ்க்கை அமைத்துக் கொடுப்பதற்காகவும், ஊரகப் பகுதிகளில் கூடுதலாக வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்குவதற்காகவும், ஊரகச் சாலைகளை மேம்படுத்த இவ்வரசு எடுத்துவரும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்வைத்தரும் என நம்புகிறேன்.

### ஊரகப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்

74. அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்குவது, புத்தாயிரம் ஆண்டின் ஒரு முக்கியமான வளர்ச்சி இலக்காகும். மாநிலத்தில் உள்ள 81,787 குடியிருப்புகளில், 74,546 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு குடிநீர் வழங்கல்–வடிகால் வாரியம் மேற்கொண்ட ஒரு புதிய ஆய்விலிருந்து தெரியவருகிறது. இவ்வாறாக, மக்கள் தொகையில் 90 சதவீதத்திற்கு அதிகமானோர் பயனடைந்து வருகின்றனர். எஞ்சியுள்ள மக்களும் பயனடையும் வகையில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### நீர்செறிவூட்டும் கட்டமைப்புகள்

75. 2004-2005 ஆம் ஆண்டில், தனித்தனி மின்விசைப் பம்புகள் அமைக்கும் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் 6500 ஊரகக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில், ஊரகக் குடும்பங்களுக்கு மேம்பட்ட குடிநீர் வழங்கலுக்கு வகை செய்வதற்காக, தற்போதுள்ள கைப்பம்புகளை மாற்றிவிட்டு, 10,000 சிறு மின்விசைப்பம்புகள் நிறுவப்பட்டுள்ளன. 'ஸ்வஜல்தாரா' திட்டத்தின் கீழ், 23.85 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், 569 குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. குடிநீர் வழங்கல் ஆதாரங்களைப் பெருக்குவதற்காக, 2004-2005 ஆம் ஆண்டில், 24.76 கோடி ரூபாய் செலவில், ஊரகப் பகுதிகளில் உள்ள 9,772 மரபுவழி குடிநீர் ஆதாரங்கள் புதுப்பிக்கப்பட்டு, 923 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன.




76. இவ்வரசு, 2005-2006 ஆம் ஆண்டில், கூடுதலாக 6,500 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கலை உறுதி செய்வதற்கான திட்டங்களை மேற்கொள்ளும். 2005-2006 ஆம் ஆண்டில், மேலும் 5,000 சிறு மின்விசைப் பம்புகள் நிறுவப்படும்; 2005-2006 ஆம் ஆண்டில், 21 கோடி ரூபாய் செலவில் தற்போதுள்ள குடிநீர் வழங்கல் ஆதாரங்களைப் பெருக்குவதற்காக, 1250 நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் அமைக்கப்படும்.

குடியிருப்புப் பகுதிகளுக்கு நெருக்கமாக அமைந்துள்ள நீர் ஆதாரங்கள் சீரமைக்கப்பட்டுப் புதுப்பிக்கப்படுவதை உறுதி செய்திடும் வகையில், முழுமையான கிராம வேலைவாய்ப்புத் திட்டம் (SGRY) மற்றும் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகள் பயன்படுத்தப்படும்.

77. 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலான உலக வங்கி நிதியுதவி பெறும், தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத் தயாரிப்புப் பணி, இறுதிக் கட்ட நிலையில் உள்ளது. இது, 2005-2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். தேவையின் அடிப்படையிலான அணுகுமுறையில், குடிநீர் வழங்கல் திட்டங்கள் குறித்து திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் சமுதாயப் பங்கேற்புக் கொள்கைகளின் அடிப்படையில், இத்திட்டம் உருவாக்கப்பட்டு வருகின்றது.

## முழுத் துப்புரவு இயக்கம்

78. நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஊரகத் துப்புரவு, உடல் நலன் மற்றும் தூய்மை உணர்வு ஆகியவற்றை, பெரிதும் வலியுறுத்தி வருவதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் அறிவர். மேம்படுத்தப்பட்ட துப்புரவு வசதித் திட்டத்தினால் பயனடையும் ஊரக மக்கள் தொகையின் சதவிகிதம் 2001ஆம் ஆண்டில் 15 சதவிகிதமாக இருந்தது. இது, 2004 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 43.83 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. முழுத் துப்புரவு இயக்கம் மற்றும் தூய்மையான கிராம இயக்கத் திட்டம் ஆகியவை நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 கிராம ஊராட்சிகளுக்கும் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் தேசிய அளவில், துப்புரவு மற்றும் தூய்மை குறித்த சிறந்த செயல்பாட்டிற்கான நிர்மல் கிராம புரஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த மன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## முழுமையான கிராம வேலைவாய்ப்புத் திட்டம்

79. ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவது ஒரு முக்கியமான வளர்ச்சி இலக்காகும். முதன்மைத் துறையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதால், வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை எளியோர்க்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில், இந்த அரசு, முழுமையான கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தைச் (SGRY) செயல்படுத்தி வருகிறது. 2004-2005ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ், ஊரகப் பகுதிகளில், பயனுள்ள சொத்துகளை உருவாக்குவதற்கும் 4.33 கோடி மனித உழைப்பு நாட்கள் அளவிலான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் 1.24 இலட்சம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்காக, 2.28 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. 2004-2005ஆம் ஆண்டில், மொத்தம் 273.84 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

80. 2004ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத சட்ட முன்வடிவினை மத்திய அரசு அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இச்சட்ட முன்வடிவு, ஊரக வளர்ச்சிக்கான பாராளுமன்ற நிலைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பயிற்சித் திறன் தேவையற்ற உடலுழைப்புப் பணியினை, தாமாகவே முன்வந்து செய்ய விரும்பும் ஊரகப் பகுதிகளில் உள்ள குடும்பம் ஒவ்வொன்றுக்கும், ஒரு நிதியாண்டில் 100 நாட்களுக்குக் குறையாமல் உத்தரவாதமளிக்கப்பட்ட வேலைவாய்ப்பிற்கு வகை செய்யும் நோக்கத்தினை நாங்கள் வரவேற்கிறோம். இருப்பினும், அத்தகைய வேலைவாய்ப்பை அளிக்க முடியாத போது, வேலைவாய்ப்பின்மைக்கான உதவித் தொகை அளிப்பதால் ஏற்படும் நிதிச் சுமை முழுவதும் மாநில அரசுகளின் மீதே சுமத்தப்படுகிறது. அத்தகைய வேலைவாய்ப்பின்மைக்கான உதவித் தொகை அளிப்பதற்கு, மத்திய அரசு முழுமையாக நிதியளிக்க வேண்டும் என்பதே நமது ஆய்ந்த கருத்தாகும். ஊதியம் வழங்குவது உட்பட திட்டச் செலவில் 25 சதவிகிதத்தை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. இது மாநிலங்களுக்குப் பெருமளவு நிதிச் சுமையை ஏற்படுத்தும். மாநிலங்களின் பங்கு 10 சதவிகிதமாகக் குறைக்கப்பட வேண்டும். எளிதாக இத்திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் பல்வேறு ஊரகப் பணிகளையும் உள்ளடக்கியதாக வேலைவாய்ப்பின் தன்மை விரிவாக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோரில் குறைந்தது 50 சதவிகிதத்தினர் பெண்களாக இருக்க வேண்டும்.

81. ஊரகப் பகுதிகளில் பண்ணை சாராத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, கூடுதல் வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்குவதற்காக, ஊரகத் தொழில் மற்றும் சிறிய வணிக நிறுவனங்களை ஊக்குவிப்பது மிகவும் அவசியமாகிறது. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஊரகத் தொழில் மயமாக்கலுக்குப் புத்துயிரூட்டுவதில் பெரிதும் உதவியுள்ளது. இதுவரையிலும், 138.43 கோடி

ரூபாய் முதலீட்டிலான, 213 தொழில் பிரிவுகள், உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இதன் மூலம், 5,638 ஊரக மகளிர் உட்பட 8,335 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. 103.16 கோடி ரூபாய் மூலதனச் செலவிலான, 159 திட்டங்கள் விரைவில் உற்பத்தியைத் தொடங்கும். மொத்தம் 108.51 கோடி ரூபாய் செலவாகக்கூடிய, மேலும் 146 திட்டங்கள், இன்னும் வர்த்தக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பரிசீலனையில் உள்ளன. இந்தத் திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதை விரைவுபடுத்துமாறு வங்கிகளை நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம்.

82. ஊரக வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கான நமது அணுகுமுறையில், ஊரகப் பண்ணை சாராத் துறையில் கிடைக்கப் பெறும் வாய்ப்புகளை அதிகரிப்பதும், உடலுழைப்புப் பணிக்கு அடிப்படை உத்தரவாதம் அளிப்பதும் அடங்கும். சுய உதவிக்குழு இயக்கம் உள்ளிட்ட, பல்வேறு வறுமைக் குறைப்புத் திட்டங்கள், பெரிய அளவில் ஊரகப் பண்ணை சாரா வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கும். இவற்றால், ஊரகக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுவதுடன், ஊரகப் பகுதிகளில் பெரிய அளவில் கூடுதல் வேலைவாய்ப்புகளும் உருவாகும்.

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

83. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தற்போது ஒவ்வொரு தொகுதிக்கும், 82 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. இந்த ஒதுக்கீடு நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைக்கு ஏற்ப, 2005–2006 ஆம் ஆண்டிலிருந்து ஒரு கோடி ரூபாயாக அதிகரிக்கப்படும் என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். 2004–2005 ஆம் ஆண்டில், 192.70 கோடி ரூபாயாக இருந்த சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கம், 2005–2006ஆம் ஆண்டில் 235 கோடி ரூபாயாக அதிகரிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், நிதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும், 2005–2006 ஆம் ஆண்டு முதல், கீழே கொடுக்கப்பட்டுள்ள திருத்திய முறை பின்பற்றப்படும்:–

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| குடிநீர் வழங்கல் பணிகள் | – 10.00 |
| நமது கிராமம் திட்டம் | – 15.00 |
| மாணவரில்லங்கள் கட்டுதல் | – 10.00 |
| கிராம ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள் | – 10.00 |
| தெரு விளக்குகள் | – 5.00 |
| இதரப் பணிகளுக்கான மொத்த ஒதுக்கீடு | – 50.00 |
| மொத்தம் | –100.00 |

84. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு அதிகரிக்கப் படுவதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் வரவேற்பர் என நான் நம்புகிறேன்.

## விவசாயப் பம்பு செட்டுகளுக்கு புதிய மின் இணைப்பு

85. ஊரகப் பகுதிகளில் மின்சாரம் தரமான முறையில் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்ய, தமிழ்நாடு மின்சார வாரியம், 2005-2006 ஆம் ஆண்டில், 247.52 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலான, திட்டங்களை மேற்கொள்ளும். ஊரகப் பகுதிகளில் மின்சாரம் தரமான முறையில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த, தமிழ்நாடு மின்சார வாரியம், 21 புதிய துணை மின் நிலையங்களை நிறுவும்; 20 துணை மின் நிலையங்களில், மின் அழுத்த மாற்றியின் திறனை அதிகரிக்கும். மேலும் 2,300 புதிய மின் பகிர்வு மின் அழுத்த மாற்றிகளை நிறுவும். 2005-2006ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் 45,000 விவசாயப் பம்புசெட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு அளிக்கப்படும் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர்.

## முதலீட்டுச் சூழலில் முன்னேற்றம்

86. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிற்கான 2003 ஆம் ஆண்டு புதிய தொழிற் கொள்கையினை அறிவித்துள்ளார்கள். இந்தக் கொள்கை, உற்பத்தித் துறையினை முன்னிறுத்தி, மாநிலத்தின் முதலீட்டுச் சூழ்நிலையினை மேம்படுத்துவதற்கான செயல் திட்டத்தை வகுத்துள்ளது. தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல், தரமான எரிசக்தி வழங்குதல், நடைமுறைகளை எளிமையாக்கி விதிகளைத் தளர்த்தல், மாநில அளவிலான வரிவிதிப்பு முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல், தொழிலாளர் துறை சீர்திருத்தங்கள் போன்றவற்றிற்கு இதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில்

மேம்பட்ட ஒட்டுமொத்த முதலீட்டுச் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், இத்தகைய அம்சங்கள் ஒவ்வொன்றும் குறித்துத் திட்டவட்டமான நடவடிக்கையை எடுப்பதற்கு, இந்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. தொழில் முனைவோர் விவர அறிக்கையின்படி (Industrial Entrepreneur Memorandum (IEM), 2003 அக்டோபரிலிருந்து 2004 செப்டம்பர் வரையிலான ஓராண்டு காலத்தில் மட்டுமே, தமிழ்நாட்டில் தொழில் முனைவோரின் உத்தேசிக்கப்பட்ட புதிய முதலீடுகள் கணிசமாக உயர்ந்துள்ளன என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர் என நம்புகிறேன். மாநிலத்தில் முதலீட்டுச் சூழலில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை இது தெளிவாகக் காட்டுகிறது. ஹூண்டாய் மோட்டார் நிறுவனம், சென்னையில் தனது தொழில் வளாகத்தில், 500 மில்லியன் அமெரிக்க டாலர் அல்லது சுமார் 2,200 கோடி ரூபாய் முதலீட்டில் இரண்டாவது கார் தொழிற்சாலையை நிறுவுவதாக அண்மையில் அறிவித்துள்ளது. இரண்டாம் நிலை துறையில் குறிப்பாக விரைந்த வளர்ச்சி அடைய, முதலீட்டுச் சூழலை மேலும் மேம்படுத்துவதே எங்களது முயற்சியாக இருக்கும்.

## நெடுஞ்சாலை மேம்பாடு

87. சாலைக் கட்டமைப்பு வசதி பணிகளிலான முதலீடு, பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. மாநில நெடுஞ்சாலை களையும், மாவட்ட பெருஞ்சாலைகளையும், மாவட்ட ஏனைய சாலைகளையும் மேம்படுத்தவும், அவற்றில் பாலங்களைப் புதுப்பித்துக் கட்டவும், அகலப்படுத்தவும், 1,050 கோடி ரூபாய் செலவில், ஒட்டுமொத்த சாலை கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ், 2005-2006 ஆம் ஆண்டில், 2,064 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலைகள், 2,114 கிலோ மீட்டர் மாவட்ட பெருஞ்சாலைகள், 5,018 கிலோ மீட்டர் மாவட்ட ஏனைய சாலைகள் மற்றும் 1,600 கிலோ மீட்டர் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகள் ஆகியவற்றில் பணிகள் மேற்கொள்ளப்படும். வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக 750 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது அமைக்கப்பட்டுவரும் தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம், 2005-2006 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக, 100 கோடி ரூபாய் நிதி திரட்டும்.

88. உலக வங்கி நிதியுதவி பெறும் தமிழ்நாடு சாலைத் துறை திட்டம், 2160 கோடி ரூபாய் மொத்தச் செலவில் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், இரண்டு சாலைப் பெருவழிகளில், 742 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்தி நிலை உயர்த்துவதோடு, 2,000 கிலோ மீட்டர் சாலைகளை தரமாகவும், செம்மையாகவும் சீரமைத்துப் பராமரிக்கவும் வகை செய்யும். 954 கோடி ரூபாய் செலவில், 624 கிலோ மீட்டர் சாலைகளை உள்ளடக்கிய மூன்று பெரும் திட்டப் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. முதல் ஆண்டுப் பராமரிப்புத் திட்டத்தின் கீழ், 180 கோடி ரூபாய் செலவில் 634 கிலோ மீட்டர் சாலைகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சிறப்பான முறையில் நடந்தேறி வருகின்றன. இரண்டாம் ஆண்டு பராமரிப்புத் திட்டத்தின் கீழ், 2005-2006 ஆம் ஆண்டில், 158 கோடி ரூபாய் செலவில், மேலும் 450 கிலோ மீட்டர் சாலைகளில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

89. மாநிலத்தில், தற்போதுள்ள சாலைக் கட்டமைப்பின் பராமரிப்பில், இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இது, கடந்த தொன்னூறுகளின் பிற்பகுதிகளில் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப் பட்டிருந்தது. மாநிலத்தில், சாலைப் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கம், 2001-2002 ஆம் ஆண்டில் 114.21 கோடி ரூபாய் என்றிருக்க, 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இது 463.71 கோடி ரூபாயாகக் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. சாலைகள் முறையாக பராமரிக்கப்படுவதை உறுதிசெய்ய, இந்த அரசு எடுத்துள்ள இந்தச் சிறப்பான நடவடிக்கையை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் வரவேற்பர் என நம்புகிறேன். 2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 2104.46 கோடி ரூபாயாக இருக்கும் நெடுஞ்சாலைகளுக்கான நிதி ஒதுக்கம், 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், முன் எப்போதும் இல்லாத அளவுக்குக் கணிசமாக உயர்த்தப்பட்டு 2991.47 கோடி ரூபாயாக இருக்கும்.


## போக்குவரத்துக்குப் புதிய பேருந்துகள்

90. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், 2003-2004 ஆம் ஆண்டில் சிறிய அளவில் லாபம் ஈட்டியுள்ளன. தமிழ்நாடு அரசுப்போக்குவரத்துக் கழகங்கள், நடப்பாண்டில், 1325 பழைய பேருந்துகளுக்குப்பதிலாக, புதிய பேருந்துகளை வாங்குகின்றன என்பதையும், அடுத்த நிதியாண்டில் மேலும், 2000 பழைய பேருந்துகளுக்குப்பதிலாக, புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்பதையும் அறிவதில் மதிப்பிற்குரிய பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர் என நம்புகிறேன். 4848 பழுதடைந்த பேருந்துகள் 30.48 கோடி ரூபாய் செலவில், சரிசெய்யப்பட்டு, சாலைப் போக்குவரத்திற்கும், பாதுகாப்பான பயணத்திற்கும்

உகந்தவையாக மாற்றப்பட்டுள்ளன. இதன் மூலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சேவை முழுமையாக மேம்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசு டீசல் விலைகளைக் கடுமையாக உயர்த்தியதால், தாங்கமுடியாத சுமையை ஏற்படுத்தியுள்ளது. இருந்த போதிலும், பயணக் கட்டணங்களை உயர்த்தாமலேயே சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்கான இப்பெரும் திட்டத்தை மேற்கொள்ள நாங்கள் கருதியுள்ளோம்.

**கோடையிலும் தண்ணீர் வழங்கிய புதிய வீராணம் திட்டம்**

91. நகர்ப் பகுதிகளில், பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதானது, சவால் மிகுந்த பணியாக உள்ளது. இதற்குக் கணிசமான அளவு புதிய முதலீடுகள் தேவைப்படுவதோடு, அவற்றைப் பராமரிப்பதிலும் முறையான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த அரசு, நகர்ப் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டங்களை வெற்றிகரமாகத் திட்டமிட்டு, செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, புதிய வீராணம் திட்டத்தை மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்றி, சென்னை மாநகருக்குக் குடிநீர்




வழங்கும் பணி பெருமளவில் மேம்படுத்தப்படுவதை, நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள். சென்ற ஆண்டில் மக்கள் நகரைவிட்டு வெளியேற வேண்டியிருந்த அச்சுறுத்தலான நிலையை சென்னை மாநகரம் எதிர்கொண்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். 720 கோடி ரூபாய் செலவில் புதிய வீராணம் திட்டத்தை மேற்கொண்டு, அதனைச் செவ்வனே செயல்படுத்தியது இவ்வரசுதான். இத்திட்டம் விரைவாக முடிக்கப்பட்டதால், முதற்கண், 2004 மே திங்களில் சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 205 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்க முடிந்தது. அதன் பிறகு 2004 அக்டோபரில் நீர்த் தேக்கங்களில் தண்ணீர் இல்லாத நிலையிலும், குழாய்கள் மூலமாகக் குடிநீர் மீண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இது, இந்த அரசின் மிகவும் உன்னதமான வெற்றிச் சாதனையாகும். சென்னை மாநகரில் தொடர்ந்து நிலவிய கடும் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் மேற்கொண்ட இந்த உறுதியான நடவடிக்கை சென்னை மக்களின் நினைவில் என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடிய சிறப்பினைப் பெற்றதாகும். புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம் 2005-2006 ஆம் ஆண்டில் 300 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்படும். இதனால், வீராணம் ஏரியில் தண்ணீர் மட்டம் குறையும்போது, கோடைக் காலங்களில், சென்னை மாநகருக்குக் கொள்ளிடம் ஆற்றுப் படுகையிலிருந்து தண்ணீரை வழங்க இயலும். இத்திட்டத்தை மேற்கொள்வதற்கும், கொள்ளிடம் ஆற்றங்கரை நெடுக அமைந்திருக்கும் கிராமங்களில் கிடைக்கக் கூடிய நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

92. சென்னையில் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள், 16.2.2005 அன்று திறக்கப்பட்ட போது அதற்கு நல்ல வரவேற்பு இருப்பது தெரியவந்தது. ஒப்பந்தப் புள்ளிகள் மதிப்பீடு செய்யப்பட்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்துவது பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும். சென்னையின் மொத்தத் தண்ணீர் தேவை, நாளொன்றுக்கு 840 மில்லியன் லிட்டராகும் என்பதை, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். அண்மையில் முடிக்கப்பட்ட புதிய வீராணம் திட்டம் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் உள்ளிட்ட, பல்வேறு நீராதாரங்களை ஒருங்கிணைத்து, இத்தேவை நிறைவு செய்யப்படும்.

**கூட்டுக்குடிநீர்த் திட்டங்கள்**

93. 2004-2005 ஆம் ஆண்டில் பின்வரும் பெருந்திட்டங்கள் உட்பட, 40 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

- 74 கோடி ரூபாய் செலவில், 4.03 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ஆண்டிபட்டி மற்றும் உசிலம்பட்டி நகராட்சிகள், மூன்று சிறப்பு நிலை கிராம ஊராட்சிகள், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள 406 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 69.20 கோடி ரூபாய் செலவில், 2.95 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 674 ஊரகக் குடியிருப்புகளை உள்ளடக்கும் மணப்பாறை மற்றும் மருங்காபுரி ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 133.05 கோடி ரூபாய் செலவில், 4.13 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான, திருவாரூர் மற்றும் திருத்துறைப்பூண்டி நகராட்சிகள், 3 சிறப்பு நிலை கிராம ஊராட்சிகள், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 642 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 12.47 கோடி ரூபாய் செலவில், 1.01 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான, நல்லம்பட்டி, பெத்தம்பாளையம், காஞ்சிகோயில் மற்றும் பள்ளப்பாளையம் சிறப்பு நிலை கிராம ஊராட்சிகள் மற்றும் ஈரோடு மாவட்டத்திலுள்ள 64 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 54.70 கோடி ரூபாய் செலவில், 2.18 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 295 ஊரகக் குடியிருப்புகளை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

94. 2005-2006 ஆம் ஆண்டில், பின்வரும் பெருந்திட்டங்களை நிறைவேற்றி முடிக்கக் கருதப்பட்டுள்ளது:–

- 85 கோடி ரூபாய் செலவில், 6 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 816 ஊரகக் குடியிருப்புகளை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 98.85 கோடி ரூபாய் செலவில், 1.34 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான, நாகப்பட்டினம் நகராட்சி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள 890 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- 126.85 கோடி ரூபாய் செலவில், 7.13 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான, நாமக்கல் மாவட்டத்திலுள்ள 1,399 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 6 சிறப்பு நிலை கிராம ஊராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.


- 78.70 கோடி ரூபாய் செலவில், 4.60 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலான, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களிலுள்ள சங்கரன்கோயில், சிவகாசி மற்றும் திருத்தங்கல் நகராட்சிகள், திருவேங்கடம் சிறப்பு நிலை ஊராட்சி, மானூர் மற்றும் 400 ஊரகக் குடியிருப்புகளை, உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

95. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தஞ்சாவூர், மதுரை, கரூர் மற்றும் இனாம்கரூர் ஆகிய நகரங்களில் ஒருங்கிணைந்த பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை, 2005-2006 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். எஞ்சியுள்ள 24 மாவட்டத் தலைமையிட நகரங்களில், பாதாளச் சாக்கடை வசதிகள் செய்து கொடுப்பதற்கான ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில், 800 கோடி ரூபாய் மொத்தச் செலவில் மேற்கொள்ளப்படும்.

## கூடுதல் மின் உற்பத்தியுடன் வலுவடையும் மொத்த நிறுவுதிறன்

96. தமிழ்நாட்டில் மின்சக்தி நிலைமை மனநிறைவு அளிப்பதாக உள்ளதை பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். மதிநுட்பமான மின் வழங்கல் நிருவாகம் மற்றும் திட்டமிட்ட முறையில் புதிய மின் உற்பத்தித் திறனைக் கூட்டுதல் ஆகியவற்றின் மூலம் இது உறுதி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில், 263 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தியுடன் மொத்த நிறுவு திறன் மேலும் வலுப்படுத்தப்படும் என்பதை அறிந்து பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். தமிழ்நாடு மின்வாரியத்தின் சொந்த மொத்த நிறுவுதிறன் 5,531 மெகாவாட் வரை உயர்ந்துள்ளது. கொள்முதல் செய்யப்படும் மின்சக்தித் திறனையும் சேர்த்து, தமிழ்நாட்டில் மொத்த மின்சக்தி உற்பத்தித் திறன் 9,657 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது.

97. வருமாண்டுகளில், புதிய மின்சக்தித் திறனை அதிகரிப்பது குறித்து திட்டமிடுவதற்காக, இந்த அரசு, உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.



இவ்வகையில், மாநிலத்தின் மின் உற்பத்தித் திறனை மேலும் 4,000 மெகாவாட் அதிகரிப்பதற்கான திட்டங்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளன. சென்னையில், தேசிய அனல் மின் நிறுவனத்துடன் (NTPC) கூட்டுத் துறையில் ஏற்படுத்தப்படவுள்ள 1,000 மெகாவாட் திறன் கொண்ட ஒரு மின் உற்பத்தி நிலையம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் கூட்டுத் துறையில் தூத்துக்குடியில் நிறுவப்படவுள்ள 1,000 மெகாவாட் திறன்கொண்ட ஒரு மின் உற்பத்தி நிலையம், கூடங்குளத்தில் அமைந்துவரும் 2,000 மெகாவாட் திறன் கொண்ட அணுமின் உற்பத்தி நிலையம் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் உற்பத்தித் திட்டத்திற்குப் புத்துயிரூட்டப் பட்டுள்ளது என்பதையும், தமிழ்நாடு மின்சார வாரியம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாக இது நிறைவேற்றப்படும் என்பதையும் இந்தப் பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1,000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இத்திட்டம் 5,000 கோடி ரூபாய் செலவில், மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்.

98. புதுப்பிக்கத்தக்க எரி சக்தியை (Renewable energy) உற்பத்தி செய்து பயன்படுத்துவதில் தமிழகம் நாட்டிலேயே முதன்மை வகிக்கிறது. புதுப்பிக்கத்தக்க அனைத்து வகை எரிசக்தி ஆதாரங்களிலிருந்தும் மொத்தம் 1,920 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் நிறுவு திறன் பெற்று, தமிழ்நாடு, நாட்டிலேயே முதன்மை மாநிலமாக விளங்கும் தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது. இதில், காற்று எரிசக்தித் திறன் மட்டும் 1,664 மெகாவாட் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. 31.3.2004 ஆம் நாள் நிலவரப்படி, நாட்டின் மொத்தக் காற்று எரிசக்தி உற்பத்தித் திறனில், இம்மாநிலத்தின் திறன், 55. சதவிகிதமாகும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒட்டு மொத்தக் கால அளவிற்கும் 500 மெகாவாட் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்தில், 2005, ஜனவரி வரையிலான மூன்றாண்டு கால அளவில் மட்டுமே, மின் நிறுவுதிறன் 807 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர்.

99. சர்க்கரை ஆலைகளின் இணை–மின்சார (Co-generation) உற்பத்தியிலும், தமிழகம் முன்னிலை வகிக்கிறது. தமிழகத்தின் மொத்த இணை மின் உற்பத்தித் திறன் 275 மெகாவாட் ஆகும். இவற்றின் சுய தேவைகளுக்குப்போக, 165 மெகாவாட் மின்சாரம் உபரியாக உற்பத்தி செய்யப்படுகிறது. மொத்தம், 259 மெகாவாட் திறன் கொண்ட 37 உயிரினக் கழிவு எரிசக்தித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றில், 145.5 மெகாவாட் திறன் கொண்ட 15 திட்டங்களுக்கு, தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. இனிவரும் ஆண்டுகளிலும், மரபுசாரா எரிசக்தி உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கு அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளும்.

100. தமிழ்நாடு மின்சார வாரியம், 2004-2005 ஆம் ஆண்டில் 1,255.53 கோடி ரூபாயாக இருக்கும் மொத்த மூலதனச் செலவை 2005-2006 ஆம் ஆண்டில் 1,495.30 கோடி ரூபாயாக உயர்த்தும். மின் அனுப்புகை மேம்பாடு மற்றும் மின் இழப்பினைக் குறைப்பதில் கவனம் செலுத்தப்படும். எரிசக்தியின் நம்பகத் தன்மையையும் தரத்தினையும் மேம்படுத்துவது குறித்தும் அதிக கவனம் செலுத்தப்படும். 2005-2006ஆம் ஆண்டில் 596 கோடி ரூபாய் செலவில் சென்னைப் பெருநகர் பகுதியில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப் பட்டுள்ளது.

101. நுகர்வோர் எளிதாக மின்கட்டணம் செலுத்தும் வகையில், சென்னை மாநகரத்திலும் அனைத்து மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் குறைவழுத்த மின் கட்டணங்களுக்கான பட்டி மற்றும் வசூலிப்பு நடைமுறைகளைக் கணினிமயமாக்கும் பணி, 120 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு 2006 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

**துறைமுகங்கள் மேம்பாடு**

102. பொதுத்துறை – தனியார் துறை பங்கேற்பின் வாயிலாக, ஒரு முன்மாதிரியாக, 250 கோடி ரூபாய் செலவில், கடலூர் துறைமுகத்தை மேம்படுத்த, தமிழ்நாடு கடல்சார் வாரியம் உத்தேசித்துள்ளது. நாகப்பட்டினம் துறைமுகத்தை இரண்டு கட்டமாக மேம்படுத்த இவ்வாரியம் கருதியுள்ளது. முதற்கட்டமாக, கடலுக்குள் தற்போதுள்ள அலைத் தடுப்புச் சுவர் (break water) வலுப்படுத்தப்படும். இரண்டாம் கட்டமாக, இந்த அலைத் தடுப்புச் சுவரை விரிவுபடுத்தல், தூர்வாருதல்,

கடல்சேரும் ஆற்றுத் தடத்தைச் சீரமைத்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படும். முதல்கட்டப் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது. சுனாமி பேரலைகளினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு துறைமுகங்களையும் மேம்படுத்துவதற்காக, 70 கோடி ரூபாய் செலவாகக்கூடிய, விரிவான செயற்குறிப்புகளை அரசு தயாரித்துள்ளது. இப்பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள, தேவையான நிதியினை மத்திய அரசு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தொழிலாளர் நலன்

103.மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள், வேலைவாய்ப்புத் துறையின், பயனடைவோர் பங்கேற்புடன் கூடிய வேலைவாய்ப்புத் தகவல் செயற்பாட்டு வலைதளம் (Inter active website-cum-job portal) ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளார்கள். வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த உயர் தகுதி வாய்ந்த தொழில்முறை வல்லுநர்களுக்கும், முதுகலைப் பட்டதாரிகளுக்கும் நல்ல வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்தில், இந்த வலைதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொறியாளர்கள், மருத்துவர்கள், கால்நடை மருத்துவர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்களை உள்ளடக்கிய 202 பல்கலைக்கழக பாடப் பிரிவுகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் குறித்த நம்பகமான மிகப் பெரிய தகவல் விவரத் தொகுப்பு இந்த வலைதளத்தில் இடம் பெற்றிருப்பது சிறப்பு அம்சமாகும். வேலைவாய்ப்புக்காகப் பதிவு செய்துள்ள நபர்களின் மொத்த எண்ணிக்கை 2003 இறுதியில் 48.76 இலட்சமாக இருந்தது என்பதையும், அது, 2004 இறுதியில் 41.51 இலட்சமாகக் குறைந்துள்ளது என்பதையும் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து வரப்பெற்றுள்ள தகவல் விவரங்கள் தெரிவிக்கின்றன.

## மகளிருக்கென தனி தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

104. வலுவான செயல் திறம் வாய்ந்த மனிதவள ஆதாரத்தை, தமிழ்நாடு மேலும் பெருக்க வேண்டியுள்ளது. 7 கோடி ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதையும், தொழிற் பயிற்சி நிறுவனங்களில் (ITIs) அங்காடித் தேவைகளுக் கேற்ப புதிய தொழில் பாடப் பிரிவுகளை அறிமுகப் படுத்துவதையும் இவ்வரசு உறுதிசெய்து வருகிறது. மகளிருக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்தில், ஆண்டிபட்டி, கரூர், நாமக்கல் ஆகிய இடங்களில் மகளிருக்கென் தனி தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஒசூர், தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களில், தற்போதுள்ள தொழில் பயிற்சி நிறுவனங்களில் மகளிருக்கெனத் தனிப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. உலகத் தரம் வாய்ந்த கைவினைஞர்களை உருவாக்கும் வகையில், இந்தியா முழுவதிலும் உள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களை, முதல்நிலை மையங்களாக உருவாக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. முதல் தொகுதியில், தமிழ்நாட்டில் உள்ள 4 தொழில் பயிற்சி நிறுவனங்கள் நிலையுயர்த்தப்படும்.

## குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

105.மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த 15 அம்சத் திட்டத்தில், குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதும், ஓர் அம்சமாகும். இதற்கு, அரசின் பல துறைகள், ஏனைய நிறுவனங்கள், குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவைப்படுகிறது. மாநிலத்தில் உள்ள குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்காக, மாநிலச் செயல் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்தச் செயல் திட்டத்தை மேற்கொண்டு செயற்படுத்துவதற்காக, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கங்களை ஏற்படுத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

106.கட்டுமானத் தொழிலாளர்களின் பயனுக்கான ஓய்வூதியத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என இவ்வரசு குறிப்பிட்டிருந்ததை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிந்திருக்கலாம். இத்திட்டத்தின் விவரங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன என்பதையும், 2005-2006 ஆம் ஆண்டில் இது செயல்படுத்தப்படும் என்பதையும் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏனைய அமைப்பு சாரா துறைத் தொழிலாளர்களின் நல்வாழ்விற்காக இதுபோன்ற திட்டத்தை வகுக்கவும் இவ்வரசு கருதியுள்ளது.

## சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோருக்கு தொழில்நுட்பப் பூங்கா

107.சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், இரண்டாம் நிலைத் துறையின் முதுகெலும்பாக விளங்குவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். உலகமயமாக்கல் நடைமுறைக்கு வந்தபிறகு உருவாகியிருக்கும் மாறிய சூழ்நிலையில் சிறு

மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆற்றவேண்டிய பங்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. மாநிலத்தின் நிதியுதவி நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நிதியத்தின் கீழ், சலுகை வட்டி விகிதங்களில் கடன்களை வழங்கி வருகிறது. நடப்பாண்டில், 200 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதும், இது முந்தைய ஆண்டை விட 25 சதவிகிதம் அதிகம் என்பதும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்வைத்தரும் என்று நம்புகிறேன். சிறு தொழில் பிரிவுகள், சிறந்த முறையில் சந்தைப் போட்டியை எதிர்கொள்வதற்காக, அவற்றின் திறன் மேம்படுத்தப் படுவதை இந்த அரசு உறுதி செய்துவருகிறது. இதற்கென சிறந்த கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதில் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. தொழில் கட்டமைப்பு வசதி நிலையுயர்த்தல் திட்டத்தின் (Industrial Infrastructure Upgradation Scheme) கீழ், சென்னை, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய 3 இடங்களில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், சென்னையில் அம்பத்தூர், திருமுடிவாக்கம் மற்றும் திருமழிசை தொழிற்பேட்டைகளும் நிலையுயர்த்தப் படவுள்ளன. ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவன (UNIDO) நிதியுதவியுடன், கோயம்புத்தூரில் இலகு ரகப் பொறியியல் (light engineering cluster) தொகுப்புத் தொழிலக மேம்பாட்டிற்கான திட்டம் ஒன்றையும் அரசு செயல்படுத்தி வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டில், சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ), மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில், மேலும் இரண்டு மகளிர் தொழில் பூங்காக்களையும், ஓரளவு நகரப் பகுதிகளில் சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோருக்காக இரண்டு தொழில் நுட்பப் பூங்காக்களையும் உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கும்.

## சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்

108. 2000 ஆம் ஆண்டிற்கு முன்னர் தரமற்ற முறையில் நிருவகிக்கப்பட்டுவந்ததாகக் கருதப்பட்ட சென்னை மாநகரம், நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் திறமைவாய்ந்த, ஆற்றல்மிகு தலைமையின் கீழ், துடிப்பான நிருவாகமும் பல்முனை வளர்ச்சியும் கொண்ட மாநகராகத் தன்னை மீண்டும் நிலைநிறுத்திக் கொண்டுள்ளது என்பதை அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர் என்பதில் ஐயமில்லை. சென்னை மாநகரின் இவ்வியத்தகு மாற்றம், உலகளாவிய பாராட்டுதலைப் பெற்றுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 18,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சென்னைப் பெருநகரப் பகுதி மேம்பாட்டுக்கான பத்தாண்டுப் பெருந்திட்டமொன்றை, 2003ஆம் ஆண்டில் தொடங்கிவைத்தார்கள். இத்திட்டம், கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் உருவாக்குவதற்குத் தேவையான ஒட்டுமொத்த முதலீடுகளுக்கு வகை செய்கிறது. இத்திட்டம், சென்னை மாநகர், நாட்டிலேயே சிறந்த விருப்பத் தேர்விடமாக உருவாவதற்கு வகை செய்துள்ளது. இத்திட்டம் மொத்தம் 2054.09 கோடி ரூபாய் முதலீட்டில், 2005-2006ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## என்றென்றும் சென்னை – ஒரு புதிய திட்டம்

109. நிலையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதோடு, நகர்ப்புற அழகுணர்வை மேம்படுத்தியும், தூய்மை மற்றும் சுகாதாரத்தைப் பேணிக்காக்கும் வகையிலும், இப்பணிகள் சிறப்பாகச் செயற்படுத்தப்படுவது உறுதி செய்யப்படவேண்டும். நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், சென்னை மாநகர் பராமரிப்பில் மக்களின் நெருக்கமான பங்கேற்பிற்கும், அதனை மேலும் சிறந்த உறைவிடமாக உருவாக்குவதற்கும் ஏற்றதொரு வழிமுறையாக "என்றென்றும் சென்னை – ஒரு புதிய திட்டம்" ("Chennai Forever Initiative") என்ற இயக்கத்தினை அண்மையில் அறிவித்தார்கள். இந்தத் திட்டத்தில், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், சாலையோர நடைபாதைகள், சாலை மையத் தடுப்பு, துப்புரவு, தூய்மை, குப்பை அகற்றுதல், நீர்வழிகள் மற்றும் சாலைப் போக்குவரத்து மேலாண்மை முதலியவற்றின் அனைத்து அம்சங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். மக்களின் முழுமையான பங்கேற்புடன், குறிப்பிட்ட கால அளவிற்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாடுகள் பற்றி, தொடர்ந்து விவாதிக்க பொருத்தமான அமைப்பு ஒன்று உருவாக்கப்படும்.

110. சென்னை மாநகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சாலைக் கட்டமைப்பில், அவசியமான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள, இந்த அரசு, ஏற்கெனவே 369.97 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியுள்ளது என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர் என நம்புகிறேன். சென்னை மாநகரில் விரைந்து பெருகிவருகின்ற போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு, பெரிய விரைவுப் போக்குவரத்துத் திட்டம் உள்ளிட்ட, மக்களுக்கான பல்வேறு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தும் சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. "RITES" (Rail India Techno Economic Services) நிறுவனத்துடன் இணைந்து, டெல்லி பெருநகர் இரயில் நிறுவனம்

(DMRC), சென்னையில் பெருநகர இரயில் போக்குவரத்து மேம்பாட்டுக்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது என்பதை அறிந்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர் என நம்புகிறேன். இதனை அடுத்து, சென்னைக்கானப் பெருநகர இரயில் திட்டத்தை 5086.85 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்படும். சென்னைப் பெருநகர்ப் பகுதியில், விரிவான கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியை ஏனைய ஆதாரங்களிலிருந்து திரட்டுவதற்கு ஏதுவாக, கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்திலிருந்து சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு வழங்குவதற்காக, நாங்கள் 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 200 கோடி ரூபாய் ஆதார நிதியாக (seed money) ஒதுக்கியுள்ளோம். உலக வங்கி நிதியுதவியுடன், மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்–III ன் கீழ், 540 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் சாலை மற்றும் போக்குவரத்து மேம்பாட்டுக்கான சிறப்புக் கூறுத் திட்டத்தை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், மாநகரில் சாலைப் போக்குவரத்து மற்றும் வாகன நெறிமுறைப் (Traffic and Transportation Services) பணிகளை மேம்படுத்த இது பெரிதும் உதவும்.

## நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள்

111. தமிழ்நாட்டின் பெரும்பகுதிகள் நகரமயமாகி வருகின்றன. இம்மாநிலத்தில் உள்ள நகர்ப்பகுதிகள் திட்டமிட்ட முறையில் வளர்ச்சி அடைவதற்குத் தேவையான உரிய கொள்கைகளை வகுக்கவும், 10ஆவது திட்ட காலத்தில் நகர்ப்பகுதி கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக கணிசமான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யவும், இந்த அரசு உறுதிபூண்டுள்ளது.

112. நகர்ப்பகுதி கட்டமைப்பு வசதித் திட்டங்களுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் தொகைகளுக்கும் மேலாக பெருமளவில் நிதியாதாரங்கள் தேவைப்படுவதால், இந்நோக்கத்திற்காக உலக வங்கி மற்றும் உள்நாட்டு மூலதனச் சந்தைகள் போன்ற பலதரப்பட்ட நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறும் முயற்சியில், இவ்வரசு வெற்றி கண்டுள்ளது. நகர்ப்பகுதிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கும், இந்நோக்கத்திற்காக பயனுள்ள நிறுவன ரீதியிலான அமைப்புகளை உருவாக்குவதற்கும், மாநில அரசு மேற்கொண்ட ஒரு பெரும் முயற்சியாக உலக வங்கியின் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள் I மற்றும் II வடிவமைக்கப்பட்டன.

113. 750 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் II, 2004 நவம்பரில் இறுதிக் கட்டத்திற்கு வந்தது. திட்டங்களை வடிவமைத்து, செயல்படுத்த, கணிசமான அளவு திறனை உருவாக்குதல், நவீன கணக்கு வைப்பு முறைகளைக் கொண்டுவருதல், நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில் மின்னாளுகையை அறிமுகப்படுத்துதல் ஆகியவை, இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும். தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் II–ன் கீழ், 675 கோடி ரூபாய் செலவில், குடிநீர் வழங்கல், துப்புரவு, அகச்சாலைகள், திடக்கழிவு மேலாண்மை போன்றவற்றிற்கும், பேருந்து நிலையங்கள், சுடுகாடு போன்ற ஏனைய இன்றியமையாத குடிமை வசதிகளைச் செய்து கொடுப்பதற்குமான பணிகள், மேற்கொள்ளப் பட்டு முடிக்கப்பட்டன. இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டதையடுத்து, இம்மாநிலத்தில் உள்ள சென்னைப் பெருநகரப் பகுதியும் ஏனைய நகர்ப்பகுதிகளும் பயனடையும் வகையில், 1,650 கோடி ரூபாய் என்ற பெருமளவிலான ஒதுக்கீட்டில், இத் திட்டத்தின் III ஆம் நிலை பணிக்கு அனுமதியளிக்கக் கோரி இந்த அரசு உலக வங்கியை அணுகியுள்ளது. இத்திட்டத்திற்கு உலக வங்கியின் அனுமதி விரைவில் கிடைக்கும் என நம்புகிறோம்.

114. நகரங்களில், குடிசைப் பகுதி மக்களின் உறைவிடங்களின் தரம் மேம்படுத்தப்பட்டு, நகரக் கட்டமைப்போடு ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்பதில் இந்த அரசு எப்போதும் உறுதியாக இருந்து வருகிறது. தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இம்மாநிலத்தின் நகர்ப்பகுதியிலுள்ள குடிசைப் பகுதிகளில், 2004-2005 ஆம் ஆண்டில், 54.57 கோடி ரூபாய் செலவில் குடிமை வசதிகள் மற்றும் குடியிருப்புகளின் நிலை உயர்த்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. 2005-2006 ஆம் ஆண்டிலும் இது தொடரும்.

## குடிசைவாழ் மக்களுக்குப் புதிய குடியிருப்புகள்

115. சென்னையில் ஆற்றோரங்களில் வசித்து வரும் குடிசைவாழ் மக்களை, அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய குடியிருப்புகளில் குடியமர்த்தும் பொருட்டு, 18.25 கோடி ரூபாய் செலவில், செம்மாஞ்சேரியில் 1,404 குடியிருப்புகளைக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின் கீழ், 552 குடும்பங்களுக்கு 6.90 கோடி ரூபாய் செலவில் புதிய குடியிருப்புகளைக் கட்டவும்



உத்தேசிக்கப்பட்டுள்ளது. மற்ற நகரங்களில் 23.30 கோடி ரூபாய் செலவில் வறிய குடும்பங்களுக்காக 5,000 தனி வீடுகள் கட்டப்படும். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் இத்திட்டத்தை 2005-2006ஆம் ஆண்டில் நிறைவேற்றி முடிக்கும். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கட்டிய அனைத்துக் குடியிருப்புகளும் 19 கோடி ரூபாய் செலவில் பழுதுபார்க்கப்பட்டு, புதுப்பிக்கப்படும் என்று இந்த அரசு ஏற்கெனவே உறுதியளித்துள்ளது.

116. சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கவும், சுகாதார இடர்பாடுகளைத் தடுக்கவும், திடக்கழிவு மேலாண்மையை மேற்கொள்வது, நகர உள்ளாட்சி மன்றங்களின் ஒரு கட்டாயமான பணி ஆகும். உச்சநீதிமன்றம் ஏற்படுத்திய ஒரு குழு, திடக்கழிவு மேலாண்மை குறித்து, தொலை நோக்குடைய பரிந்துரைகளை அளித்துள்ளது. வாகனங்கள் வாங்குதல், மக்கு உரம் தயாரிக்கும் இடங்கள் மற்றும் திடக் கழிவு மாற்று நிலையங்களின் மேம்பாடுகள், செய்தி, கல்வி, தகவல் தொடர்பு நடவடிக்கைகள் (Information, Education and Communication) ஆகியவை போன்ற, திடக்கழிவு மேலாண்மைக்கான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்காக, சென்னையைச் சுற்றிலும் உள்ள நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்கும் வகையில், 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

117. நகர்ப் பகுதி உள்ளாட்சி மன்றங்களில் மின் ஆளுகையை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அனைத்திலும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் வழங்குதல், சொத்து வரி மற்றும் தண்ணீர்க் கட்டணங்கள் செலுத்துதல், கட்டட வரைபடத்திற்கு ஒப்புதலளித்தல், திடக்கழிவு மேலாண்மை, நிதிக் கணக்கிடும் முறை, பணியாளர் மேலாண்மை முறை, மக்கள் தொகை கணக்கெடுப்பு, மருத்துவமனை மேலாண்மை முதலான சிறப்பு அம்சங்களைக் கொண்ட, 18 தொகுப்புகளுடன் (modules) கூடிய பயன்பாட்டு மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு நிறுவப் பட்டுள்ளது.

### தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஊக்கம்


118. மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த ஐந்து தெளிவான கோட்பாடுகளுடன் கூடிய, 2002ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பக் கொள்கை, இம்மாநிலத்தின்பால் முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்க்கும் கலங்கரை விளக்கமாகச் செயல்படுவதோடு, மின் ஆளுகை சிறப்பு முயற்சிகளுக்குத் தேவையான ஒரு உந்து சக்தியாகவும் விளங்குகிறது. வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் விரைவான வளர்ச்சிக்கு முக்கிய ஊக்கு சக்தியாகத் திகழும் தகவல் தொழில்நுட்பம் சார் பணிகள் மற்றும் தகவல்




தொழில்நுட்ப வன்பொருள் ஆகியவற்றுக்கான முதலீடுகளை அதிகரிக்க, உரிய துறைவாரியான கொள்கைகளை வகுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

### தொழில் முனைவோரின் விருப்பத் தேர்விடமான சென்னை

119. இந்த அரசு எடுத்த தொடர்ச்சியான முயற்சிகளின் பயனாக, இம்மாநிலத்தின் ஏற்றுமதி, சுமார் 8,000 கோடி ரூபாயை எட்டி, ஏற்றுமதியின் வாயிலாக அந்நியச் செலாவணியை ஈட்டுவதில் முன்னிலை வகிக்கும் மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இந்த அரசு வகுத்துள்ள இசைவான



கொள்கைகள் மற்றும் ஊக்க உதவிகளின் காரணமாக, பல பன்னாட்டு நிறுவனங்கள், அவற்றின் அலுவலகங்களைச் சென்னையில் ஏற்படுத்தியுள்ளன என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர் அனைவருக்கும் உவகைத்தரும் ஒரு செய்தியாகும். இந்த அரசு, சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உலகத் தரம் வாய்ந்த பல்வேறு தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை ஏற்படுத்துவதற்கான வசதிகளை உருவாக்கித் தந்துள்ளது. இதனால், உலகத்தரம் வாய்ந்த தகவல் தொடர்பு வசதிகள் மற்றும் ஏனைய கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய, ஆறு மில்லியன் சதுர அடி பரப்பில் தகவல் தொழில்நுட்ப இடவசதி கூடுதலாக உருவாகும். மேலும், இதனால் கூடுதலாக ஒரு இலட்சம் தொழில் முறை வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டும். சென்னை மாநகரம், தற்போது தொழில் முனைவோரின் விருப்பத் தேர்விடமாகியுள்ளது என்பது தெளிவாகி இருப்பதால், ஹெவ்லெட் பேக்கார்டு(Hewlett Packard), பிலிப்ஸ் (Philips), அக்சென்சர் (Accenture), ஜெனரல் எலெக்ட்ரிக் (General Electric) மற்றும் விர்சுசா (Virtusa) ஆகிய நிறுவனங்கள் சென்னைக்கு வந்துள்ளன. கோயம்புத்தூரும் இரண்டாம் நிலை நகரங்களும் வேகமான முன்னேற்றதுடன், வளர்ச்சி பெற்று வருகின்றன.

## அறிவுசார் தொழில் நகரியம்

120. சென்னை அருகே, சோழிங்கநல்லூரில் அறிவு சார் தொழில் நகரியத்தை (Knowledge Industry Township) ஏற்படுத்துவதற்கான பணியை இந்த அரசு தொடங்கியுள்ளது. 500 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்தப்படும் இந்த நகரியம், தனித் தனி வளாகங்களில் தகவல் தொழில்நுட்ப முன்னணி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உட்பட பல்வேறு வகை தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சிக்கான வசதிகளைக் கொண்டிருக்கும். உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, அறிவுசார் தொழில் நகரியம் மற்றும் ஏனைய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை இணைக்கும் 6 வழித் தடத்தைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப விரைவுப்பாதை (IT Express way) அமைக்கும் பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன.

121. இந்தியத் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஐம்பெறும் நிறுவனங்களாகிய, டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், விப்ரோ, இன்போசிஸ், சத்யம் மற்றும் எச்.சி.எல். ஆகியவை சென்னையில் தங்களின் செயல்பாடுகளைப் பெருக்குவதற்கான மாபெரும் விரிவாக்கத் திட்டங்களை அறிவித்துள்ளன. பன்னாட்டு ஆலோசனை நிறுவனமான கார்ட்னர் (GARTNER) நிறுவனம், அண்மையில் நடத்திய ஆய்வுகளில், சென்னை மாநகரம், தகவல் தொழில்நுட்பத்திற்கான முதன்மைத் தேர்விடமாக உருவாகும் என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. சென்னை மாநகரை, இந்தியாவின் உலகக் கிழக்கு நுழைவாயிலாக (India's Eastern Gateway to the World) உருவாக்க வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் காரணமாகத்தான், இவை அனைத்தும் சாத்தியமாகியுள்ளன.

## சுற்றுலா வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு உயர்வு

122. 2003ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட ஏழு அம்ச செயல் திட்டம், 2004-2005 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை குறித்த திட்டங்களுக்கு வழிகாட்டியாகத் தொடர்ந்து விளங்குகிறது. செட்டிநாடு (காரைக்குடி உட்பட), பிச்சாவரம் மற்றும் பழவேற்காடு ஆகியவற்றை 3.65 கோடி ரூபாய் செலவில் சுற்றுலா மையங்களாக மேம்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. தென்னிந்திய சுற்றுலா மன்றம் (South India Tourism Council) தோற்றுவிக்கப்பட்டிருப்பது, சுற்றுலா மேம்பாட்டிற்கான தென் மாநிலங்களின் கூட்டு முயற்சிகளுக்கு ஒரு பெரும் உத்வேகம் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடு, உள்ளூர் சேவைப்பணித் தொழிலுக்கும் பெரிய அளவில் ஊக்கம் அளிக்கும். 2000-2001ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கான ஒதுக்கீடு வெறும் 5





கோடி ரூபாயாக இருக்க, 2005-2006 ஆம் ஆண்டில் இதற்கான ஒதுக்கீடு 32.42 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஓட்டல்களில் தங்கும் அறைகளை முன் பதிவு செய்வதற்கும், அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய தொகுப்புப் பயணத்திற்கு (Package Tour) முன்பதிவு செய்வதற்கும் –இணையதள வழி முன்பதிவு மற்றும் கட்டணம் செலுத்தும் வசதிகளைத் தொடங்கியுள்ள முதல் மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்ற சிறப்பை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பெற்றுள்ளது. சுற்றுலாவுக்கான மொத்த ஒதுக்கீடு 32.42 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**நல்லாட்சிக்கான மின் ஆளுகை**

123. முக்கியத் துறைகளில், சிறந்த பணி வசதியை வழங்குவது தமிழ்நாட்டின் சிறப்பம்சமாகும். மின் ஆளுகையின்மூலம், இதை மேலும் மேம்படுத்த முடியும். பொதுமக்களுக்குச் சிறந்த பணி வசதியை அளிப்பதற்காக, மின் ஆளுகைத் திட்டங்களை மேம்படுத்துவதற்குப் பொதுமக்கள் பெருமளவில் தொடர்பு கொள்கின்ற பத்துத் துறைகளை/ முகவரமைப்புகளை அரசு இனங்கண்டறிந்துள்ளது. இந்தத் துறைகள், தங்களது செயல்முறைகளை மறு ஆய்வு செய்து, மக்களுக்குப் பணி வசதிகளை அளிப்பதற்கு ஆகும் செயல்பாட்டுக் கால அளவைக் குறைக்கும். இந்த மறுஆய்வு செய்யப்பட்ட செயல்முறைகளின் அடிப்படையில், துறைகள், திருத்தியமைக்கப்பட்ட மக்கள் சாசனங்களை வெளியிடும். மாவட்ட நிருவாகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், வணிகவரித் துறை, முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவுத் துறை, கருவூலத்துறை மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், மாநகராட்சிகள் போன்ற சேவைத் துறைகள், இவ்வாறு இனங்கண்டறியப்பட்ட துறைகள் ஆகும். மின் ஆளுகைக்கான கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், தமிழ்நாடு மாநில விரிபரப்பு வலையமைப்பு (Tamil Nadu Statewide Area Net Work) வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இது, மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். இத்தகைய புதிய முயற்சிகள் அனைத்தும், மக்களுக்குப் பயனளிக்கும் வகையில், சேவைத் துறையில் சிறந்த முன்னேற்றங்களை உருவாக்கும்.

**ஆடைகள் பூங்கா**

124. 1.1.2005 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்துள்ள உலக வர்த்தக நிறுவன (WTO) விதிமுறைகளின் கீழ், துணித் தொழில் துறைக்கான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இதனால், தமிழ்நாட்டில் உள்ள துணித் தொழில் பிரிவுகள் தங்களுடைய தொழிலை விரிவுபடுத்துவதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், பெரும் வாய்ப்புகள்




உருவாகியுள்ளன. திருப்பூரில், 15.51 கோடி ரூபாய் செலவில், ஆடைகள் பூங்கா ஏற்படுத்தப்பட்டுள்ளது. காஞ்சீபுரம் மற்றும் மதுரைக்கு அருகில் புதிய ஆடைகள் பூங்காக்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. 49.83 கோடி ரூபாய் செலவில் பல்லடம், குமாரபாளையம் மற்றும் ஆண்டிபட்டி ஆகிய

இடங்களில், நாடா இல்லா புதிய விசைத் தறிப் பூங்காக்கள் நிறுவப்படும் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவர். இந்த அரசு, 21.81 கோடி ரூபாய் செலவில், காஞ்சீபுரத்தில் துணித் தொழில் மைய கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தைச் (Textile Centre Infrastructure Development Scheme) செயற்படுத்தி வருகிறது.

125.புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள் குறித்து, வளர்ச்சி ஆணையாளர் தலைமையிலான பணிக்குழு, துணித் தொழில் துறையினருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. கடலூருக்கு அருகில் "சிப்காட்" நிறுவனத்தின் மூலம் "துணித் தொழில் செய்முறைப் பூங்கா" (textile processing park) ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### நெசவாளர் குழந்தைகளுக்கு படிப்பு உதவித்தொகை

126.பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக சீருடை வழங்கும் திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில் 42 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயற்படுத்தப்படும். இலவசச் சேலைகள், வேட்டிகள் வழங்கும் திட்டம், 2005-2006 ஆம் ஆண்டில் 175 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் செயற்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், 111 இலட்சம் பெண்களுக்குச் சேலைகளும், 111 இலட்சம் ஆண்களுக்கு வேட்டிகளும் இலவசமாக வழங்கப்படும். நெசவாளர் சங்கங்கள் இலாபகரமாக இயங்குவதற்கும், உலக சந்தையில் போட்டியிட இயலும் வகையிலும், புதிய வடிவமைப்புகளை அறிமுகப் படுத்துவதற்கான புதிய திட்டமொன்று தொடங்கப் பட்டுள்ளது. இத்திட்டங்கள் ஏழை எளியோருக்கு ஆடைகள் கிடைப்பதை உறுதி செய்வதோடு, மாநிலத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்த வேலைவாய்ப்பிற்கும் வழிவகைசெய்யும். நெசவாளர்களுக்காகப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட காப்புறுதித் திட்டம், விபத்து காரணமாக அல்லது இயற்கையாக மரணம் ஏற்படும் நேர்வில், அக்குடும்பத்தினருக்கு மிகத் தேவையான பாதுகாப்பை அளிக்கிறது. இத்திட்டம் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் பயிலுகின்ற நெசவாளர்களின் குழந்தைகளுக்குப் படிப்புதவித் தொகை வழங்கவும் வகை செய்கிறது.




### துணித் தொழில் பூங்கா

127.ஒரே வளாகத்தில் நெசவு செய்தல், தைத்தல், வடிவமைத்தல், செயல்முறைப்படுத்தல் ஆகியவற்றிற்கு அதி நவீன வசதிகளை வழங்கும் வகையில், ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி (UNIDO) நிறுவனத்தின் நிதியுதவியுடன், 60 கோடி ரூபாய் செலவில் கரூரில் ஒருங்கிணைந்த துணித் தொழில் பூங்கா ஒன்றை இந்த அரசு உருவாக்கும்.

128.மாசுக் கட்டுப்பாட்டுடன் கூடிய தொழில்நுட்பத்தைப் பின்பற்றும் செயல்முறைப் பிரிவுகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், 5 சதவிகித வட்டி உதவித் தொகை அளிக்கும் புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும். பயன்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படும் இந்த வட்டிவகையிலான உதவித் தொகை, தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறும் சிறிய-நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும். மத்திய அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய மூலதன உதவித் தொகையோடு கூடுதலாக இந்தத் தொகை வழங்கப்படும்.

### தறிகளை நிலையுயர்த்தும் திட்டம்

129.விசைத்தறி துறையை நவீனப்படுத்தும் பணி, புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட வேண்டும். துணித் தொழில் மேம்பாட்டு நிதித் திட்டம் தமிழ்நாட்டின் நெசவுப் பிரிவுகளை நவீன்மயமாக்க இதுவரை உதவிடவில்லை. பழமையான தானியங்கித் தறிகளே இன்னும் தமிழகத்தில் இயங்கும் நிலை உள்ளது. தொகுப்பு அடிப்படையில் தறிகளை நிலையுயர்த்தும் திட்டமொன்றைச் (Cluster based Loom Upgradation Scheme) செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், சொந்தமாகத் தறி வைத்திருப்போர்


மற்றும் நெசவாளர்கள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ இணைந்து, தானியங்கி அல்லது நாடா இல்லா தறிகளைத் தொகுப்பாக நிறுவி தறிகளை நவீனப்படுத்திக்கொள்ள முடியும். நாடா இல்லாத தறியாக இருந்தால், பொருளாதார ரீதியில் ஆதாயகரமாக இயங்க குறைந்தபட்சத் தொகுப்பு 6 தறிகளாகவும், தானியங்கித் தறிகளாக இருந்தால், குறைந்தபட்சத் தொகுப்பு 12 தறிகளாகவும் இருக்கவேண்டும். இத்திட்டத்தின் கீழ், வணிக வங்கிகளிடமிருந்தும், ஏனைய நிதி நிறுவனங் களிடமிருந்தும் நிதியுதவி பெற வசதி செய்து கொடுக்கப்படும். இதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், சிறிய, நடுத்தர தொழில் நிறுவனங்கள் அவர்களுடைய தறிகளை நவீனப்படுத்துவதற்காகப் பெறும் குறித்தகால கடன்களில், பயன்படுத்தப்படும் கடனுக்குண்டான வட்டியில், 5 சதவிகிதத் தொகையை உதவித் தொகையாக அரசு வழங்கும். இவ்வாறு விசைத்தறித் துறையை நவீனப்படுத்த இந்த அரசு தக்க ஊக்கம் அளிக்கும்.

### ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புறுதி வளையம்

130. நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஏழை எளியோரைப் பாதுகாப்பதற்காக ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புறுதி வளையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு எப்போதும் அதிக முக்கியத்துவம் அளித்து வந்துள்ளார்கள். 1991ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதை அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1992 ஆம் ஆண்டில், இத்தகைய சமூகப் பாதுகாப்புறுதி வளையம் ஏற்படுத்தும் கொள்கையை அறிவித்தார்கள். இதனால், பொருளாதாரம் சீரமைக்கப்படுகிற அதே வேளையில், ஏழை எளிய மக்கள் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதும் உறுதி செய்யப்படுகிறது. நிதிநிலைச் சீரமைப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள சூழ்நிலையிலும், இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களின் அடிப்படையில் பொருளாதாரம் மேலும் சீரமைக்கப்பட்டுவரும் சூழ்நிலையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இக்கோட்பாட்டிற்கு மீண்டும் புத்துயிரூட்டியுள்ளார்கள். 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் சமூகப் பாதுகாப்புறுதி வளையத்திற்கான நிதியொதுக்கம் முன்னெப்போதும் இருந்திராத அளவாக 7,528.09 கோடி ரூபாயாக இருக்கும். இதில், உணவுப் பாதுகாப்பு, தொடக்கச் சுகாதார உதவி, உடை, தொடக்கக் கல்வி, தங்குமிடம் மற்றும் வாழ்வாதார உதவி மற்றும் நலன் ஆகியவை அடங்கும். இவ்வாறாக, தமிழ்நாட்டில் ஏழை எளிய மக்களைப் பாதுகாப்பதோடு நின்றுவிடாமல், அவர்களுக்கு மேம்பட்ட வாழ்க்கை அளிப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளை அதிகரிக்கவும் இவ்வரசால் பெரு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

### பொது விநியோக முறை மூலம் சீரிய அரிசி விநியோகம்

131. இந்த அரசு, மக்களின் ஒவ்வொரு தேவையையும் அறிந்து நிறைவு செய்யும் மக்களின் அரசாக இப்போதும், எப்போதும் நிலைத்திருக்கும். கடுமையான வறட்சியினால் அண்டைய மாநிலங்களில் பட்டினிச் சாவுகள் ஏற்பட்ட வேளையில்கூட, இந்த அரசு, தமிழ்நாட்டில் மிகவும் திறன் வாய்ந்த, சீரிய கட்டமைப்பு கொண்ட, பொது விநியோக முறையின் மூலம், எவ்விதத் தங்குதடையுமின்றி அரிசியை விநியோகித்து, மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் உணவுப்




பாதுகாப்பு அளிக்கப்படுவதை உறுதி செய்துள்ளது. எளிதில் சென்றடைதல், பயன்பாடு, வாடிக்கையாளர் மன நிறைவு, மற்றும் தேவைக்கேற்ற இருப்பு ஆகிய அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு, நாட்டிலுள்ள பொது விநியோக முறை குறித்து அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தனி ஆய்வு ஒன்று, தமிழ்நாட்டின் பொது விநியோக முறை, நாட்டிலேயே மிகச் சிறந்ததென அறிவித்துள்ளதைப் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

132. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பையடுத்து, புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்காக 49,31,757 மனுக்கள் வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டன. இதில், 37,70,446 மனுக்கள், புதிய குடும்ப அட்டைகளைப் பெறத் தகுதியுடையவை எனக் கண்டறியப்பட்டன. இத்தகைய தகுதியுடைய அனைத்து குடும்பங்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கும்



..... தொடர்ச்சி 45ஆம் பக்கம்



# பன்னாட்டு ரோட்டரி மாவட்டம் 3230

கூர்த்த மதியும் நல்லிதயமும்
ஒரு சேர வாய்க்கப் பெற்று
தன்னுடைய சாதனைகளால் வரலாற்றில் தொடர்ந்து
தடம் பல பதித்து வரும்,
தொலைநோக்குப் பார்வை கொண்ட
தலைவி, தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா**
அவர்களுக்கு வழங்கும்

# பாராட்டு இதழ்

தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும், ஓடிச் சென்று உதவும் இரக்க சிந்தை; தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் சிசுக் கொலைத் தடுப்பு; அனைத்து மகளிர் காவல்நிலையங்கள் உருவாக்கம்; நாட்டிலேயே முதன்முதலாகப் பெண்கள் அதிரடிப்படையை அறிமுகப்படுத்தியது; பெண் குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி ஆகிய மகளிரை மையமாகக் கொண்ட திட்டங்களின் வாயிலாக, சமுதாயத்தில் மகளிர் ஏற்றம் பெற வழிவகுத்த பாங்கு; மாநிலத்தில் பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும் முடிவுக்குக் கொண்டு வருவதில் காட்டிய தீரம்; சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினைக்கு, தொலைநோக்குச் சிந்தனையுடன், நிரந்தரத் தீர்வு காண்பதில் காட்டிய உறுதிப்பாடு; சுற்றுச்சூழல் மீதும் வருங்காலத் தலைமுறையினர் மீதும் கொண்டுள்ள அக்கறையின் வெளிப்பாடாய் அமைந்த மழைநீர் சேகரிப்புத் திட்டம்; இயற்கைச் சீற்றம் ஏற்பட்டபோதெல்லாம், அது எவ்வளவு சிறியதாக இருப்பினும், பாதிக்கப்பட்டவர்கள்பால் அவர் காட்டிய பரிவு; அண்மையில் சுனாமி என்னும் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவி புரிவதில் காட்டிய கடுவேகம்; திருட்டு வீடியோ ஒழிப்புச் சட்டம் என்னும் துணிகரச் சட்டம் இயற்றி திரைப்படத்துறைக்குப் புத்துயிரூட்டியது; சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டில் அவர் காட்டும் உறுதி ஆகிய அவருடைய சீர்சால் பண்புகளைப் பாராட்டி, கௌரவிப்பதை நாங்கள் பெற்ற பேறாகக் கருதிப் பெருமை கொள்கிறோம்.

இன்று, 100 அகவை காணும் உலகின் முதலாவது சேவை அமைப்பான பன்னாட்டு ரோட்டரி சங்கம், 2005ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23ஆம் நாளான இன்று **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு இந்த வாழ்நாள் சாதனையாளர் விருதினை** அளித்து கௌரவிப்பதில் பேருவகை அடைகிறது.

ரோட்டேரியன் **பெஞ்சமின் செரியன்**
மாவட்ட கவர்னர்
பன்னாட்டு ரோட்டரி சங்கம்

# தொழில் உற்பத்தித் துறையில் அந்நிய முதலீட்டை ஈர்த்துவரும் முதன்மை மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் உயர்ந்துள்ளது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை



**ரோ**ட்டரி அமைப்பின் நூற்றாண்டு விழாவில் உங்களோடு கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நூறாண்டுகள் மனித சேவையில் ஈடுபட்டுள்ள ஓர் அமைப்பின் மாபெரும் விழாவில் கலந்து கொள்வது உண்மையிலேயே பெருமைக்குரியது. அதிலும் இந்த விழாவில் சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்கான வாழ்க்கையை மேம்படுத்த நான் எடுத்த நடவடிக்கைகளை அங்கீகரித்து எனக்கு ரோட்டரி அமைப்பு வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருதையும், பால் ஹாரிஸ் சேவையாளர் அங்கீகார விருதையும் ஏற்றுக் கொள்வது மிகவும் பெருமைக்குரியது என்று நான் கருதுகிறேன்.

பெண்கள் சுயபலத்தைப் பெறும் வகையில் அவர்களின் தொய்வில்லாத முன்னேற்றத்திற்கு நான் வகுத்து நடைமுறைப்படுத்திய திட்டங்களுக்காகவும், இயற்கைச் சூழலைப் பாதுகாக்க மழைநீர் சேமிப்புக்காக நான் நடைமுறைப்படுத்திய திட்டங்களுக்காகவும் இந்த விருதை எனக்கு அளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. உண்மையில், மனித குல மேம்பாட்டிற்காக பலருடன் இணைந்து முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் உயர்ந்த மாண்புகளை உறுதியாகக்

கடைப்பிடித்து, மனித குலத்திற்கு அயராது உழைத்துவரும் ஒரு மாபெரும் அமைப்பிலிருந்து இப்படி ஒரு விருதைப் பெறுவது உண்மையிலேயே பெருமைக்குரிய விஷயமாகும். ரோட்டரி அமைப்பின் நோக்கங்களும் என்னுடைய பொதுவாழ்க்கையில் வடிவமைத்த நோக்கங்களும் ஒருவகையில் ஒன்றுபட்டவைதான்.

**எல்லாப் பிரிவினருக்கும் நீதி**

தமிழ்நாட்டு மக்கள் மீண்டும் என்னிடம் தமிழக அரசின் முதலமைச்சர் பொறுப்பைக் கொடுத்துள்ளனர்.




என்னுடைய வாழ்க்கையில் தமிழக மக்களுக்காக என்னை அர்ப்பணித்துக் கொள்ளத் தமிழக மக்கள் மீண்டும் எனக்கு இந்த வாய்ப்பை அளித்துள்ளனர் என்றே நான் கருதுகிறேன். இது மிகவும் அபூர்வமான வாய்ப்பாகும். உண்மையில் நான் எனது பொதுவாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் உண்மை, நம்பகத்தன்மை, எல்லாப் பிரிவினருக்கும் நீதி கிடைக்க வேண்டும்– குறிப்பாக எளியவர்களில் எளியோருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக அர்ப்பணித்து வாழ்ந்து வந்துள்ளேன். ஒருவிதத்தில் இக்கோட்பாடுகளுக்கு நான் கடமைப்பட்டுப் பணியாற்றி வருவது ரோட்டரி அமைப்பின் நோக்குகளை நிறைவு செய்வதாகவும் உள்ளது.

அதாவது, நாம் செய்வது உண்மையா? எல்லோருக்கும் நலன் தரக்கூடியதா?

எல்லோரிடமும் நம்பகத்தன்மையையும் நட்பையும் வளர்க்கக்கூடியதா?

எல்லோருக்கும் பயனளிக்கக்கூடியதா? என்பதை ஆய்ந்தே செயல்பட்டு வந்துள்ளேன். இந்த வகையில் ரோட்டரி அமைப்பின் இந்த உன்னதக் கோட்பாடுகள் மகாத்மா காந்தி இறுதியாக எழுதி வழிகாட்டிய கோட்பாட்டுடன் ஒத்திருப்பதைப் பார்க்க முடியும். மகாத்மா காந்தி **1948**இல் எழுதிய கோட்பாடு வருமாறு : “உனக்கு எப்போதெல்லாம் சந்தேகம் வருகிறதோ? எப்போதெல்லாம் உன் செயல் மீதே உனக்கு நம்பிக்கையின்மை ஏற்படுகிறதோ? அப்போது நீ ஒரு விஷயத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். நீ சந்தித்த மிக மிக எளிதான ஏழ்மையான முகத்தை நினைவு கூர்ந்துகொள். செய்யப் போகும் செயல் அதற்குப் பயனுள்ளதா? அதன்மூலம் அவருக்கு இலாபம் உள்ளதா? அவரின் சொந்த வாழ்க்கையில் அவர் உயர முடியுமா? வேறு வகையில் கூறினால் அதன்மூலம் பசியாலும் மனோரீதியாகவும் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்களுக்கு சுயராஜ்யம் ஏற்பட வழிவகுக்குமா? என்று உன்னை நீயே கேட்டுக் கொள்'' என்று கூறியுள்ளார்.

**ஊக்கமளிக்கும் விருது**

நான் எனது சொந்த வாழ்க்கையில் மகாத்மா காந்தியின் இந்த உயர்ந்த கோட்பாடுகளை உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறேன். இப்போது ரோட்டரி அமைப்பு அதன் நூற்றாண்டு விழாவில் எனக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதையும் பால் ஹாரிஸ் சேவையாளர் அங்கீகார விருதையும் வழங்கியுள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு நான் செய்த சேவைகள் ரோட்டரி அமைப்பின் நான்கு உயர்ந்த கோட்பாடுகளை நிறைவேற்றியுள்ளதால் தான் எனக்கு இந்த விருது வழங்கப்படுகிறது என்று நான் நம்புகிறேன். இந்த நேரத்தில் இந்தப் பெருமைக்குரிய விருதை தாழ்மையுடன் ஏற்றுக் கொள்கிறேன். இந்த உயர்ந்த விருதை எனக்கு அளித்ததற்காக இந்த உயர்ந்த அமைப்பிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக மக்களுக்கும் தேசத்திற்கும் மேலும் அர்ப்பணிப்புடன் செயல்பட இந்த விருது எனக்கு ஊக்கமளிக்கிறது; உற்சாகத்தை ஏற்படுத்துகிறது; உத்வேகத்தையும் ஏற்படுத்துகிறது.

**போலியோ ஒழிப்பில் தமிழகம் முதலிடம்**

மனிதக் குலத்திற்கு ரோட்டரி அமைப்பு செய்துவரும் மிக உயர்ந்த சேவை, போலியோ நோயை **2005**க்குள் ஒழிக்க எடுத்துவரும் உறுதியான நடவடிக்கைகள்தான். உலகில் வேறு எந்தத் தன்னார்வ அமைப்பும் போலியோ நோயை ஒழிப்பது போன்ற இவ்வளவு பெரிய நோக்கத்தோடு உறுதியேற்றுச் செயல்பட்டது இல்லை. தமிழ்நாட்டில் போலியோ நோயை ஒழிக்க அரசு மேற்கொண்ட போலியோ சொட்டு மருந்து இயக்கத்திற்கு அடித்தளமாக ஆயிரக்கணக்கான ரோட்டரி ஊழியர்கள் அரசுடன்

இணைந்து பணியாற்றியது பிரமிக்கத்தக்கது. இந்தத் தருணத்தில் அரசின் இந்த இமாலயச் சேவையில் தோள் கொடுத்த ரோட்டரி அமைப்பிற்கு நான் நன்றி சொல்லவும், பாராட்டவும் கடமைப்பட்டுள்ளேன். போலியோவை ஒழிக்கும் இந்தத் திட்டத்தில் தமிழகம் முதல் மாநிலமாக திகழ்வதுடன், போலியோவை ஒழித்த மாநிலமாகவும் திகழ்கிறது.

**ரோட்டரி அமைப்பின் சேவை**

கடந்த 2004 டிசம்பர் 26 அன்று சுனாமி அலைகள் தமிழகக் கடற்கரையைத் தாக்கிப் பேரழிவை ஏற்படுத்தியது. சுனாமி அலைகளின் வேகமும், அதன் அசுர பலமும் மிக அதிகமானது. அதனால் தமிழகக் கடற்கரையோரத்தில் இருந்த எல்லா கிராமங்களும், நகரங்களும் அழிக்கப்பட்டு விட்டன. இதுபோன்ற ஒரு பேரழிவு இதற்கு முன் எப்போதும் தமிழகத்தில் நடந்ததில்லை. சுனாமி அலைகள் தமிழ்நாட்டின் 8,010 உயிர்களைப் பலிவாங்கி உள்ளது. இலட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்தனர். தமிழ்நாட்டின் கடற்கரைப் பொருளாதாரம் முற்றிலும் அழிக்கப்பட்டது. மீனவர் சமுதாயம் அவர்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான வீடுகள், உடைமைகள் என அனைத்தையும் இழந்தனர்.

இப்படிப்பட்ட பேரழிவு நேரத்தில் செயலாற்ற எண்ணற்ற தன்னார்வ நிறுவனங்கள் சேர்ந்து அரசின் நிவாரண நடவடிக்கைகளிலும், மறுவாழ்வுப் பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டன. தமிழ்நாட்டின் ரோட்டரி அமைப்புகள் தாமாக முன்வந்து பெருமளவில் தாராளமாக பொருளாதார உதவிகள், உணவு, தண்ணீர், உடைகள், தற்காலிக உறைவிடங்கள் என பலவகையான நிவாரணப் பொருள்களையும் வாரி வழங்கியது. ரோட்டரி மாவட்டம் 3230 முன்வந்து குக்கிராமமான சூளேரிகாட்டுக் குப்பம் கிராமத்தை முழுமையாகத் தத்தெடுத்துக் கொண்டது.

சுனாமி பாதித்த சில மணி நேரங்களிலேயே தமிழக அரசு மிகத் திறமையுடன் மீட்பு நிவாரண மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொண்ட விதத்தை எல்லோரும் பாராட்டினார்கள். இந்தியா மட்டுமின்றி உலகில் எல்லாப் பகுதியினரும் பாராட்டினார்கள். இந்த நிவாரணத் திட்டங்கள் குறித்து நான் இங்கு விரிவாகப் பேச விரும்பவில்லை. ஆனால் தனியார் ஒத்துழைப்புடன் மாதிரி கிராமங்களை உருவாக்கி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர மறுவாழ்வை ஏற்படுத்த உருவாக்கிய திட்டத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

**தன்னார்வ நிறுவனங்களின் சேவைகள்**

இந்தத் திட்டத்தின் சிறந்த அம்சமே இந்தத் திட்டத்தில் ஈடுபட விரும்பும் தன்னார்வ நிறுவனங்கள் அந்த நிறுவனங்களின் விருப்பத்திற்கேற்ப எந்த வகையான நிரந்தர மறுவாழ்வுத் திட்டத்தையும் ஏற்று நடத்த வகை செய்யப்பட்டுள்ளது என்பதுதான் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனிப்பட்ட வீடுகள் கட்டித்தருவதுடன் சமூக சேவைகளான வீடுகள், பள்ளிகள், நீர் வழங்கும் அமைப்புகள், சுகாதார மையங்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களை ஏற்படுத்தித் தர முடியும். இப்பணியில் ஏராளமான தன்னார்வ நிறுவனங்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பல்வேறு சேவைகளைச் செய்து வருகின்றன. ரோட்டரி அமைப்புகளும் நிரந்தர மறுவாழ்வுத் திட்டத்தில் இணைந்து செயல்பட முன்வரவேண்டும்.

**மக்கள் இயக்கமான**
**மழைநீர் சேகரிப்புத் திட்டம்**

தமிழ்நாட்டில் ரோட்டரி அமைப்பு பல்வேறு திட்டங்களைத் தாங்களாகவே நிறைவேற்றி வருகின்றன. ரோட்டரி மாவட்டம் 3230, அதன் திறமையான தலைவர் கவர்னர் ரோட்டோரியன் பெஞ்சமின் செரியன் தலைமையில் பணியாற்றும் ஏராளமான ஊழியர்கள் பாராட்டத்தக்க நடவடிக்கைகளை அர்ப்பணிப்புடன் எடுத்து வருகின்றனர். ஏழை பள்ளிச் சிறுவர்களுக்கு சத்துணவு வழங்குவது, தையற் பயிற்சிப் பள்ளிகள் நடத்துவது, மாதந்தோறும் கண் சிகிச்சை முகாம் நடத்துவது, புற்றுநோயாளிகளுக்கு உற்ற துணையாக அவர்களுக்கு கவுன்சிலிங் வழங்குவது, போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வுப் பள்ளிகள் நடத்துவது, அவர்களின் ஊனங்களைப் போக்க உதவுவது, சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை அளிப்பது, வேலைவாய்ப்புப் பயிற்சி அளிப்பது அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். கோவில் குளங்களை மறுசீரமைக்கும் பணிகளிலும், ஆகாயகங்கை திட்டம் என்ற மழைநீர் சேமிப்புத் திட்டத்திலும் ஈடுபட்டிருக்கும் ரோட்டரி அமைப்பை இந்த நேரத்தில் நான் பாராட்டுகிறேன்.

மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில்தான் நான் அறிவித்தேன். 2001 முதல் தொடர்ந்து ஏற்பட்ட வறட்சியின் காரணமாக தண்ணீர்த் தட்டுப்பாடு மிகவும் மோசமானது. இதைத் தொடர்ந்து மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை நிறைவேற்ற தமிழ்நாட்டில் 15,000 உள்ளாட்சித் தலைவர்களுக்கும் நானே கைப்பட கடிதம் எழுதினேன். மாவட்ட ஆட்சியர்கள் மூலம் தமிழகம் முழுவதும் மாபெரும் விழிப்புணர்வு இயக்கம் ஏற்படுத்தப்பட்டது. இது மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என நான் நினைத்தது நடந்தது. மேலும் இந்த வறட்சியைத் தொடர்ந்து தமிழகத்தின் விவசாய உற்பத்தியையும் மாற்றியமைக்கத் திட்டமிட்டோம்.

இதற்காகக் குறைந்த தண்ணீர்த் தேவையில் நிறைந்த பலன்களைத் தரும் இனிப்புச் சோளம், சர்க்கரைக் கிழங்கு, காட்டாமணக்கு போன்ற பயிர்

வகைகளைப் பயிர்செய்யத் திட்டமிட்டோம். இதன்மூலம் தொடர்ச்சியான விவசாயமும் உயிரி எரிபொருள்களும் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டது. மேலும் 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை மேம்படுத்தும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது. தமிழகம்தான் இந்தியாவிலேயே தனிநபர் தண்ணீர் உபயோகம் மிகக் குறைந்த மாநிலம். இந்த நிலைமையைக் கணக்கில் கொண்டு நிறைவேற்றப்பட்டு வரும் திட்டமாகும்.

### அந்நிய முதலீட்டை ஈர்த்த தமிழகம்

உலக அரங்கில் போட்டியிடும் தொழில் துறையாக தமிழகத் தொழில்துறையை உயர்த்தும் நோக்கத்துடன் 2003இல் புதிய தொழிற்கொள்கை அறிவிக்கப்பட்டது. இதனால் இன்று இந்திய அளவில் தொழில் உற்பத்தித் துறையில் அந்நிய முதலீட்டை ஈர்த்துவரும் முதன்மை

ஆயுள்காப்பீடு, சுகாதாரம், கணினி வடிவமைப்பு, கணினி உதவியுடன் பொறியியல் ஆகிய துறைகளில் தமிழ்நாடு தனித்திறமையுடன் வளர்ந்துள்ளது.

### சென்னையை அழகுபடுத்தும் திட்டம்

உலகத்தின் முன் இந்தியாவின் கிழக்கு வாயிலாக சென்னை மாநகரத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் சில திட்டங்களைக் கொண்டு வந்துள்ளேன். சென்னைக்கு என பத்தாண்டுத் திட்டத்தை உருவாக்கியுள்ளேன். இதற்காக ரூ.18,000 கோடி முதலீடு தேவைப்படும். குடிநீர் வழங்கல், சாலை, மின்சாரம், போக்குவரத்து, வீட்டுவசதி என்ற உள்கட்டமைப்பு சேவைகளுக்கு இந்த முதலீடு தேவை. சென்னையில் பூங்காக்கள் அமைப்பது, நடைபாதைகள்,



மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் உயர்ந்துள்ளது. 2004 ஜூலை வரை மொத்த அந்நிய முதலீட்டில் 8.4 சதவிகிதத்தை ஈர்த்த மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. இன்று 2,621 அந்நிய நிறுவனங்கள் மூலம் ரூ.25,100 கோடி முதலீடு பெற்ற மாநிலமாகத் தமிழகம் நிமிர்ந்து நிற்கிறது.

மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகம் இந்தியாவிலேயே இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது. இதன் ஆண்டு ஏற்றுமதி 1.7 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்கை எட்டியுள்ளது. அரசின் இந்த நடவடிக்கையின் மூலம் வங்கி, நிதித்துறை,

சாலைகள் நடுவே தடுப்புச்சுவர், விளையாட்டு அரங்குகள், தூய்மையான நகரம், குப்பை அகற்றுதல், கழிவுநீர் அகற்றுதல், மழைநீர் வடிகால், போக்குவரத்து போன்ற அம்சங்களை உள்ளடக்கிய சென்னை மாநகரை அழகுபடுத்தும் திட்டத்திற்கு ரோட்டரி அமைப்புகளும் முழு ஆதரவு அளிக்க வேண்டும்.

### உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதனை

ஏழைகளைப் பட்டினிபோடும் பொருளாதார வளர்ச்சி அர்த்தமற்றது. வளரும் பொருளாதாரத்தில் அவர்களின் வாழ்க்கை நலமும் மேம்படுத்திக் கொள்ளும்

வாய்ப்புகளும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என நான் உறுதியாக நம்புகிறேன். நடந்தாக வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். இதனால் தமிழகம் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டில் (HDI) கடந்த பத்தாண்டுகளில் 7ஆவது இடத்தில் இருந்து 3ஆவது இடத்திற்கு உயர்ந்துள்ளது. இது குறிப்பிடத்தக்க சாதனையாகும். உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதனையாகும்.

பெண்களுக்கு உரிய வாய்ப்புகள் அளிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் ஆண்களைவிடச் சிறந்து விளங்க முடியும் என நான் உறுதியாக நம்புகிறேன். இதற்காக நான் மேற்கொண்ட சில திட்டங்களின் வெளிப்பாடுகள் அதை நிரூபித்துள்ளது.

இந்நிலையிலும் இலட்சக்கணக்கான பெண்கள் நமது நாட்டில் குடும்பத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் நிலையிலும் அவர்கள் அடக்கி வைக்கப்பட்டும், சுரண்டலுக்கும், அவமானத்திற்கும், இழிவு படுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டே வருகிறார்கள் என்பது கசப்பான உண்மையாகும். உலக அரசியல் இயக்க வரலாற்றில் பெண்களுக்குக் கட்சிப் பதவிகளில் 33 சதவிகித ஒதுக்கீட்டைக் கொடுத்து அவர்களை பொறுப்புள்ள அரசியல்வாதிகளாக உருவாக்கி உள்ளேன் என்று நான் மிகவும் பெருமையுடன் கூறிக் கொள்வதுடன் மேலும் தமிழகத்தின் உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீட்டை அமல்படுத்தியுள்ளேன் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**இலவச சைக்கிள் வழங்கும் திட்டம்**

தமிழ்நாட்டில் சில இடங்களில் நடைபெற்று வந்த பெண் சிசுக்கொலைகளைத் தடுத்து நிறுத்த தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டு வந்தேன். மேலும் பெண் சிசுக்கொலையைத் தடுத்து நிறுத்த மதுரை, தேனி, திண்டுக்கல், தருமபுரி மற்றும் சேலம் போன்ற மாவட்டங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்த தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டேன். மேலும் பள்ளிகளில் மாணவிகள் பாதியில் படிப்பை நிறுத்துவதைத் தடுத்து நிறுத்த பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தேன். இதன்மூலம் பொருளாதார ரீதியாகப் பெண்கள் குடும்பத்திற்குப் பாரமாக மாற மாட்டார்கள் என்ற நிலையை ஏற்படுத்த முயற்சி எடுத்தேன். இதற்காக நீண்ட தூரம் பள்ளிக்குச் செல்லும் மாணவிகளின் துயர்துடைக்க தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கினேன். இதன்மூலம் மாணவிகளுக்குத் தன்னம்பிக்கை ஏற்படுத்த முடிந்துள்ளது. இதனைத் தமிழகம் முழுவதும் இப்போது உண்மையில் கண்டு உணர முடிகிறது. இந்தத் திட்டம் பள்ளி மாணவிகள் படிப்பை நிறுத்தும் விகிதத்தைக் குறைத்துள்ளது.

பெண்கள் சுயமாக நிமிர்ந்து நிற்பது என்பது அவர்களின் ஒன்றுபட்ட கூட்டுச் செயல்பாட்டால் உருவாக்க முடியும் என்பதுதான் உண்மை. இதைத்தான் இந்தியக் கண்ணோட்டத்தில் 'சக்தி' அல்லது சாதகமான வாழ்க்கையின் வலிமை என்கிறோம். இதை மையமாக வைத்துதான் 1992இல் பெண்கள் தன்னார்வக் குழுக்களை உருவாக்கினேன். இன்று இந்த அமைப்புகள் நம்பிக்கை, வளர்ச்சி, சுயமேம்பாடு என்ற சொற்களின் உண்மைச் செயல்பாடாகச் செயல்பட்டு வருகின்றன. இவை இலட்சக்கணக்கான பெண்களைக் கூட்டுச் செயல்பாட்டில் மேம்படுத்தி உள்ளது. கூட்டாக பேரம் பேசும் சக்தியைப் பெண்கள் உணர்ந்து கொண்டனர். சந்தைக்குச் செல்லவும், கடன் பெறவும் பெண்கள் தயாராகிவிட்டனர். இப்போது பஞ்சாயத்து தன்னார்வக் குழுக்களின் செயல்பாடுகளைப் பற்றி முடிவுகளை மேற்கொள்ளும் நிலையில் பெண்கள் மேம்பட்டு வருகின்றனர். இவை பத்தாண்டுகளுக்கு முன் நினைத்துப் பார்க்க முடியாத விஷயங்களாகும்.

**வன்முறை மூலம் அமைதியை ஏற்படுத்த முடியாது**

சமூகத்தின் எந்த முன்னேற்றத்திற்கும் முழு முதல் தேவை அந்தச் சமூகத்தில் அமைதி, சட்டம் ஒழுங்கு சீராக இருப்பதுதான். சமூகத்தில் அமைதியும், சட்டம் ஒழுங்கும் சீர்குலைந்தால் நிஜவாழ்க்கையே பாதித்துவிடும். அனைத்துப் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கையையும் தகர்த்துவிடும். எனவே, தமிழகத்தில் தீவிரவாதத்தின் சவாலை அடியோடு ஒழித்துக்கட்ட நான் கடுமையான – உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டேன். இன்று உலக அளவில் பயங்கரவாதம் அச்சுறுத்திக் கொண்டுள்ளது. வரலாறு எல்லாக் காலங்களிலும் எல்லா நாகரிகங்களிலும் வன்முறையை எதிர்கொண்டே வந்துள்ளது. ஆனால் வன்முறையை ஒடுக்க எப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதுதான் முக்கியம். இன்று பன்னாட்டு அளவில் வர்த்தகம் மட்டும் ஏற்றுமதியாகவில்லை; பயங்கரவாதமும் ஏற்றுமதியாகிறது.

இன்றைய உலகில் பயங்கரவாதம் என்பது பலமுனைகளைக் கொண்ட பயங்கர மிருகமாக தலைவிரித்தாடுகிறது. இந்தப் பயங்கரவாதம் போதைப் பொருட்கள் மற்றும் ஆயுதக் கடத்தலுடன் இணைந்து செயல்படுகிறது. இன்று பயங்கரவாதத்தை ஒழிக்க பல்வேறு நாடுகள் பல்வேறு விதத்தில் சட்டப்பூர்வமாகவும், உறுதியாகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அதேவேளையில் அரசியல் சுயலாபங்களுக்காக பயங்கரவாதத்தின் அர்த்தம் திரித்து விளக்கமளிக்கப் படுகிறது. தேவையில்லாமல் ஆயுதம் ஏந்திய போராட்டங்களுக்கும் தீவிரவாதத்திற்கும் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

அழிவு ஏற்படுத்தக்கூடிய எந்தவித வன்முறை நடவடிக்கையும் பயங்கரவாதமாக கருதப்பட்டால்தான் அதனை ஒடுக்க முடியும். ஒரு மனிதனின் பயங்கரவாதம் செல்வதற்காக அச்சுறுத்தும் நிலைமையை ஏற்படுத்தி அப்பாவிப் பொதுமக்கள் மீது தொடுக்கப்படும் வன்முறை நடவடிக்கைகள் அனைத்தும் பயங்கரவாதம் என்று அறிவிக்கப்பட வேண்டும். சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை கேடயமாகப் பயன்படுத்திக் கொள்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அப்போதுதான் உலக நாடுகளிடையே பயங்கரவாதம் குறித்த தகவல்கள் பரிமாற்றமும், பயங்கரவாதக்



குழுக்களுக்கு மறைமுக ஆதரவு அளிக்கும் நாடுகளையும் குழுக்களையும் தனிமைப்படுத்த முடியும்.

– அடுத்த மனிதனின் சுதந்திரப் போராட்டம் என்ற கண்ணோட்டத்தில் தான் விடுதலைப்புலிகள் உலகிற்கு எடுத்து வைத்துள்ளனர்.

சுய நிர்ணய உரிமைக்காகப் போராடுவது என்பதை ஆயுதப் போராட்டத்தையும், இன ஆதிக்கத்தையும் நியாயப்படுத்த பயன்படுத்திக் கொள்ள முடியாது. உலகில் வன்முறை தீர்வாக முடியாது என்பது வெளிப்படையாகத் தெரிந்த ஒன்று. வன்முறை மூலம் உலகில் நீண்ட அமைதியை ஏற்படுத்த முடியாது.

**பயங்கரவாதத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும்**

இன்றைய நிலையில் உலகில் எல்லா நாடுகளும் பயங்கரவாதம் என்பதன் பொருள் குறித்து குழப்பம் இல்லாமல் முடிவுக்கு வரவேண்டும். அரசியல் நோக்கங்களை வலியுறுத்துவதற்காக– முன்னெடுத்துச்

இதன்மூலம்தான் உலகில் பயங்கரவாதத்தைத் தடுத்து நிறுத்த முடியும். துரதிருஷ்டவசமாக உலக அளவில் இந்த விஷயத்தில் ஒத்த கருத்து ஏற்படவில்லை.

இன்றைய நவீனத் தொழில்நுட்ப உலகில் பயங்கரவாத அமைப்புகளின் வீச்சும், தாக்கமும் இன்று எல்லோரும் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு உள்ளது. எனவே, இரும்புக்கரம் கொண்டு இவற்றை அடக்கினால்தான் இதனை ஒழிக்க முடியும். இந்த விஷயத்தில் மெத்தனமாக இருந்தால் அது பயங்கரவாத அமைப்புகளின் கரத்தை வலுப்படுத்தும். அரசு அதன் முன்பாக பலவீனப்படுத்தப்பட்ட அமைப்பாக நிற்கும். பயங்கரவாதக் குழுக்கள் தைரியமாக அழிவு வேலைகளில் தயக்கமில்லாமல் ஈடுபடும்.

**தீவிரவாதத்தை ஒழிக்க நடவடிக்கை**

தேசிய அளவில் தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டம் மத்திய – மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கையாக இருக்க வேண்டும். இதற்காக தீவிரவாதத்தை கட்டுப்படுத்தும் அமைப்புகளுக்கு எல்லாவித நவீன ஆயுதங்களும் தளவாடங்களும் வழங்கப்பட வேண்டும். தீவிரவாதம் குறித்த தகவல்களை எல்லா உளவு அமைப்புகளிடம் இருந்தும் ஒருமுனைப்படுத்த வேண்டும். இராணுவம், மத்திய உளவுத்துறை, மாநில உளவுத்துறை, 'ரா' உள்ளிட்ட எல்லா அமைப்புகளும் ஒருமுகப்படுத்தப்பட வேண்டும். ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

இத்தகைய தீவிரவாதத்தை ஒழிக்க நான் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். இன்றைய நவீன காலகட்டத்தில் குற்றம் மற்றும் தீவிரவாதம் நாடுகளைக் கடந்து தொடர்புகளைக் கொண்டுள்ளது. இவற்றை ஒழித்தால்தான் சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் சாத்தியப்படும்.

நடப்பு ஆயிரமாண்டு ஆசியாவின் காலமாகக் கூறப்படுகிறது. இதில் இந்தியா உலகின் வல்லரசாக வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தியாவின் மிகப்பெரிய மக்கள்தொகையும், மிகப்பெரிய ஜனநாயக நாடு என்ற பலமும் இந்தியாவுக்குச் சாதகமான அம்சங்களாக அமைந்துள்ளன. உலகின் வளர்ந்த நாடுகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் தகவல் தொழில்நுட்பம், கணினித் தொழில்நுட்ப அறிவுத்துறையும் இந்தியாவில் வேகமாக வளர்ந்துள்ளதே இதற்குக் காரணம். நாம் அமைதியை விரும்பும் நாடு என்று உலகிற்கு அறிமுகமாகி இருக்கிறோம்.

உலகின் வல்லரசுகள் பிரிந்து நின்றபோது நாம் அணிசேரா நாடுகளுக்குத் தலைமையேற்றோம். உலக அரங்கிலும் நாம் எந்த வல்லரசையும் சாராமல் உலகப் பிரச்சினைகளில் சுயமான நிலைப்பாட்டை மேற்கொண்டோம். உலக வர்த்தக அமைப்பு 1995இல் ஏற்பட்டபோதும் இந்தியாதான் வளரும் நாடுகளுக்குத் தலைமையேற்றது. குறிப்பாக உருகுவே நாட்டில் நடைபெற்ற ஜவுளித் துறைக்கான ஒப்பந்த மாநாட்டில் இந்தியா பங்கேற்று வளரும் நாடுகளுக்காகப் போராடி ஜனவரி 1, 2005 முதல் அமலாக வேண்டிய ஒப்பந்தத்தை இறுதி செய்வதில் முக்கியப் பங்கு வகித்தது. வரும் காலத்திலும் உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகளிலும் இந்தியா முக்கியப் பங்கு வகிக்க வேண்டும்.

**நீண்ட தூரத்தில் உலக அமைதி**

அணு ஆயுத விஷயத்தில் இந்தியா தன் திறமையை உலகிற்குப் பறைசாற்றிய போதும், தொழில்நுட்பத் துறையில் வேகமான வளர்ச்சியைப் பெற்று உலகத் தொழில் உற்பத்திச் சந்தையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றாக வேண்டும். அதுவரை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர இடத்தைப் பிடிக்கும் அம்சம் என்பது தாமதப்படுத்தப் படும். மேலும், நாம் விரைவில் நமது அண்டை நாடுகளுடன் உறவுகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். அதன்மூலம்தான் நாம் ஆசிய நாடுகளின் மத்தியில் முக்கிய இடத்தைப் பிடிக்க முடியும்.

அதேவேளையில் ஒவ்வொரு நாட்டின் நிலைப்பாடும் அதன் சுயநலனை உட்படுத்தியது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதன் சுயநலன் அந்நாட்டின் பயங்கரவாத அச்சுறுத்தல்களைக் கணக்கில் கொண்டவை.

அணு ஆயுத ஒழிப்பு விஷயத்தில் உலக நாடுகளிடையே கருத்தொற்றுமை உருவாக்கப் படவில்லை. உலகின் அச்சுறுத்தும் மையங்கள் ஏராளமாக உள்ளன.

உலக அமைதி இன்னும் நீண்ட தூரத்தில் உள்ளது. இந்த நிச்சயமற்ற நிலையிலும்கூட நாடுகளிடையே மோதல்களைக் குறைக்க இந்தியா முக்கியப் பங்கு வகிக்க முடியும். இப்போதும் மக்களிடையே ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்க இரண்டாம் வழி ராஜிய நடவடிக்கையின் மூலம் இந்தியா தனிப் பங்கு வகிக்க முடியும்.

**உலக அமைதிப் பணி**

இந்த வகையில் ரோட்டரி போன்ற பன்னாட்டு அமைப்புகள் பன்னாட்டு அளவில் நல்ல புரிதலையும் நல்ல நம்பிக்கைகளையும் உலக அமைதியையும் ஏற்படுத்த பணியாற்ற முடியும். ரோட்டரி அமைப்பினர் தேசப்பற்றையும் மீறி உலக அமைதிக்குப் பணியாற்றிட முடியும். மக்களிடையே கூட்டுச் செயல்பாடு மூலம் உலக அமைதி என்ற கனவை நனவாக்க முடியும்.

இந்த வேளையில் எனக்குத் தனிப் பெருமைக்குரிய விருதை வழங்கி உங்களுடன் எனது கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பை அளித்த ரோட்டரி அமைப்பினருக்கு நான் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் 23–2–2005 அன்று,
ரோட்டரி சங்கம் சார்பில் வழங்கப்பட்ட
**வாழ்நாள் சாதனையாளர் விருதைப்** பெற்று
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய
ஆங்கில உரையின் தமிழாக்கம்.

36ஆம் பக்கத் தொடர்ச்சி ....

பணி மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளதை இம்மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இப்பெரும் பணியை, மிகக் குறுகிய காலத்தில் செய்து முடித்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. பழைய குடும்ப அட்டைகளுக்கு பதிலாக புதிய குடும்ப அட்டைகள் ஜூன் 2005க்குள் வழங்கப்படும். மேலும், போலி குடும்ப அட்டைகள் அனைத்தும் ஒழிக்கப்படும். பொது மக்களிடமிருந்து மேற்கொண்டும் கோரிக்கைகள் வரப்பெற்றதன் பேரில் புதிய குடும்ப அட்டைகளுக்கான இந்த விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய கடைசிநாள் 6.3.2005 வரை நீட்டிக்கப்பட்டு, விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை உயர்ந்து, மாதாந்திர விநியோக அளவு அதிகரிப்பதைக் கருத்திற்கொண்டு, 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், உணவு மானியத்திற்கான நிதியொதுக்கம், 1,000 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## தேசிய அளவில் முன்மாதிரியாகத் திகழும் அனைவருக்கும் கல்வித் திட்டம்

133. "அனைவருக்கும் கல்வி"த் திட்டத்தின் கீழ் (Sarva Shiksha Abhiyan), தமிழ்நாடு அடைந்துள்ள வெற்றியானது, தேசிய அளவில் பின்பற்றத்தக்க ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. ஆரம்பப் பள்ளி அளவில் மட்டுமல்லாது, அதற்கு மேற்பட்ட, அதாவது, நடுநிலைப்பள்ளி அளவிலும், 100 சதவிகிதம் மாணவர்கள் பள்ளிக்கு வருகின்ற சூழ்நிலையை அரசு உறுதி செய்துள்ளது. 2001-2004 கால அளவில் 1,112 புதிய ஆரம்பப் பள்ளிகள் திறக்கப்பட்டதன் மூலமாகவும், 2001-2005 ஆம் ஆண்டு கால அளவில் 2,106 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டதன் மூலமாகவும், இந்தச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இந்த வசதிகள் அளித்ததன் மூலமாக, ஆரம்பப் பள்ளிகளில் படிப்பைப் பாதியில் விட்டுச் செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 2001-2002 ல் 16 சதவிகிதமாக இருந்த நிலைமாறி, 2003-2004இல் 8 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கான ஒதுக்கீடு 2005-2006 ஆம் ஆண்டில் 500.42 கோடி ரூபாயாக இருக்கும்.

## பள்ளிகள் நிலை உயர்வு

134. இந்த அரசு, 2005-2006 ஆம் ஆண்டில், 90 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 60 உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தும். 605 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள், 182.74 கோடி ரூபாய் செலவில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 549 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளை 232.10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த உத்தேசிக்கப்



பட்டுள்ளது. 2005-2006ஆம் கல்வியாண்டில், 300 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் ஆய்வகக் கூடங்களை நிறுவி, பள்ளி செல்லும் சிறார்களின் மொழித் திறன் மேம்படுத்தப்படும். 2005-2006ஆம் ஆண்டில், மேலும் 90 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் விருப்பத் தேர்வுப் பாடங்களில் ஒன்றாக, கணினி அறிவியல் பாடம் சேர்க்கப்படும்.


135. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான கல்வியறிவு இடைவெளியைப் போக்குவது, புத்தாயிரமாண்டின் முக்கியமானதொரு வளர்ச்சி இலக்காகும். 2004-2005 ஆம் ஆண்டில், கல்வியறிவில் பின்தங்கியுள்ள 6 மாவட்டங்களில், மகளிருக்காக, சிறப்புக் கல்வியறிவுத் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. படிப்பறிவில்லாத பெண்களுக்குக் கல்வி போதிக்கும் பொருட்டு, மாவட்டங்களில் கல்வியறிவில் பின்தங்கியுள்ள 43 வளர்ச்சி வட்டாரங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். வட்டார அளவில் ஊரக மகளிரின் கல்வியறிவு விகிதம், தேசியக் கல்வியறிவு விகிதத்தை விடக் குறைவாகவும், பாலினக் கல்வியறிவு இடைவெளி விகிதம் தேசிய சராசரி அளவைவிடக் குறைவாகவும் உள்ள 10 மாவட்டங்களைச் சேர்ந்த, கல்வியறிவில் பின்தங்கிய 28 வளர்ச்சி வட்டாரங்களில் "கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா" (Kasturiba Gandhi Balika Vidyalaya) என்ற புதிய திட்டம் தொடங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 8.59 கோடி ரூபாய் செலவில்

அவசியமான அனைத்து கட்டமைப்புகளுடன் கூடிய, மாணவிகளுக்கான 37 உறைவிடப் பள்ளிகள் நிறுவப்படும். இந்தத் திட்டங்கள், ஆண்–பெண் கல்வியறிவின் இடைவெளியை மிக வேகமாகக் குறைக்க உதவும். 2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில், பள்ளிக் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு 3,800.65 கோடி ரூபாயாக இருக்க, 2005-2006ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இது 4,348.01 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

136.இந்த அரசு, 63.21 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன், 8 பொறியியல் கல்லூரிகள் மற்றும் 3 பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில், உலக வங்கியின் நிதியுதவியுடன் தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. உயர்கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கம், 2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 645.64 கோடி ரூபாயாக இருக்க, 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 741.77 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### புதிய மாவட்ட விளையாட்டு வளாகங்கள்

137.மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விளையாட்டு மேம்பாட்டிற்கு உயர் முக்கியத்துவம் அளித்துவருவதை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். சென்னையில் விளையாட்டு மேம்பாட்டிற்கான வசதிகள் நிலை உயர்த்தப்பட்டுள்ளதால் சென்னை மாநகர், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் இடங்களில் ஒன்றாகக் கருதப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெரு முயற்சியாலேயே, 2005 ஜனவரியில், சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டி, பெரியதொரு பன்னாட்டு நிகழ்ச்சியாக இங்கு நடத்தப்பட்டது. 2005ஆம் ஆண்டில், சேம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டி விளையாட்டுகள் சென்னையில் நடத்தப்படும். இதற்குத் தேவையான வசதிகள் தயாராகி வருகின்றன. உலக அளவில் வெற்றிகாணும் திறமையாளர்களைக் (World Beaters Scheme) கண்டறியும் திட்டம் மற்றும் திறமைசாலிகள் மேம்பாட்டுத் திட்டம் (Champions Development Scheme) ஆகியவை வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னைப் பகுதியில் உலகத் தரத்தில் மிதிவண்டி போட்டிக்கான விசைத் தடகளம் (Velodrome) மற்றும் துப்பாக்கிச் சுடுதளம் ஆகியவை அமைக்கப்பட உள்ளன என்பதை அறிவிப்பதில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன். 2005-2006 ஆம் ஆண்டில், புதிய மாவட்ட விளையாட்டு வளாகங்கள் மற்றும் உள் விளையாட்டு அரங்கங்களைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. வருகைதரும் விளையாட்டுக் குழுக்களுக்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு, விளையாட்டு வளாகம் ஒவ்வொன்றிலும், உரிய இடவசதியும் உணவும் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கம், 33.97 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



### மொழிப்பற்றை வளர்க்கும் அறிவியல் தமிழ்

138.அனைத்துப் பள்ளிகளிலும், எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரையில் அறிமுகம் செய்யப்பட்ட அறிவியல் தமிழ் அனைத்து மாணவர்களிடையேயும் தமிழ் மொழிப்பற்றை வளர்க்க உதவியுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில், 4.37 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன், இத்திட்டம் தொடரப்படும். இதன்மூலம், அனைத்து மாணவர்களுக்கும், அறிவியல் தமிழ் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படும். செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலியைத் தொகுத்து வெளியிடும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டில், இந்த அகராதியின் அனைத்துப் பாகங்களையும் தொகுக்கும் பணியை முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுக்கான மொத்த ஒதுக்கீடு, 39.41 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

139.உலகெங்கும் பரந்துள்ள தமிழின மக்கள், அனைத்து நிலைகளிலும், தமிழைக் கற்பதற்கும், அதன்




பாரம்பரியம், கலை மற்றும் பண்பாடு குறித்து அறிந்து கொள்வதற்கும், இணையதளம் மூலமாக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம், அதன் மையங்களை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. இவ்வாண்டில், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி மற்றும் லீரூனியன் ஆகிய நாடுகளில் இப்பல்கலைக் கழகம், தனது ஒருங்கிணைப்பு மையங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும், புதிய மையங்களை ஏற்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. தமிழ்ச்சொல் இணையம் (word net), தமிழ் கணினி இயக்க முறைமை (Tamil Linux) முதலியவை போன்ற மென்பொருள்களை உருவாக்கும் பணி முடிவுறும் நிலைகளில் உள்ளது. அனைத்து வகை தமிழ் எழுத்து வரிவடிவங்களையும் தெரிந்து கொள்வதற்கு உலகளவிலான தமிழ் தேடுபொறி (Search Engine) ஒன்று இன்னும் ஒரு சில மாதங்களில் தயாராகிவிடும்.

## சென்னை பொது மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள்

140.2001ஆம் ஆண்டில், இந்த அரசு பொறுப்பேற்றபோது, குழந்தை இறப்பு விகிதம், மகப்பேறின்போது தாய் இறப்பு விகிதம் போன்ற முக்கியமான சுகாதாரக் குறியீடுகள், முன்னேற்றமின்றித் தேக்கநிலையில் இருந்தன என்பதை, இந்தப் பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இலக்குகளை எய்துவதற்கு இவற்றுக்கு மீண்டும் உயிரோட்டம் அளிக்கப்படுவதை நமது அரசு உறுதி செய்துள்ளது. சுகாதாரத் துறைக்கான புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகள் அனைத்தையும் எய்தும் வகையில், தமிழ்நாடு தற்போது முன்னேற்றப் பாதையில் நடைபோட்டு வருகிறது. 2000–ல், உயிருடன் பிறந்த குழந்தைகளில் குழந்தை இறப்பு வீதம் (Infant Mortality Rate) ஆயிரத்திற்கு 51 ஆக இருந்தது, இது, 2002-2003ஆம் ஆண்டிற்குரிய மாதிரிப் பதிவு ஆய்வின்படி, ஆயிரத்திற்கு 44 ஆகக் குறைந்துள்ளது. இதேபோன்று, இதே கால அளவில், மொத்தப் பிறப்பு வீதம் (Crude Birth Rate) ஆயிரத்திற்கு 19.3 என்ற அளவிலிருந்து, 18.5 என்ற அளவிற்குக் குறைந்துள்ளது. பேறுகால இறப்பு வீதம் (Maternal Mortality Rate) உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்கு 1.4 என்ற அளவில் உள்ளது.

141. நமது நாட்டிலேயே மருத்துவ வசதிகளின் தலைநகராக சென்னை, தன்னை நிலைநிறுத்தித் திகழ்கின்றது. மிகச் சிறந்த மருத்துவ வசதிகள், தகுதிவாய்ந்த சிறப்பு மருத்துவர்கள் மற்றும் செவிலியர் பேணுகை வசதி ஆகியவற்றின் காரணத்தால், சென்னை, உலக அளவில் மருத்துவ வசதிக்கான மக்களின் விருப்பத் தேர்விடமாக, மிக வேகமாக மாறிவருகிறது. சென்னை பொது மருத்துவமனை வளாகத்தில் உருவாகிவரும், மாபெரும் இரு கோபுரக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டு, விரைவில் திறக்கப்படும் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இந்த அரசு, இத்திட்டத்தை 104.47 கோடி ரூபாய் செலவில் வெற்றிகரமாக முடித்துள்ளது. 1,650 படுக்கை வசதிகள் கொண்ட, இந்த இரு கோபுரக் கட்டடங்களுக்கு, 5.39 கோடி ரூபாய் செலவில் புதிய சாதனங்களும் அறைகலன்களும் வழங்கப்பட்டு வருகின்றன. அரசு மருத்துவக் கல்லூரிகளில், தனிச் சிறப்பு மையங்களை ஊக்குவிக்கும் நமது கொள்கையின் ஓர் அங்கமாக, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் குடல்நோய் அறுவை சிகிச்சைத் துறையில், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையம் ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படும். இது, தென்னிந்தியாவில், பொதுத் துறையின் கீழ், இந்த வகையில் அமையும் முதலாவது மையம் ஆகும். முக்கியமாக, ஹெப்படிடிஸ்–பி ('Hepatitis-B') வைரஸ் கிருமியினால், கல்லீரல் பாதிக்கப்பட்டு, இறப்பு வீதம் அதிகரித்திருப்பதைக் கருத்தில் கொண்டு, இந்த





மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, இத்திட்டத்தால், தாய்–சேய் நலனை மேம்படுத்துதல், மகப்பேற்றின்போது, தாயின் இறப்பு விகிதத்தைக் குறைத்தல், பழங்குடியினர் பகுதிகள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் அளிக்கப்படும் சுகாதாரச் சேவையை மேம்படுத்தல், அவசர சிகிச்சை, தொற்று நோய்கள் அல்லாத பிற நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான முன்மாதிரி சிகிச்சை முறைகளை உருவாக்குதல் ஆகியவை சிறந்த முறையில் மேம்பாடடைந்து நல்ல பலன்கள் கிடைத்திட வழி வகுக்கும்.

**சுகாதார மையங்களுக்கு இன்றியமையாச் சாதனங்கள்**

143. இந்த அரசு, இம்மாநிலம் முழுவதிலும் உள்ள, 90 தொடக்கச் சுகாதார மையங்களில், இருபத்து நான்கு மணிநேர மகப்பேறு சிகிச்சை சேவையைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியைக் கருத்திற்கொண்டு, மகப்பேறு–குழந்தைகள் நலத் திட்டத்தின் இரண்டாம் நிலையில், இந்த ஏற்பாட்டு முறைக்கு மத்திய அரசு, ஒப்புதல் அளித்துள்ளது என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்வைத் தரும். தாய்–சேய் இறப்பு விகிதத்தை மேலும் குறைப்பதற்காக, ஒருங்கிணைந்த அவசர, பேறுகால மருத்துவம் மற்றும் பிறந்த சிசுகளுக்கான மருத்துவப் பேணுகை ஆகியவற்றை, 24 மணி நேரமும் அளிக்க, மாநிலத்திலுள்ள 51 அரசு மருத்துவமனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தொலைதூர, பழங்குடியினர் பகுதிகளில் அமைந்துள்ள 50 சுகாதாரத் துணை நிலையங்களுக்கும், 25 தொடக்கச் சுகாதார மையங்களுக்கும் இன்றியமையாச் சாதனங்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

144. இந்த அரசு, மொத்தம், 80.48 கோடி ரூபாய் செலவில், 403 சுகாதாரத் துணை நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட வகை செய்துள்ளதோடு, 104 தொடக்கச் சுகாதார நிலையங்களையும் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தியுள்ளது. நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீட்டில், மக்கள் நல்வாழ்வு–குடும்ப நலத்துக்காக, 1,317.83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இது, 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், 1,652.24 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நோய்க்கான சிகிச்சைக்கு 5 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படவுள்ள, இந்தக் கல்லீரல் மாற்று மையம், இதுவரை இல்லாத அளவுக்கு மிகக் குறைந்த செலவில் சிகிச்சை அளிக்கும். இந்திய மருத்துவக் கழகம் வரையறுத்துள்ள கோட்பாடுகளை முழுமையாக நிறைவு செய்யும் வகையில், அரசு மருத்துவக் கல்லூரிகளில், அனைத்து வசதிகளும் செய்யப்படுவதையும், முழுமையான அளவில் பணியாளர்கள் பணிபுரிவதையும் உறுதிசெய்திடும் வகையில், இந்த அரசு, சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்காக, இந்த அரசு, கன்னியாகுமரியில் ஆசாரிப்பள்ளத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிக்கும், தேனி மற்றும் வேலூரில் உள்ள புதிய மருத்துவக் கல்லூரிகள் இரண்டிற்கும், 187.92 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மருத்துவக் கல்லூரிகள், 53.48 கோடி ரூபாய் செலவில், இந்திய மருத்துவக் கழகத்தின் நெறிமுறைகளுக்கு இணங்க, நிலை உயர்த்தப்பட்டு வருகின்றன.

**தாய் சேய் நலன் மேம்பாடு**

142. 597.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலக வங்கி நிதியுதவி பெறும், தமிழ்நாடு சுகாதாரப் பணிகள் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவதில், மதிப்பிற்குரிய அவை உறுப்பினர் மகிழ்ச்சியடைவர். இதுவரை இல்லாத பெரு முயற்சியாக, 29 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளையும், 241 வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளையும் உள்ளடக்கிய, மொத்தம் 270 இரண்டாம் நிலை மருத்துவமனைகளில், கட்டமைப்பு வசதிகளை

## பெண்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

145. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தில் உதித்த, தமிழ்நாட்டில் உள்ள சுய உதவிக் குழு இயக்கம், ஊரகப் பகுதிகளில் உள்ள பெண்களின் முக்கியத் தேவையான பொருளாதாரப் பாதுகாப்பை அளித்துள்ளதோடு மட்டுமல்லாது, அவர்களிடையே



நிலவிய புண்பட்ட மற்றும் சக்தியற்ற மனநிலையை அறவே நீக்கியுள்ளது. தற்போது, 1.93 இலட்சம் சுய உதவிக் குழுக்களில், 32.44 இலட்சம் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்வைத்தரும் என நம்புகிறேன். இந்தப் பெண்கள், 621.92 கோடி ரூபாய் அளவிற்குச் சேமித்து, 1,055.19 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வசதிகளைப் பெற்றுள்ளனர்.

146. 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மகளிர் திட்டத்திற்கு நாம் 20 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இது, பயிற்சித் திட்டங்கள், தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், புதிய சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள உதவும். குறைந்த அளவு தொகையைக் கூட சேமிக்க இயலாத கடும் வறுமையில் வாடும் பெண்களுக்கு, ஆதார உதவித் தொகை (seed money) வழங்கப்படுவதன் மூலம், அவர்கள் சுய உதவிக் குழுக்கள் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுவர். சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு விற்பனை வசதிகளை உருவாக்கித் தருவதற்கான, செயல் திட்டம் ஒன்றைத் தயாரிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. 4.74 இலட்சம் பெண்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 1.58 இலட்சம் பெண்கள், சொந்தமாக குறுந்தொழில்களைத் தொடங்க உதவும் வகையில், வாழ்க்கைத் தொழில் மற்றும் திறன் பயிற்சி பெற்றுள்ளனர்.

## வறுமையைக் குறைக்க முழுமையான கிராம வேலைவாய்ப்புத் திட்டம்

147. 2015 ஆம் ஆண்டு வாக்கில், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் தொகையின் சதவிகித அளவு பாதியாகக் குறைவதை உறுதி செய்வதே, புத்தாயிரமாண்டு வளர்ச்சியின் ஒரு முக்கிய இலக்காகும். ஆதார ஆண்டான 1990-91ஆம் ஆண்டில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் தொகையின் அளவு, 40.90 சதவிகிதம் என மதிப்பிடப்பட்டிருந்தது. மேற்சொன்ன வளர்ச்சி இலக்கின்படி, இது 2015ஆம் ஆண்டிற்குள் பாதியாகக் குறைக்கப்பட வேண்டும். தற்போது மேற்கொண்டுவரும் முயற்சிகளின் பயனாக, 2015 ஆம் ஆண்டுக்கான புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்கு விரைவிலேயே எட்டப்பட்டுவிடும் என நான் நம்புகிறேன்.

148. வறுமையை இன்னும் வேகமாக குறைப்பதை உறுதி செய்ய புதிய உத்தி ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்த உத்தியின் ஒரு பகுதியாக, முழுமையான கிராம வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதோடு, 2005-2006 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அதிகாரமளித்தல் மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டத்தை மேற்கொள்வதற்காக, உலக வங்கியுடன் விரிவான விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதி உதவி அளிக்கும். இத்திட்டம், 15 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கிராமத்திலும், வறிய குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டும், அவர்களுக்கு ஆதரவு நல்கும் வகையிலும், கிராம வாழ்வாதார நிதி (village livelyhood fund) ஒன்று ஏற்படுத்தப்படும். வாய்ப்புரிமை இழந்த குடும்பங்களின்பால், தனிக் கவனம் செலுத்தப்படும். மொத்தம் 715 கோடி ரூபாய் செலவில் அமையும் இத்திட்டத்தின் தயாரிப்புப் பணி, முடிவுறும் தருவாயில் உள்ளது. இதற்கு உலக வங்கியின் அனுமதி, கூடிய விரைவில் கிடைத்துவிடும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

## சமூகப் பாதுகாப்புறுதி வளையத் திட்டம்

149. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் நான் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து, ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள மிகவும் வறிய நிலையிலுள்ள குடும்பங்களைப் பற்றிய விரிவான ஆய்வு ஒன்றை

இவ்வரசு மேற்கொண்டது. மிக வறிய நிலையிலுள்ள 3 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் வகையில், ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்காக, 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் சேர்க்கப்படுகிறது. இந்த ஒருங்கிணைந்தத் திட்டத்தின் கீழ், அக்குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு வகை செய்யப்படும். மேலும், மிகவும் வறிய நிலையிலுள்ள குடும்பங்கள் பயனடையும் வகையில், உணவுப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரப் பராமரிப்பு போன்ற பல்வேறு வசதிகள் மற்றும் உரிமைகள் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய, ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புறுதி வளையத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். 2005-2006 ஆம் ஆண்டில், 3 இலட்சம் குடும்பங்கள் அனைத்தும் இப்பயனைப் பெறவேண்டும் என்பதே இலக்காகும். மிக வறிய நிலையிலுள்ள பரம ஏழைக் குடும்பங்களுக்கு உதவ, இத்திட்டம் பெரிதும் உதவியாக இருக்கும். மாநிலத்தில் வறுமைக் குறைப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கான, இத்தகைய புதிய முயற்சிகளை மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் பாராட்டுவர் என நம்புகிறேன்.

### தேசிய முன்மாதிரித் திட்டமான சத்துணவுத் திட்டம்

150. நன்கு உருவாக்கப்பட்டு, சீரிய முறையில் செயற்படுத்தப்பட்டுவரும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், தற்போது, தேசிய அளவில் ஒரு முன்மாதிரித் திட்டமாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் இந்த முன்மாதிரித் திட்டம், நாட்டிலேயே மிகச் சிறந்தது எனப் பாராட்டப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கான மொத்த நிதியொதுக்கம் 742.44 கோடி ரூபாய் ஆகும். மதிய உணவு மையங்களில், 74 இலட்சத்திற்கு மேற்பட்ட சிறார்களுக்கு உருளைக்கிழங்கு, வேகவைத்த முட்டை ஒன்று, பயறுகள் ஆகியவற்றைக் கொண்ட ஊட்டச் சத்து நிறைந்த உணவு வாரந்தோறும் வழங்கப்பட்டு, இத்திட்டம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, வறிய, ஏழ்மையான குடும்பங்களில் இருந்துவரும் சிறார்களிடையே காணப்படும் புரதச்சத்துக் குறைபாடு இதன்மூலம் சரிசெய்யப்பட்டுவிடும். கறிவேப்பிலைப் பொடி அல்லது முருங்கைக்கீரைப் பொடியைச் சத்துணவில், சேர்ப்பதற்கான திட்டம், தமிழ்நாட்டில், தெரிந்தெடுக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில், முன்னோடித் திட்ட அடிப்படையில், அறிமுகப் படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால், சிறார்களிடையே காணப்படும் வைட்டமின்-A குறைபாடு நீங்குவதாகத் தெரியவருகின்ற பயன் மதிப்பீட்டின் அடிப்படையில், இத்திட்டம் அனைத்து மதிய உணவு மையங்களுக்கும் நீட்டிக்கப்படும் என்பதை நான் இந்தப் பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



### ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் காக்கும் ஊரக மாணவியர் ஊக்க உதவித் திட்டம்

151. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்குத் தரமான கல்வி, தரமான சொத்துக்கள், வருமானம் ஈட்டுவதற்கான திறன் ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை அளிப்பதன் மூலம், அவர்களுக்குச் சமூக, பொருளாதார அதிகார உரிமையை அளிக்க, இந்த அரசு, உறுதி பூண்டுள்ளது. வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் அனைத்து ஆதிதிராவிடர் நல மாணவரில்லங்களுக்கும், புதியக் கட்டடம் கட்ட இந்த அரசு ஏற்கெனவே, அனுமதி வழங்கியுள்ளது என்பதை, இந்தப் பேரவையில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். நடப்பாண்டில், 44.10 கோடி ரூபாய் செலவில், 140 புதிய மாணவரில்லங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன்மூலம், தனியார் வாடகைக் கட்டடங்களில் இதுவரை செயல்பட்டு வந்த மாணவரில்லங்கள் அனைத்திற்கும் நல்ல கட்டடங்களும், வசதிகளும் கிடைக்கும். இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ், பதினோராம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு 2,03,566 மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 2005-2006 ஆம் ஆண்டில், 8.82 கோடி ரூபாய் செலவில், 50,600 மிதிவண்டிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில்,




பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்டுவிடும், வறிய ஆதி திராவிட, பழங்குடியின மாணவிகளின் எண்ணிக்கையைக் குறைக்க, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான 'ஊரக மாணவியர் ஊக்க உதவித் திட்டம்' செயல்படுத்தப்பட்டுள்ளது. 6 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் கூடிய, இந்தப் புதுமையான திட்டம், ஊரகப் பகுதிகளில் உள்ள ஆதி திராவிட – பழங்குடியின மாணவிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த பேருதவியாக இருக்கும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்காக, இந்த அரசு, ஏற்கெனவே, பட்டமேற்படிப்புவரை இலவசக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர் என நம்புகிறேன்.

152.2004-2005 ஆம் ஆண்டில், நிலக் கொள்முதல் புதுமைத் திட்டத்தின் வாயிலாக, 7,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண் பயனீட்டாளர்கள் பயனடைவர். 2005-2006ஆம் ஆண்டில், இதே அளவில் பெண் பயனீட்டாளர்கள் பயனடைவர். நடப்பாண்டில் செயல்படுத்தப்பட்டுள்ள சிறப்புப் பொருளாதார திட்டங்கள் வாயிலாக, 15 கோடி ரூபாய் மானிய உதவி வழங்கப்பட்டு, 6,000 தனிநபர் பயனீட்டாளர்கள் பயனடைவர். இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம், 10 கோடி ரூபாய் மானிய



உதவித் தொகையுடன், 4,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்குப் பயனளிக்கும் வகையில், செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் தாட்கோ மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக, 1.5 இலட்சம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பயனீட்டாளர்கள் பயனடைவர். 2005-2006ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனிற்கான மொத்த நிதி ஒதுக்கீடு 453.91 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

153.பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மை இன மக்களின் நலனுக்கான ஒதுக்கீடு, 2005-2006ஆம் ஆண்டில், 287.23 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சமுதாயத்தினர் சமூக பொருளாதார மற்றும் கல்வி வசதி ஆகியவற்றிற்கான அதிகார உரிமை பெறுவதில் தேவையான முயற்சிகளை, இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

154.2005-2006 ஆம் ஆண்டில், 100 கோடி ரூபாய் செலவில் 318 புதிய மாணவரில்லக் கட்டடங்கள் கட்டப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதற்கென, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 80 கோடி ரூபாய் நிதியொதுக்கம் சேர்க்கப் பட்டுள்ளது. எஞ்சிய தொகை, சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செலவிடப்படும்.

155.பதினோராம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு இலவசமாக மிதிவண்டி வழங்கும் முன்னோடித் திட்டம், 24.50 கோடி ரூபாய் செலவில் 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். இதனால் 1,26,800 மாணவிகள் பயனடைவர். இந்த இனங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் தொழில் படிப்புகளில் சேர்ந்து இலவசமாகப் பயில இயலும் வகையில், 5.60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. மேலும் மூன்று முதல் ஆறாம் வகுப்புகளில் பயிலும் ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த இந்த இன மாணவியருக்கு, ஊக்க உதவி அளிக்கும் திட்டம், 6 கோடி ரூபாய் நிதியொதுக்கத்துடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2005-2006 ஆம் ஆண்டில், 20.11 கோடி ரூபாய் கூடுதல் செலவில், கள்ளர் சீர்திருத்தப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் கட்டமைப்பு ஆகியவை



வலுப்படுத்தப்படுவதோடு, அப்பள்ளி மாணவர் இல்லங்களுக்காக புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

### அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர்களுக்குச் சலுகைகள்

156. நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், அரசு சிறந்த முறையில் செயலாற்றுவதற்கும், மக்களுக்குச் சிறந்த சேவையாற்றுவதற்கும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் மிகவும் முக்கியம் என்பதை எப்பொழுதும் கருதி வந்துள்ளார்கள். தமிழ்நாட்டில் நிலவிய மோசமான நிதி இடர்பாட்டில் இருந்து மாநிலத்தை மீட்பதற்கு சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான இவ்வரசு நிதிநிலை மேம்பாடடைந்த பிறகு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சிறந்தப் பணிப் பயன்களை வழங்க வேண்டும் என்பதில் முனைப்பாக உள்ளது. அக்டோபர் 2004–ல் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பிரதிநிதிகளுடன் நடந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல சலுகைகளை அறிவித்தார்கள். இவை அனைத்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களினால் பெரிதும் வரவேற்கப்பட்டன. இந்த அறிவிப்புகள் அரசின் நிதிச் சீர்திருத்தத்தின் கட்டாயத்திற்கும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் எதிர்பார்ப்பிற்கும் இடையே ஒரு புதிய புரிந்துணர்வு உருவாக வழி வகுத்துள்ளது. இந்தப் புதிய புரிந்துணர்வின் அடிப்படையில் தமிழக மக்களின் நலனை மேம்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

157. மத்திய அரசு, தனது ஊழியர்களுக்கு ஒவ்வொரு அகவிலைப்படி தவணையையும் வழங்கும் நாளிலிருந்து அகவிலைப்படி தவணையை இவ்வரசு வழங்குவதை இந்தக் கடுமையான நிதி நெருக்கடி மேலும் சிக்கலாக்கியது. அகவிலைப்படி தவணைகளை வழங்குவதில் உள்ள கால இடைவெளியைப் படிப்படியாகக் குறைப்பதற்கு அரசு முயற்சிகள் மேற்கொள்ளும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்டோபர் 2004–ல் குறிப்பிட்டிருந்தார்கள். இந்தக் கொள்கை முடிவின் அடிப்படையில் 1.4.2005 முதல் அனைத்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஊதியத்தில் 3 சதவிகிதமுடைய ஒரு கூடுதல் அகவிலைப்படி தவணை வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இது அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணிபுரியும் பணியாளர்கள், சத்துணவுப் பணியாளர்கள், குழந்தை நலப் பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் ஏனையவர்களுக்கும் பொருந்தும். இந்த அகவிலைப்படி தவணை, ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் வழங்கப்படும். இதனால் ஆண்டிற்கு 211.83 கோடி ரூபாய் செலவில், அனைத்து 12.33 இலட்சம் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனையோரும், 4.80 இலட்சம் ஓய்வூதியதாரர்களும் பயன் பெறுவார்கள்.

158. 2004 ஆம் ஆண்டு அக்டோபர் 20 ஆம் நாள் நடந்த பேச்சுவார்த்தையை அடுத்து 25.7.2003–ல் மீண்டும் பணியில் சேர்ந்த அனைத்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் 1.7.2003 அல்லது 2.7.2003 முதல் 4.7.2003 வரையான காலம் “வேலை செய்யாத நாட்களுக்குச் சம்பளம் இல்லை” என்ற அடிப்படையிலும், 5.7.2003 முதல் 24.7.2003 வரையான காலம் பணிக் காலமாகவும் கருதப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையுடன் அறிவித்தார்கள். நீதிபதிகளின் குழு அளித்த தீர்ப்பிற்குப் பிறகு மேலும் சில அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணியில் மீண்டும் சேர்ந்துள்ளது அரசின் கவனத்திற்கு வரப்பட்டு இறுதி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய பணியாளர்களின் பணிக்கு வராத கால அளவை வேலை நாட்களாகக் கருத வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டன. பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணியில் சேர்ந்த அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களைத் தவிர ஏனையோருக்கும், ஏற்கெனவே ஆணைகள் வழங்கப்பட்ட பணியாளர்களைப் போன்றே பணிக்கு வராத காலம் வேலை நாட்களாக ஒழுங்கு செய்யப்படும்

என்று நல்லெண்ண அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள். இது பணியில் இருந்து ஓய்வுபெறும் இத்தகைய சில பணியாளர்களுக்கு முழு ஓய்வூதியப் பயன்களைப் பெற உதவும்.

159. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சுகாதார நல நிதித் திட்டத்தை மேலும் பல மருத்துவமனைகளையும், நோய்களையும் சேர்த்து விரிவாக்க வேண்டும் என்று அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் கோரி வருகிறார்கள். மருத்துவ வசதிகளின் அடிப்படையில் கூடுதல் மருத்துவ மனைகளைப் பற்றிய ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1.4.2005 முதல் அமலுக்கு வரும் வகையில் விரிவாக்கப்பட்ட மருத்துவமனைகளின் பட்டியலும், நோய்களும் அறிவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அரசுப் பணியாளர்கள் சுகாதார நல நிதித் திட்டத்தின் கீழ்வரும் அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உள்ளது போன்ற பொதுவான மருத்துவமனைகள் மற்றும் நோய்களின் பட்டியலை தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் சுகாதார நலநிதித் திட்டத்திற்கும் வழங்க வேண்டுமென்று ஓய்வூதியதாரர்களின் சங்கங்களும் கோரி வருகின்றன. இந்த கோரிக்கையை இந்த அரசு கவனத்துடன் பரிசீலித்து 1.4.2005 முதல் அமல்படுத்த உத்தேசித்துள்ளது.

## ஓய்வூதியதாரர்களுக்குச் சலுகை

160. 1.1.1996 முதல் 31.3.1998 வரையில் பணியிலிருந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணிக்கொடை, ஓய்வூதியத்தினை ஒப்படை செய்து பணம்பெறும் திட்டம் மற்றும் ஏனைய பயன்களின் 60 சதவிகித நிலுவைத் தொகையை 2003ஆம் ஆண்டுக்குப் பிறகு வழங்கும் வகையில் முந்தைய அரசு தள்ளிவைத்தது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இதற்குப் பிறகு, மாநில அரசு மாபெரும் நிதி நெருக்கடியில் மூழ்கியது. இந்த அரசு இத்தகைய நிலைமையைச் சரிசெய்து 60 சதவிகித நிலுவைத் தொகையை வட்டியுடன் சேர்த்து ஒவ்வொன்றும் 20 சதவிகிதமுடைய 3 ஆண்டுத் தவணைகளில் 2004-2005ஆம் நிதியாண்டு முதல் வழங்கப்படும் வகையில் 2004ஆம் ஆண்டு ஜூலையில் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதன்படி, அடுத்த தவணைத் தொகை 2005-2006 ஆம் நிதியாண்டிலும், மூன்றாவது மற்றும் கடைசித் தவணைத் தொகை 2006-2007ஆம் நிதியாண்டிலும் வழங்கப்படும். ஓய்வூதியதாரர்களின் வயது முதிர்வைக் கருத்தில் கொண்டு, நிதிச்சுமை அதிகம் ஏற்படினும், கருணை அடிப்படையில், மீதமுள்ள 40 சதவிகித தொகை முழுவதையும் 2005-2006 ஆம் நிதியாண்டில் ஒட்டு மொத்தமாக வழங்குமாறு பலதரப்பட்ட ஓய்வூதியதாரர்களின் சங்கங்கள் கோரிக்கை வைத்துள்ளன. நமது தலைவி, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், கருணை அடிப்படையில் அனைத்து நிலுவைத் தொகையும் 2005 ஜூலை தொடங்கி ஒரே தவணையில் 2005-2006ஆம் நிதியாண்டில் வழங்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இதற்கு 2005-2006ஆம் ஆண்டில் 583.51 கோடி ரூபாய் செலவு பிடிக்கும்.

161. கடைநிலைகளில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் அவர்களின் பணி நிலைமையை மேம்படுத்துவதில் நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் எப்பொழுதும் ஆர்வம் கொண்டுள்ளார்கள். தற்பொழுது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிக்கு முந்தைய நிலையில் உள்ள குழந்தைகள் அங்கன்வாடிக்கும், பள்ளிக்குச் செல்லும் வயதுடைய குழந்தைகள் பள்ளிக்கும் செல்கிறார்கள். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படுகிறது. அங்கன்வாடியிலுள்ள அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் மூலம் இது செயல்படுத்தப் படுகிறது. சத்துணவுப் பள்ளி மையங்களில் அமைப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் சமையல்காரர்கள் இதைச் செயல்படுத்துகிறார்கள்.


## அங்கன்வாடி உதவியாளர்களுக்கு தொகுப்பூதியம் உயர்வு

162. உதவியாளர்கள் மற்றும் சமையல்காரர் களுக்கு மேம்பட்ட வாழ்க்கைதரத்தை அளிக்கும் வகையில் அவர்களின் தொகுப்பு மதிப்பூதியம் உயர்த்தப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். தமிழ்நாடு ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்தவாறு மாதமொன்றிற்கு ரூபாய் 450 தொகுப்பு மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர் நிலை–I மற்றும் மதிய உணவுத் திட்ட சமையல்காரர்களின் அடிப்படைத் தொகுப்பு மதிப்பூதியத்தில் மேலும் 330 ரூபாய் உயர்த்தப்படும் என்று அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இதனால், இத்தகைய பணியாளர்களின் அகவிலைப்படியுடன் கூடிய மொத்த ஊதியம் சராசரியாக மாதம் 1,100 ரூபாய் என்ற அளவிற்கு உயரும். தமிழ்நாடு ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைத்தவாறு

மாதமொன்றிற்கு 400 ரூபாய் தொகுப்பு மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை–II மற்றும் சத்துணவுக் கூடத்தில் உள்ள உதவியாளர்களைப் பொறுத்த வரையில் கூடுதல் மதிப்பூதியமாக மாதம் 290 ரூபாய் வழங்கப்படும். இதனால் இவர்களின் அகவிலைப்படியுடன் கூடிய மொத்த ஊதியம் சாராசரியாக மாதமொன்றிற்கு 850 ரூபாய் என்ற அளவிற்கு உயரும். அகவிலைப்படி உயர்வு வீதம் இந்த இரண்டு பிரிவினருக்கும் தற்போதைய நிலையிலேயே தொடரும். இது 1.4.2005 முதல் அமலுக்கு வரும். இதற்கு ஆண்டிற்கு 47.97 கோடி ரூபாய் செலவாகும். தொகுப்பூதியம் பெறும் கடைநிலையில் பணியாற்றும் பணியாளர்கள் தங்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்ட இந்த முக்கிய புதிய நடவடிக்கைகளை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பார்கள்.

### சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு ஒட்டுமொத்த ஓய்வூதியப் பயன் திட்டம்

163. பணி ஓய்வு பெறும் பொழுது பயன் பெறும் வகையில் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்பது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் நீண்ட நாள் வேண்டுகோளாகும். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றில் பணியாற்றும் அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், உதவியாளர்கள் மற்றும் சமையற்காரார்கள் போன்ற ஓய்வூதியம் இல்லாத பணிகளைச் சார்ந்த பணியார்கள் பயன்பெறும் வகையில் ஒரு திட்டம் தயாரிக்கப்படும் என்று நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2004 அக்டோபரில் அறிவித்திருந்தார்கள். ஓய்வூதியத் திட்டம் வழங்க வேண்டும் என்ற நீண்டகாலக் கோரிக்கையை



நிறைவேற்றும் வகையில் இப்பணியாளர்கள் ஓய்வுபெறும் பொழுது ஒட்டு மொத்த தொகை அளிக்கும் ஓய்வூதியத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்படி வரையறுக்கப்படாத ஊதிய வீதங்களில் ஊதியம் பெறும் அங்கன்வாடி பணியாளர் மற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் போன்ற பணியாளர்களுக்கு அவர்கள் பணி ஓய்வுபெறும் பொழுது அரசு 50,000 ரூபாய் ஒட்டுமொத்த தொகையாக அளிக்கும். தொகுப்பு மதிப்பூதியம் பெறும் பணியாளர் ஒவ்வொருக்கும் அவர்கள் ஓய்வுபெறும் பொழுது அரசு 20,000 ரூபாய் ஒட்டுமொத்த தொகையாக அளிக்கும். இந்த ஒட்டுமொத்த ஓய்வூதியப் பயன் திட்டத்தினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 15 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களும் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தப் புதிய ஒட்டுமொத்த ஓய்வூதியப் பயன் திட்டத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பார்கள். இத்திட்டம் 1.4.2005 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.


164. பணியில் இருந்து ஓய்வு பெறும் பொழுது வழங்கப்படும் சிறப்பு வருங்கால வைப்புநிதி மற்றும் பணிக்கொடை திட்டத்திற்கான அரசின் பங்களிப்பை 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்பது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் மற்றொரு கோரிக்கையாகும். இவர்களின் அனைத்துக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்படும் என்று நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.10.2004 அன்றே குறிப்பிட்டிருந்தார்கள். அதன்படி 1.4.2005 முதல் சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை திட்டத்திற்கான அரசின் பங்களிப்பு, அரசுப் பணியாளர்களுக்கு உள்ளது போன்று 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இதற்கான செலவு, ஆண்டொன்றுக்கு 2 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### நிதிநிலைமைக் கணிப்புகள்

165. இப்போது இந்த மாமன்றத்தின் முன் நான் 2004-2005 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளை வைக்க விழைகிறேன். 2003-2004 ஆம் ஆண்டில் எய்திய நிதி நிலைத் திருப்புமுனை சாதனையைத் தொடர்ந்து, 2004-2005 ஆம்

ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் 3,336.43 கோடி ரூபாயாக இருந்த வருவாய்க் கணக்குப் பற்றாக்குறை, 2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 1,687.39 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. வருவாய்க் கணக்கு செலவுகள் அதிகரித்துள்ள போதிலும், இந்த அரசு, மேற்கண்ட வியத்தகு சாதனையை எய்தியுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 590.47 கோடி ரூபாயாக இருந்த மொத்தப் பற்றாக்குறையும், 2004-2005ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 124.98 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

166. 2004-2005 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், 24,792.30 கோடி ரூபாயாக இருந்த மொத்த வருவாய்க் கணக்கு வரவுகள், 2004-2005ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 27,049.40 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, 2003-2004



ஆம் ஆண்டுக் கணக்குகளை ஒப்பிடுகையில், 14.10 சதவிகித வளர்ச்சியைக் காட்டுகிறது. இந்தத் தனிச் சிறப்புமிக்க சாதனையை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் முழு மனதுடன் வரவேற்பர் என நம்புகிறேன். முக்கியமாக, மாநிலச் சொந்த வரிவருவாயின் கீழ், அதிக வரவுகள் கிடைத்ததன் காரணமாக, வருவாய்க் கணக்கிலான மொத்த வரவுகள் அதிகரித்துள்ளது. 2004-2005 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்க் கணக்கில் செலவு, 28,128.73 கோடி ரூபாயாக இருந்தது. ஆனால், இது 2004-2005 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 28,736.79 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய ஆண்டுக் கணக்குகளுடன் ஒப்பிடுகையில், 13.71 சதவிகித உயர்வைக் காட்டுகிறது.

167. மின்சார மானியம், உணவு மானியம் முதலியவை உட்பட, வறியோர் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த செலவுகள் அதிகரித்ததாலும், சுனாமி தொடர்பான நிவாரணப் பணிகள் குறித்த செலவுகளாலும், வருவாய்க் கணக்கில் செலவு உயர்ந்துள்ள போதிலும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது. வறியோர் நலனுக்கான ஒதுக்கீடு உயர்த்தப்பட்டிருப்பினும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை, கணிசமான அளவிற்குக் குறைந்துள்ள மகத்தான இந்தச் சாதனையை, இந்தப் பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பாராட்டுவர் என நம்புகிறேன். பணக் கையிருப்பு மேலாண்மை, இந்த ஆண்டில் சிறப்பாகக் கையாளப்பட்டது. மேலும், பொறுப்பேற்றுக் கொண்ட செலவுகளுக்குத் தொகை பட்டுவாடா செய்யப்படாத சிக்கலான நிலைமை, பழங்கதையாகிவிட்டது. தொலைநோக்குச் சிந்தனைமிக்க தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களைத் தவிர வேறு எவராலும் இந்த மகத்தான திருப்புமுனைச் சாதனையைப் படைத்திருக்க முடியாது.

168.2005-2006ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள், இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளன. 2005-2006 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் வரவுகள் 30,251.53 கோடி ரூபாயாக இருக்க, வருவாய் கணக்கில் செலவு 31,655.53 கோடி ரூபாயாக இருக்கும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. இதனால், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை 1,404 கோடி ரூபாயாக இருக்கும். வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை, மொத்த வருவாய் வரவுகளில் 4.64 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளலாம். 2003ஆம் ஆண்டு இயற்றப்பட்ட நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை முன்கூட்டியே எய்தும் நிலையில் நமது மாநிலம் உள்ளது என்பதையே இது காட்டுகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் அரசின் நிதிப் பற்றாக்குறை 6,350.57 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில், கடந்த காலங்களில், வரவு–செலவுத் திட்டம் சாரா வகையில், கடன்கள் பெற்று, செலவு செய்யப்பட்ட 232.30 கோடி ரூபாயும் அடங்கும். 2005-2006ஆம் ஆண்டு

வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதிப் பற்றாக்குறை, (முந்தைய காலச் செலவு நீங்கலாக) மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.86 சதவிகிதம் என்ற அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது.

## வரிச் சீர்திருத்தங்கள்

### மதிப்புக் கூட்டு வரி (Value Added Tax - VAT)

169. மாநில விற்பனை வரிக்கு மாற்றாக, மாநில மதிப்புக் கூட்டு வரியை, 1.4.2005 முதல் நடைமுறைப்படுத்துவது என்ற முடிவை, மத்திய அரசும், மாநில நிதியமைச்சர்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவும் எடுத்துள்ளதை மதிப்பிற்குரிய பேரவை உறுப்பினர்கள் அறிவார்கள். 1999 ஆம் ஆண்டு நவம்பர் 16, அன்று அப்போதைய மத்திய நிதியமைச்சரால் கூட்டப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து முதலமைச்சர்களின் மாநாட்டில், மாநில மதிப்புக் கூட்டு வரியைத் தக்க முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பின், அமல்படுத்துவதற்கு மாநிலங்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவைச் செயல்படுத்துவதற்காக, அதிகாரம் அளிக்கப்பட்ட மாநில நிதியமைச்சர்களின் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் பின்னர், அக்குழு அடிக்கடி கூட்டப்பட்டு, மாநில அளவில் மதிப்புக் கூட்டு வரியை அறிமுகப்படுத்துவதற்கான படிப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

170. மாநில மதிப்புக் கூட்டு வரியை 1.4.2003 முதல் அமல்படுத்துவதென முதலில் முடிவு செய்யப்பட்டது. எனினும், இம்முடிவு தள்ளி வைக்கப்பட்டது. மதிப்புக் கூட்டு வரி முறையில் பல முக்கிய அம்சங்களை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தியுள்ள தமிழகத்தில், மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதனால், பெருமளவில் வருவாய் இழப்பு ஏற்படும் என்று, அதிகாரமளிக்கப்பட்டக் குழுவின் கூட்டங்களில் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் மாநிலம் பெரும் நிதி இடர்ப்பாட்டினை எதிர்கொள்ள நேரிடும் எனவும் இக்கூட்டங்களில் வலியுறுத்திக் கூறப்பட்டது.

171. மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதனால், மாநிலங்களுக்கு வருவாய் இழப்பு ஏதேனும் ஏற்பட்டால் அதனை மத்திய அரசு 2005-2006ஆம் ஆண்டில் 100 சதவிகிமும், 2006-2007இல் 75 சதவிகிதமும், 2007-2008இல் 50 சதவிகிதமும் ஈடுசெய்யும் என மத்திய நிதியமைச்சர், நவம்பர் 2004இல் அறிவித்தார். மதிப்புக் கூட்டு வரி முறையில் வருவாய் ஒரு நிலைப்படும் வரைக்கும், இழப்பீட்டுத் தொகை முழு அளவில் வழங்கப்பட வேண்டுமென நாம் கேட்டோம். ஆனால், மதிப்புக் கூட்டு வரியால் ஏற்படும் இழப்பீடு தொடரும் காலம் வரை, முழு இழப்பீட்டுத் தொகையைத் தொடர்ந்து தர மைய அரசு ஒத்துக்கொள்ளாத நிலையில், மாண்புமிகு மேற்கு வங்காள நிதியமைச்சரின் தலைமையின் கீழான மாநில நிதியமைச்சர்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, மேற்கூறிய நிதி இழப்பை ஈடுசெய்யும் ஏற்பாட்டின் அடிப்படையில், பெரும்பான்மை முடிவாக 1.4.2005 முதல் அனைத்து மாநிலங்களிலும் மதிப்புக் கூட்டு வரி முறையை அமல்படுத்துவதற்கான கால அட்டவணையை தயாரித்துள்ளது. அமல்படுத்தப்படவுள்ள மதிப்புக் கூட்டு வரி முறையின் சிறப்பு அம்சங்களை விளக்குவதற்காக அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, 30.1.2005 அன்று சென்னையிலும் ஒரு கூட்டத்தை நடத்தியது.

172. மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதற்கான தேசிய அளவில் ஒருமித்த கருத்தை எட்டுவதற்காக உறுதியான முயற்சிகள் ஒருபுறம் எடுக்கப்பட்டபோதிலும் மதிப்புக் கூட்டு சங்கிலித் தொடரில் (value chain) வரக்கூடிய பல்வேறு பிரிவினர் எவ்வாறு பாதிக்கப்படுவர் என்பதில் சில ஐயப்பாடுகளும் எழுகின்றன. மத்திய அரசுடன் இணைந்து மாநில நிதியமைச்சர்களைக் கொண்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழு உருவாக்கியுள்ள மதிப்புக் கூட்டு வரியின் முக்கிய அம்சங்களை விளக்குவது இன்றியமையாததாகும். வரி மீது வரி என்பதைத் தவிர்க்க வேண்டியது மாநில மதிப்புக் கூட்டு வரி முறையின் அடிப்படை அம்சமாகும். பலமுனை வரி விதிப்பு முறையில், ஏற்கெனவே வரி செலுத்தப்பட்ட பொருளுக்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட வரியினையும் உள்ளடக்கி ஒவ்வொரு முனையிலும் வரி விதிக்கப்படும். ஆனால், மதிப்புக் கூட்டு வரி முறையில் ஒவ்வொரு விற்பனை நிலையிலும் அந்தந்த நிலைகளில் கூட்டப்பட்ட மதிப்பின் மீது மட்டுமே வரி விதிக்கப்படுகிறது. மேலும், முந்தைய நிலையில் செலுத்தப்பட்ட வரியினைக் கழித்துக் கொள்ளமுடியும். இந்த கோட்பாட்டின் அடிப்படையில்தான் மாநில மதிப்புக் கூட்டு வரிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

173. மாநில மதிப்புக் கூட்டு வரி முறை அமல்படுத்தப்படும்பொழுது, கூடுதல் விற்பனை வரி, மேல் வரி, மறு விற்பனை வரி போன்ற வரிகள் அனைத்தும் நீக்கப்படும். செலுத்தப்படும் நுழைவு வரி முழுவதும் மதிப்புக் கூட்டு வரியின் கீழ் செலுத்த வேண்டிய வரியில் முழுமையாகச் சரிக்கட்டிக்

கொள்ளப்படும். நாடு முழுவதும் ஒரே பொதுவான வரி விகிதம் இருக்கும். அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் விவசாயப் பொருட்களுக்கு 4 சதவிகித வரியும், இதரப் பொருட்களுக்கு 12.5 சதவிகித வரியும் இருக்கும். தங்கம், வெள்ளி, நகைகள் போன்றவற்றின் மீது சிறப்பு விகிதமாக ஒரு சதவிகித வரி விதிக்கப்படும். பெட்ரோல், டீசல், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள் (IMFS) போன்ற சில பொருட்கள், மதிப்புக் கூட்டு வரி முறையின் ஆய்வு வரம்பிலிருந்து எடுக்கப்பட்டு, அவைகளுக்குச் சிறப்பு விகிதங்களில் வரி விதிக்கப்படும்.

174. வரி விலக்கிற்கான பொருட்களைப் பொருத்தமட்டில், அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, முதலில் 36 பொருட்களைக் கொண்ட ஒரு பட்டியலை தெரிவித்தது. அப்பட்டியலில், தற்பொழுது தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில் வரி விலக்களிக்கப்பட்ட சில முக்கிய பொருட்கள் சேர்க்கப்படவில்லை. பின்னர், நமது கோரிக்கையை ஏற்று, அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, 46 பொருட்களை உள்ளடக்கிய கூடுதல் பட்டியலை அனுப்பி, அதில் மாநிலங்கள் 10 பொருட்களை மட்டும் தேர்வு செய்து கொள்ளலாமென தெரிவித்தது. இவ்வாறாக, தமிழ்நாட்டிற்கு தனித் தன்மை வாய்ந்த சில பொருட்கள், விலக்களிக்கப்பட்ட பட்டியலிலிருந்து விடுபட்டுவிட்டன. தமிழ்நாடு பொது விற்பனை வரியின் கீழ் விலக்களிக்கப்பட்ட சில பொருட்களுக்கு 4 சதவிகிதம் அல்லது 12.5 சதவிகிதம் மதிப்புக் கூட்டு வரியின் கீழ் வரி விதிக்க வேண்டியிருப்பது நமக்குக் கவலை அளிக்கிறது. பெரும்பான்மை முடிவின் காரணமாக, அதிகாரமளிக்கப்பட்ட குழு, விலக்களிப்பிற்கான 46 பொருட்களின் கூடுதல் பட்டியலில் 10 பொருட்களை தெரிவு செய்து கொள்ளலாம் என எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி விட்டதால் தமிழ்நாட்டில் விலக்களிக்கப் பட்டுள்ள சில முக்கியப் பொருள்கள் விடுபட்டுள்ளன. தமிழ்நாட்டு மக்களின் முக்கிய உணவுப் பொருளான அரிசியைக்கூட வரி விலக்களிக்கப்படும் பொருள்களின் பட்டியலில் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு சேர்க்கவில்லை. அரிசியை வரி விலக்களிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்க வேண்டுமென நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். இறுதியாக, உணவு தானியங்களை 0 சதவிகிதம் வரிக்குட்பட்ட இனத்தில், ஒரு ஆண்டிற்கு மட்டும் வைத்துக் கொள்ள ஜனவரி 2005–ல், மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட அதிகாரமளிக்கப்பட்ட குழு இசைவளித்தது. இந்த முடிவு ஓராண்டிற்கு பிறகு ஆய்வு செய்யப்படும் என அறிவித்துள்ளது.

175. மதிப்புக் கூட்டு வரி முறையில், ஒவ்வொரு கட்டத்திலும் மதிப்புக் கூடுதலுக்கு வரி விதிக்கப்படுவதால், மாநிலத்திற்குள் செலுத்தப்பட்ட வரியைக் கழித்துக்கொள்ள வகை செய்யப்பட வேண்டும். மாநிலத்திற்குள் ஒரு பொருளைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்களின் மீது கொள்முதலின் போது செலுத்தப்பட்ட வரி அனைத்தையும், அப்பொருளின் விற்பனையின்போது செலுத்தப்பட வேண்டிய வரியில் இருந்து கழித்துக் கொள்ள வகை செய்யப்பட வேண்டும். இவ்வரியைக் கழிப்பதாலும், கூடுதல் விற்பனை வரி, மேல்வரி, மறு விற்பனை வரி ஆகியன நீக்கப்படுவதாலும், குறிப்பிடத்தக்க அளவிற்கு ஏற்படும் வருவாய் இழப்பை, பல கட்டங்களில் ஏற்படும் மதிப்புக் கூடுதல்களுக்கு விதிக்கப்படும் வரியின் வாயிலாக ஓரளவு ஈடுசெய்ய இயலும். ஆனாலும், மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதனால், தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க அளவிற்கு நிகர வருவாய் இழப்பு இருக்கும் என்பதே எங்கள் கருத்தாகும். இதன் காரணமாகவே, வருவாய் இழப்பிற்கு முழுப் பாதுகாப்புக் கிடைக்கும் வகையில், தகுந்ததொரு இழப்பீட்டுக் கொள்கை வகுக்கப்படல் வேண்டுமென மாநில அரசின் சார்பாக, வலியுறுத்திக் கூறப்பட்டது. மத்திய அரசு இழப்பீட்டுத் தொகையை முதல் ஆண்டில் 100 சதவிகிதமும், இரண்டாம் ஆண்டில் 75 சதவிகிதமும், மூன்றாம் ஆண்டில் 50 சதவிகிதமும் அளிக்குமென தெரிவித்துள்ளது. முதல் ஆண்டில் ஏற்படும் இழப்பு முழுவதுமாக ஈடுசெய்யப்பட்டாலும், இரண்டாம் ஆண்டு முதற்கொண்டு ஏற்படும் வருவாய் இழப்பு கணிசமாக இருக்கும். இது தொடர்ந்து நமக்குக் கவலை தரக்கூடிய அம்சமாக உள்ளது.

176. சிறு வணிகர்கள் கணக்குகளைப் பராமரித்தல், வரி மதிப்பீட்டிற்கு உட்படுதல் போன்ற சிக்கல்களுக்கு உட்படுத்தப்படாத வகையில், மதிப்புக் கூட்டு வரி முறையில், தமிழ்நாடு பொது விற்பனை வரிச்



சட்டத்தின் கீழ் வணிகராகப் பதிவு செய்துகொள்ள வேண்டிய விற்பனைத் தொகை வரம்பு தற்பொழுது நடைமுறையில் உள்ள ரூபாய் மூன்று இலட்சத்திலிருந்து ரூபாய் ஐந்து இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், சுமார் 76,000 வணிகர்கள் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள். இதன்மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 55 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படக்கூடும் என்றாலும், சிறு வணிகர்களுக்கு உதவும் பொருட்டு மதிப்புக் கூட்டு வரி முறையில், இந்த ஏற்பாட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது. அத்துடன், ஆண்டிற்கு ஐம்பது இலட்சம் ரூபாய் வரை மொத்த விற்பனைத் தொகை உள்ள அனைத்து மறு விற்பனையாளர்களும் தங்களது விற்பனைத் தொகைக்கு ஒரு சதவிகித வரி மட்டும் செலுத்தக் கூடிய, இணக்க வரி விதிப்பு முறையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், மேலும் 74,000 வணிகர்கள் பயன்பெறுவர். இவ்வாறாக, சிறு வணிகர்களுக்குப் பயனளிக்கும் எளிமையான முறை மதிப்புக் கூட்டு வரிமுறையில் உள்ளது. அத்துடன், அனைத்து வணிகர்களும் தாங்களே சுய வரிவிதிப்பு செய்துகொள்ளும் வசதி அளிக்கப்பட்டு, இவ்வரி முறையை அனைவரும் எளிதில் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த வழிவகை செய்யப்படும். மதிப்புக் கூட்டு வரி முறையில் உத்தேசிக்கப்பட்ட கடுமையான தண்டனை விதிமுறைகள் கைவிடப்பட்டு, அதற்குப் பதிலாக, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் உள்ள அதே விதிமுறைகள் பின்பற்றப்படும்.

177. மதிப்புக் கூட்டு வரி முறை நடைமுறைக்கு கொண்டுவரப்படும் நாளுக்கு முற்பட்ட பன்னிரெண்டு மாதங்களில் கொள்முதல் செய்யப்பட்டு, நடைமுறைக்கு வரும் நாளில் ஆரம்ப இருப்பாக இருக்கும் பொருட்களுக்குப் பொது விற்பனை வரிச் சட்டத்தில் ஏற்கெனவே செலுத்தப்பட்ட வரி, (set off) கழித்துக் கொள்ளப்படும். மதிப்புக் கூட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு கொள்முதல் செய்யப்பட்ட மூலதனப் பொருட்களுக்கும் இடுபொருளின் மீது செலுத்தப்பட்ட வரி வரவு (input tax credit) வசதி அளிக்கப்படும். இது உற்பத்தியாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் அளிக்கப்படும். மாநிலத்தில் செலுத்தப்பட்ட உள்ளூர் வரி மற்றும் மத்திய விற்பனை வரி, ஆகியவற்றிற்கு வரி ஈடுசெய்துகொள்ளும் வசதி (set off) அளிக்கப்படும். மதிப்புக் கூட்டு வரி முறையில் கூடுதலாக செலுத்தப்பட்ட இடுபொருள் மீதான வரி வரவு (input tax credit) திருப்பி அளித்தல் உள்ளிட்ட வரியை திருப்பி அளிக்கும் ஏற்பாடு ஒரு சிறப்பு அம்சமாகும்.

178. மதிப்புக் கூட்டு வரிமுறை, வரி அமைப்பில் ஒரு பெரிய சீர்திருத்தம் என்பதால், அதன் முக்கிய அம்சங்களை நான் உங்களுக்கு விளக்கியுள்ளேன். சமுதாயத்திலுள்ள அனைத்துத் தரப்பினரிடையேயும், இதுபற்றிய தகுந்ததொரு ஒருமித்த கருத்தை உருவாக்கிட வேண்டியது அவசியமாகும். நமது அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி ஆகியவற்றில் மதிப்புக் கூட்டு வரி முறையை அமல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆளுநர் உரையில், மாநில மதிப்புக் கூட்டு வரியை 1.4.2005 முதல் அமல்படுத்தும் எண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தாலும் கூட, இவ்வரி முறை மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துமாதலால், தமிழகத்தில் உள்ள அனைத்து தரப்பு வணிகர்கள், சிறு வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோரை அரவணைத்துச் செல்ல வேண்டியது இன்றியமையாததாகும்.

179. மேலும், மாநில மதிப்புக் கூட்டு வரியானது, மாநிலத்தின் முழு ஆளுகைக்குட்பட்ட விற்பனை வரிக்கு ஒரு மாற்று ஏற்பாடாகும். மதிப்புக் கூட்டு வரி முறையை அமல்படுத்துவதாக இருந்தால், மாநிலத்திற்குள் அனைத்து தரப்பினரிடையே ஒரு கருத்தொற்றுமையை உருவாக்க வேண்டியது அரசின் கடமையாகும். மதிப்புக் கூட்டுவரி முறையின் முக்கிய அம்சங்களை இங்கு நான் எடுத்துரைத்திருக்கிறேன். அத்தகைய ஒருமித்த கருத்தை எய்துவது நமது பெருமுயற்சியாகும். அதன் பின்னரே, மாநில மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதற்கான சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில், மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள மதிப்புக் கூட்டு வரியைப் பற்றிய தங்களது கருத்துகளை தெரிவித்தால், அது அரசின் முயற்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

### ஏனைய வரிகள்

180. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்பனை செய்வதற்காக, இம்மாநிலத்திலுள்ள தனியார் மின் திட்டங்களில் மின்உற்பத்திக்கு எல்.எஸ்.ஹெச்.எஸ். (Low Sulphur Heavy Stock) பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொருட்களுக்கான நுழைவு வரிச் சட்டத்தின் கீழ்

இதற்கான நுழைவு வரி, 1.12.2001 முதற்கொண்டு 16 சதவிகிதமாகும். இத்தகைய மின்திட்டங்களிலிருந்து மின்சாரத்தை வாங்குகிற தமிழ்நாடு மின்சார வாரியம், இந்த வரியை இறுதியாக ஏற்க வேண்டியுள்ளது. இதனால், எரிசக்தியின் கொள்முதல் விலை உயர்வதோடு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மீதான நிதிச் சுமையும் அதிகரிக்கிறது. இந்த வரியின் தாக்கத்தைக் குறைக்கும் நோக்குடன், 1.4.2002 முதல் 31.3.2003 வரையில் ஓராண்டுக் காலத்திற்கு, இந்த வரி 16 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதத்திற்குக் குறைக்கப்பட்டது. எல்.எஸ்.ஹெச்.எஸ். (Low Sulphur Heavy Stock) மீது மிகக் குறைவாக 3 சதவிகித நுழைவு வரியை 1.4.2003 முதற்கொண்டு தொடர்ந்து செயல்படுத்த தற்போது கருதப்பட்டுள்ளது.

### முத்திரைத் தீர்வை

181. வங்கிகள், சொத்துகளைப் பிணையமாகப் பெற்று கடன்கள் வழங்குகின்றன. சில நேரங்களில், இந்தக் கடன்கள் முறையாக திருப்பிச் செலுத்தப்படாததால், இவை பயனளிக்காத சொத்துக்களாக (Non-Performing Assets) ஆகிவிடுகின்றன. இதுபோன்ற பயனளிக்காத சொத்துக்களைப் புனரமைக்கும் வகையிலும், அச்சொத்துக்களைப் புனரமைக்கும் நிறுவனங்களுக்கு மாற்ற ஏதுவாகவும் மத்திய அரசு 2002 ஆம் ஆண்டு நிதிச் சொத்துக்களைப் புனரமைத்தல் மற்றும் பிணைய உரிமையை செயலாக்கும் சட்டத்தை (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act 2002) இயற்றியுள்ளது. இத்தகைய சொத்து மாற்றத்திற்கு தமிழ்நாட்டில் 6 சதவிகித முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. இந்த உயரளவு முத்திரைத் தீர்வையால் இது போன்ற ஆவணங்கள் தமிழ்நாட்டில் பதிவுக்கு வருவதில்லை. இவ்வாறான ஆவணங்களின் பதிவினை ஊக்குவிக்கவும் மாநிலத்தின் முத்திரைத் தீர்வை வருவாயினை அதிகரிக்கவும், இவ்வாறான உரிமை மாற்றத்திற்கான முத்திரைத் தீர்வை விகிதத்தை 0.1 சதவிகிதமாகக் குறைத்திடவும் அதிகபட்ச முத்திரைத் தீர்வை 1 இலட்சம் ரூபாய் என நிர்ணயிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், பதிவுக் கட்டண விகிதத்தையும் 0.1 சதவிகிதமாகக் குறைத்திடவும் அதிகபட்சக் கட்டணமாக 20,000 ரூபாய் என நிர்ணயிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### வரிவிதிப்புகளே இல்லாத வரவு–செலவுத் திட்டம்

182. இந்த வரவு–செலவுத் திட்டம், வரி விதிப்புகளே இல்லாத ஒரு வரவு–செலவுத் திட்டம் என்பதை அறிவதில் மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சியடைவர் என நம்புகிறேன். 2005-2006ஆம் ஆண்டு இறுதியில், ஒட்டுமொத்தப் பற்றாக்குறை, 260.41 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. செலவினத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், வரி விகிதங்களில் எவ்வித மாற்றமும் இன்றி, வரி செலுத்துவதற்கான இணக்கமான சூழலை உருவாக்குவதன் மூலமும், இந்தப் பற்றாக்குறை ஈடு செய்யப்படும். மாநிலத்தின் கட்டமைப்பு வசதிகளை தரமுடன் மேம்படுத்தும் நோக்கோடும், தமிழ்நாட்டு மக்கள் பெரிதும் பயனடையும் வகையிலும் நல்ல பல அரிய திட்டங்களை உள்ளடக்கிய சிறந்ததொரு தொகுப்பை நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சேர்த்துள்ளார்கள். நான் தற்போது அறிவித்துள்ள வளர்ச்சித் திட்டங்களை இம்மாமன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பர் என நம்புகிறேன்.

183. வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நடுத்தரக் கால நிதித் திட்டத்தில் எதிர்காலத்திற்கான செயல் திட்டம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இதனை வரவு–செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக படிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன். ஏற்கெனவே எய்தப்பட்ட நிதிச் சமன்பாட்டைப் பேணிக்காத்து, நடுத்தரக் கால நிதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைவழிப் பயணிப்பதே இவ்வரசின் முயற்சியாக இருக்கும்.

184. இந்த வரவு–செலவுத் திட்டம் தொடர்பாக, அரிய ஆலோசனைகளையும், உயரிய வழிகாட்டுதல் களையும் நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

185. இந்த வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் பெரிதும் உதவிய, வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. ந. நாராயணன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அவருடன் பணியாற்றிய அலுவலர் குழுவிற்கும், இத்தருணத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

186. இத்துடன், 2005-2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கு அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு, மாண்புமிகு பேரவைத் தலைவரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்

*



# சுனாமியால் குழந்தைகளை இழந்தோர் மீண்டும் குழந்தைப்பேறு பெற்றிட இலவச அறுவை சிகிச்சை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
28.2.2005


26.12.2004 அன்று தமிழகத்திலுள்ள கடலோர மாவட்டங்களில் சுனாமி பேரலைகள் கடும் சீற்றத்துடன் தாக்கியதின் விளைவாக எட்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிர் இழந்ததுடன், இலட்சக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வீடுகளையும், உடைமைகளையும் மற்றும் தங்களது அனைத்து வாழ்வாதாரங்களையும் இழந்தனர். இயற்கையின் இந்தக் கடும் சீற்றத்தில் உயிர் இழந்த ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் அவர்களது குடும்பங்களுக்கு நிதியுதவியும், வீடுகள், உடைமைகள் வாழ்வாதாரங்களை இழந்தோருக்கு மறுவாழ்வு அளிக்க பல்வேறு உதவி தொகுப்புகளையும் எனது ஆணையின் கீழ் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

சுனாமியால் தங்களது பெற்றோர்களை இழந்து நிராதரவான குழந்தைகள், வளர் இளம் பெண்கள் மற்றும் ஆதரவற்ற திருமணம் ஆகாத பெண்கள் ஆகியோரின் பாதுகாப்பான எதிர்கால வாழ்விற்கு பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டுள்ளது. நிராதரவான குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகிய ஒவ்வொருவர் பெயரிலும் 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியுதவி, திருமணம் ஆகாத பெண்கள் ஒவ்வொரு பெயரிலும் 3 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியுதவி, மற்றும் குழந்தைகள் காப்பகங்களிலும், அரசு சேவை இல்லங்களிலும் தங்க வைத்துப் பாதுகாப்பாக வளர்த்திட ஏற்பாடு என அனைத்து நடவடிக்கைகளையும் நான் மேற்கொண்டுள்ளேன்.

பல பெற்றோர்கள் சுனாமியின் சீற்றத்திற்குத் தங்களது குழந்தைகளைப் பறிகொடுத்துள்ளனர். சுனாமியின் கொடுமையால் உயிரிழந்த குழந்தைகள் மற்றும் இளம் சிறார்களின் எண்ணிக்கை மட்டும் 2,500–க்கும் மேல் ஆகும். சுனாமி பேரலைகளின் கடும் சீற்றத்திற்கு ஆளாகி, தங்களது வீடுகள், உடைமைகள் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்ததுடன், தங்களது உற்றார் உறவினர்களையும் இழந்ததால் ஏற்பட்ட மன உளைச்சலை நீக்கி, வாழ்க்கையில் அவர்களுக்குப் பற்றுதலை ஏற்படுத்தவும், தங்களது செயல்பாடுகளில் நம்பிக்கையை அவர்களுக்கு அளிக்கவும், உளவியலாளர்களை (Counsellors) அனுப்பி, தேவையான உளவியல் ஆலோசனைகளை வழங்கிட நான் நடவடிக்கை மேற்கொண்டேன்.

இந்தக் கலந்தாலோசனைகளின் போது, ஏற்கெனவே குடும்ப நல அறுவை சிகிச்சை – அதாவது, ட்யூபெக்டமி (Tubectomy) செய்து கொண்ட, மகளிர் பலர் சுனாமியில் தங்களது குழந்தைகளை இழந்துள்ளனர் என்பதும், அவர்களில் பலர் தங்களது மன உளைச்சல் நீங்கி வாழ்க்கையில் ஒரு பற்றுதல் ஏற்படவும், தங்களது சந்ததி தொடரவும் தங்களுக்குப் பிள்ளைச் செல்வம் வேண்டும் என்று மிகவும் விரும்புகின்றனர் என்பதும் என் கவனத்திற்கு வந்தது.

இதனை அறிந்ததும் உடனடியாக இது குறித்த விவரங்களைச் சேகரிக்குமாறு நான் ஆணையிட்டேன். அதன் அடிப்படையில், இவ்வாறு குடும்ப நல அறுவை சிகிச்சை – அதாவது, ட்யூபெக்டமி செய்து கொண்ட மகளிர் பலர்,



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களை தலைமைச் செயலகத்தில் **18.3.2005** அன்று ஜெர்மனியிலுள்ள டோர்னியர் கன்சல்ன்டிங் நிறுவனத்தைச் சேர்ந்த நிருவாகி திரு. ஹீனர் ஷ்மெக் சந்தித்துப் பேசினார். அப்போது சென்னையிலுள்ள ஜெர்மன் துணைத்தூதர் திரு. ஹெய்ன்ஸ் கோப், டோர்னியர் கன்சல்ன்டிங் நிறுவனத்தின் சென்னைப் பிரதிநிதி திரு. ஸ்ரீதர் ஆகியோர் உடனிருந்தனர்.

சுனாமியில் தங்களது குழந்தைகளை இழந்த நிலையில், மீண்டும் குழந்தைப்பேறு பெற்றிட ஆர்வத்துடன் இருப்பது கண்டறியப்பட்டது. எனவே, இத்தகையோர் மீண்டும் பிள்ளைப்பேறு பெறும் வகையில், கருப்பாதை மறு இணைப்பு அறுவை சிகிச்சை (Re-canalisation) செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினால், அவர்களுக்கு இந்த மறு இணைப்பு அறுவை சிகிச்சையை அரசு மருத்துவமனைகளில் இலவசமாகச் செய்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன்.

இத்தகைய பிள்ளைப்பேறு மறு அறுவை சிகிச்சை (Re-canalisation) அரசு மருத்துவமனைகளில், சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், மதுரை இராஜாஜி அரசு பொது மருத்துவமனையிலும் மட்டுமே தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள், இவ்வளவு தொலைவு வந்து இந்தப் பிள்ளைப்பேறு மறு அறுவை சிகிச்சை மேற்கொள்ள ஏற்படும் சிரமத்தைக் குறைத்து, அருகிலேயே இந்த மருத்துவ வசதியை அவர்கள் பெற்றிடும் வகையில், கூடுதலாக கடலூர் அரசு பொது மருத்துவமனையிலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் இந்த மறு இணைப்பு அறுவை சிகிச்சைகளை அளித்திட நான் ஆணையிட்டுள்ளேன். இதற்கு வசதியாக, தேவைப்படும் சிறப்பு அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர்களையும், உபகரணங்களையும் உடனடியாக அந்த மருத்துவ மனைகளுக்கு அனுப்பிடவும் நான் ஆணைகள் பிறப்பித்துள்ளேன்.

மேலும், இத்தகைய பிள்ளைப்பேறு மறு அறுவை சிகிச்சையைத் தனியார் மருத்துவமனைகளிலும் செய்து கொள்ள அனுமதிப்பது எனவும் நான் முடிவு எடுத்துள்ளேன். எனவே, சுனாமியில் குழந்தைகளைப் பறிகொடுத்த மகளிர், பிள்ளைப்பேறு மறு அறுவை சிகிச்சையைத் தாங்கள் விரும்புகின்ற தனியார் மருத்துவமனைகளிலும் மேற்கொள்ளலாம். அவ்வாறு தனியார் மருத்துவமனையில் பிள்ளைப்பேறு மறு அறுவை சிகிச்சை மேற்கொள்பவர்களுக்கு அறுவை சிகிச்சைக்குரிய தொகையான 25,000 ரூபாயை நிதி உதவியாக வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன்.

ஒருவேளை, குடும்பத்தலைவர் குடும்ப நல அறுவை சிகிச்சை – அதாவது வாசெக்டமி (Vasectomy) செய்து கொண்டிருந்து, அக்குடும்பத்தில் உள்ள குழந்தைகள் சுனாமிக்குப் பலியாகி இருந்தால் அத்தகைய ஆண்களுக்கு குழாய் இணைப்பு மறு அறுவை சிகிச்சை (Re-canalisation) செய்து கொள்ளவும் மேற்சொன்ன உதவிகள் வழங்கப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் துன்பங்கள் நீங்கி மறுவாழ்வு பெற்றிடவும், மன உளைச்சல் நீங்கி நிம்மதியுடன் வாழ்க்கையைத் தொடரவும் ஒல்லும் வகையெல்லாம் உதவுகின்ற அரசாக எனது அரசு என்றும் விளங்கும்.

□ □ □

# நல்லன்போடு வாரி வழங்கிய நெஞ்சங்களுக்கு உள்ளன்போடு நன்றியை உரித்தாக்குகிறேன்



26.12.2004 அன்று தமிழகத்தின் கடலோர மாவட்டங்களை, முன் எப்போதும் இல்லாத வகையில் திடீரெனவும், கடும் சீற்றத்துடனும் சுனாமிப் பேரலைகள் தாக்கியதின் விளைவாக கடலோரப் பகுதிகளில் மிகுந்த உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டன. இதனால் இலட்சக்கணக்கான குடும்பங்கள் தங்களுடைய வீடுகளையும், உடைமைகளையும் இழந்தனர்; நூற்றுக்கணக்கான குழந்தைகள் நிராதரவாயினர். ஒட்டுமொத்தத் தமிழகமே துயரத்தில் மூழ்கியது.

இத்தகைய ஒரு கொடுந்துயரம் மாநில அரசால் மட்டுமன்றி சமுதாயத்தின் ஒட்டுமொத்த துணையோடும் எதிர்கொண்டு வெற்றி கொள்ளப்பட வேண்டிய ஒன்று ஆகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு நிவாரணம் அளிக்கவும், மறுவாழ்வு வழங்கவும், தமிழக அரசு மேற்கொண்டு வரும் சீரிய பணிகளுக்குத் தாராளமாக நிதி வழங்குமாறு நான் வேண்டுகோள் விடுத்திருந்தேன். எனது வேண்டுகோளை ஏற்று, பல்வேறு தரப்பினரும் மகத்தான அளவில் நிதி உதவி வழங்கியுள்ளது எனக்கு மன நிறைவையும், மன நெகிழ்வையும் அளித்துள்ளது. இந்த நன்கொடைகள், நமது நாட்டின் அழிக்க முடியாத ஒருமைப்பாட்டுக்கும், ஒற்றுமைக்கும் ஒரு எடுத்துக்காட்டு என்பதோடு, நாட்டு மக்களிடையே நிலவும் சகோதரத்துவத்துக்கும் இதுவே ஒரு நல் உதாரணம் ஆகும்.

பல்வேறு மாநில அரசுகள், அரசியல் இயக்கங்கள், தொழில் நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், வணிகர்கள், திரை உலகத்தினர், பல்வேறு பணியாளர் சங்கங்களைச் சேர்ந்தோர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், இல்லத்தரசிகள், மருத்துவத்துறை சார்ந்தோர் போன்ற சமூகத்தின் பல பிரிவினரும் உள்ளன்போடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு என்னிடம் வாரி வழங்கி உள்ளீர்கள். பலர் என்னிடம் நேரடியாகவே நிதி உதவி வழங்கி உள்ளனர். இன்னும் ஏராளமானோர் அஞ்சல் மூலம் நிதி உதவி வழங்கி உள்ளனர்.

தமிழகத்திலும், இந்தியாவிலும் மட்டுமல்லாமல் உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களும் தங்கள் நெஞ்சத்து அன்பையும், பரிவையும் நிதி உதவி மூலம் புலப்படுத்தி உள்ளார்கள். உடலால் பல்லாயிரம் கிலோ மீட்டர் தொலை தூரத்தில் இருந்தாலும், அவர்களது உள்ளம் தாய்த் தமிழகத்தில் வாழும் சகோதர சகோதரிகளுக்காக உருகி இருப்பது என் நெஞ்சை நெகிழச் செய்கிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவிடும் வகையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு இதுவரை மொத்தம் 137.16 கோடி ரூபாய் நிதி பெறப்பட்டுள்ளது. இந்த நிதி முழுமையும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு இனி பெறப்படுகின்ற நிதி, இயற்கை இடர்பாடுகளால் பாதிப்புக்கு உள்ளாகும் மக்களுக்கும், பல்வேறு இன்னல்களுக்கு இலக்காகும் நலிவுற்ற மக்களுக்கும் மற்றும் ஏழை எளிய மக்களுக்கும் நிதி உதவி வழங்கிடப் பயன்படுத்தப்படும். இதற்கு உதவிடும் வகையில் தயாள சிந்தனையோடு நலிந்த மக்கள் மீது பரிவு காட்டுகின்ற பண்பாளர்களும், கொடை உள்ளம் படைத்தவர்களும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தொடர்ந்து நிதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆழிப் பேரலையால் அவலத்திற்கு உள்ளான மக்களுக்கு ஆதரவு அளித்து அன்புக் கரம் நீட்டி வாரி வழங்கிய ஒவ்வொருவருக்கும் எனது உளமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**நல்லன்போடு உதவிய உங்கள் அனைவருக்கும் உள்ளன்போடு நான் நன்றி உரைக்கிறேன்.**

**ஜெ ஜெயலலிதா**

தமிழக முதலமைச்சர்

# எச்ஐவி இறப்புகளைக் குறைத்திட எச்ஐவி பாசிட்டிவ் குடும்பங்களுக்கான முழுப்பாதுகாப்பு மற்றும் சிகிச்சை வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில் எச்ஐவி பாசிட்டிவ் என்று கண்டறியப்பட்டுள்ள குடும்பங்களில் எச்ஐவி தொடர்பான இறப்புகளைக் குறைத்திடவும், குழந்தைகள் ஆதரவற்றவர்களாக ஆக்கப் படுவதைத் தடுத்திடவும், தமிழ்நாடுஅரசு, இங்கிலாந்து நாட்டின் குழந்தைகள் மூலதன நிதி நிறுவனத்துடன் இணைந்து "தமிழ்நாடு எச்ஐவி பாசிட்டிவ் குடும்பங்களுக்கான முழுப் பாதுகாப்பு மற்றும் சிகிச்சை வழங்கும் திட்டத்தை" செயல்படுத்திட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் எச்ஐவியால் பாதிக்கப் பட்டோருக்கு மருத்துவச் சிகிச்சை அளித்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். மேலும் எச்ஐவி சிகிச்சையை முன்வந்து மேற்கொள்ளவும், அதுகுறித்த விழிப்புணர்வு சமுதாயத்தில் ஏற்படவும் இத்திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படும்.



இதற்கான ஒப்பந்தம் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது. தமிழ்நாடு அரசின் சார்பாக சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறைச் செயலாளர் திருமதி. ஷீலா ராணி சுங்கத் இ.ஆ.ப., அவர்களும், இங்கிலாந்து நாட்டின் குழந்தைகள் மூலதன நிதி நிறுவன அமைப்பின் சார்பில் அதன் காப்பாளர் திரு.கிறிஸ் கூப்பர் ஆன் (Mr.Chris Cooper-Hohn. Trustee of the Children's Investment Fund Foundation, London) அவர்களும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இத்திட்டத்தின் கீழ் 1,000 நபர்களுக்கு கூட்டு மருந்து சிகிச்சை அளிப்பது, 4,000 நபர்களுக்கு ஊட்டச்சத்து உணவுப் பொருட்கள் தருவது, 4,000 நபர்களுக்கு சிடி 4 அளவு பரிசோதனை செய்வது, திட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது, மருத்துவ ஆராய்ச்சித் துறையின் அண்மைக் கால கண்டுபிடிப்புகள் பற்றி கருத்தரங்குகள் நடத்துவது, அரசு சாரா அமைப்புகள் மூலம் சமுதாயப் பணிகள் மேற்கொள்வது, எச்ஐவி பாதிப்புக்குள்ளானோர் ஒருங்கிணைப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைப்புகளை மேற்கொள்வது ஆகிய பணிகள் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்கான 7.96 கோடி ரூபாய் நிதியை இங்கிலாந்து நாட்டின் லண்டனில் உள்ள குழந்தைகள் மூலதனம் நிதி நிறுவனம் வழங்கும். இதனைச் சிறந்த முறையில் செயல்படுத்திடத் தேவையான மருத்துவர்களையும், ஏனைய அனைத்து வசதிகளையும் தமிழ்நாடு அரசு வழங்கும். இத்திட்டம் மூன்றாண்டு காலம் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு அரசின் சார்பில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் முகமையாக தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் இயங்கும். இத்திட்டம், சேலம், திருநெல்வேலி மற்றும் சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. என்.தளவாய்சுந்தரம், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்தின் திட்ட இயக்குநர் திரு. எஸ். விஜயகுமார் மற்றும் Solidarity and Action Against the HIV Infection in India-SAATHI அமைப்பினைச் சார்ந்த திருமதி. சுபா ராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

❖ ❖ ❖

# மகளிர் விடுதலைச் சுடரை முன் எடுத்துச் செல்லுங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்
"சர்வதேச மகளிர் தின" வாழ்த்துச் செய்தி



'சர்வதேச மகளிர் தினம்', உலகெங்கிலும் உள்ள மகளிரும், மகளிர் அமைப்புகளும் தங்களுடைய நாடு, இனம், மொழி, கலாச்சாரம், பொருளாதாரம் மற்றும் அரசியல் வேறுபாடுகளை மறந்து, ஒன்றுபட்டு, சமத்துவம், நீதி, கண்ணியம், வளர்ச்சி ஆகிய தங்களது இலட்சியங்களை எய்திட தங்களை மறு அர்ப்பணம் செய்து கொள்கிற ஒரு தினம் ஆகும்.

மகளிருக்கு நியாயமான வாய்ப்புகள் கிடைக்கப் பெற வேண்டும் என்பது என்னுடைய நெஞ்சுக்கு நெருக்கமான ஒரு கொள்கையாகும். அனைத்துப் பொதுக் கொள்கைகளுமே, மகளிர் தங்களது உரிமைகளையும், அதிகாரங்களையும் பெறுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருவனவாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை ஆகும். கொள்கைகளை வகுத்து, திட்டங்களைச் செயல்படுத்தும்போது, மகளிர் பிரச்சினைகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பது எப்போதுமே என்னுடைய முயற்சியாக இருந்து வந்துள்ளது. இதுவே, தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், மகளிர் சுய உதவிக் குழு இயக்கம், நாட்டிலேயே முதன்முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், அனைத்து மகளிர் அதிரடிப்படை, அனைத்து மகளிர் காவலர் அணி ஆகியவற்றை உருவாக்கியதற்கும், மகளிருக்கான தொழிற்பேட்டைகள் போன்ற பல முன்னோடித் திட்டங்களை நான் அறிமுகப் படுத்தியதற்கும், மகளிரிடையே நம்பிக்கை உணர்வையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்திட மகளிருக்கான சேவைகளின் தன்மையை உயர்த்தி பல்வேறு நடவடிக்கைகளை நான் மேற்கொண்டதற்கும் ஆதாரச் சுருதியாக விளங்கியது. தமிழ்நாட்டிலுள்ள தாய்மார்களுக்கும், பெண் இனத்திற்கும் முன் எப்போதும் இல்லாத வகையிலான ஒரு முக்கியத்துவத்தை வழங்கும் வகையில், குழந்தைகளின் தலைப்பெழுத்தாக அந்தக் குழந்தையுடைய தாயின் பெயரையும் வைத்துக் கொள்ள நான் ஆணையிட்டேன்.

சம வாய்ப்புகளும், நியாயமான சந்தர்ப்பங்களும் அளிக்கப்படுமேயானால், எல்லாத் துறைகளிலுமே பெண்கள் ஆண்களை விஞ்சிவிட முடியும் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கையாகும். ஆண்களின் கோட்டைகள் என இதுவரை கருதப்பட்டு வந்த பல துறைகளில் இன்றைக்கு மகளிர் வியத்தகு சாதனைகள் பல படைத்து வருவதை அன்றாடம் நாம் கண்டு வருகிறோம். இந்தச் சாதனையின் விளைவாகப் பிறந்த புதிய நம்பிக்கையை ஆக்கப்பூர்வமான வழிகளில் மேலும் வலுப்படுத்த, மகளிர் விடுதலைச் சுடரை முன் எடுத்துச் சென்று, மிகவும் நலிந்த, உரிய வாய்ப்புகள் கிடைக்கப் பெறாத தங்கள் சகோதரிகளின் முன்னேற்றத்திற்கு தங்களுடைய அறிவு, திறன், ஆற்றல் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, எனது அனைத்து சகோதரிகளுக்கும் என்னுடைய இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சோதனைகளும், சவால்களும் நிறைந்த இன்றைய சூழ்நிலையில் சமத்துவம், கண்ணியம், வாய்ப்பு மற்றும் வாழ்க்கையின் முழுமையான வளங்களைப் பெறுவதற்கான உரிமை ஆகியவற்றைப் பெற்றிட நம்மை நாமே மறு அர்ப்பணம் செய்து கொள்வோமாக!

# சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு பன்னாட்டுத் தரச் சான்றிதழ்

மிகச் சிறப்புடன் செயல்பட்டு வருகின்ற முதன்மை நிறுவனங்களை ஆய்வு செய்து தரம் மற்றும் சான்றினை நிர்ணயிக்கும் உலகளாவிய அமைப்பான, ஜெனீவாவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் The International Organisation for Standardization & Certification அமைப்பு, உலகத் தரம் வாய்ந்த மருத்துவச் சிகிச்சையையும், மருத்துவக் கல்வி முறையையும் வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு பொது மருத்துவமனைக்கு ISO 9001 : 2000 என்னும் பன்னாட்டுத் தரச் சான்றிதழை வழங்கி உள்ளது. இச்சான்றைப் பெற்றதன் மூலம் சென்னை மருத்துவக் கல்லூரியும் அரசு பொது மருத்துவமனையும் உலகளாவிய அங்கீகாரமும், மிகச் சிறந்த மருத்துவ சேவை வழங்குகின்றது என்பதற்கான சான்றும், மிகவும் சிறப்பான உயர்தர மருத்துவக் கல்வி வழங்கப் படுகின்றது என்பதற்கான ஒப்புதலும் பெற்று பெருமை அடைந்துள்ளது.



ஜெனீவாவைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்ற உலகளாவிய நிறுவனமான The International Organisation for Standardization & Certification என்னும் அமைப்பு, உலகத் தரம் வாய்ந்த மருத்துவச் சிகிச்சையும், கல்வி முறையையும் வழங்குவதன் அடிப்படையில் சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு ISO 9001 : 2000 என்னும் பன்னாட்டுத் தரச் சான்றிதழை வழங்கியுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், இந்தச் சான்றிதழை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. என். தளவாய் சுந்தரம் அவர்கள் வழங்கினார்.

இந்த பன்னாட்டுத் தரச் சான்றிதழ், அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்கிட அயராது பாடுபட்டு வருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கடின உழைப்பிற்கும், மேன்மை சிந்தனைக்கும் கிடைத்திருக்கும் வெற்றி ஆகும். ★

# பல்வேறு துறைகளின் பயன்பாட்டுக்கென 52 புதிய வாகனங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்




**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரித் துறை, சிறுதொழில் துறையின் மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை ஆகிய துறைகளின் பயன்பாட்டுக்கென மொத்தம் 52 புதிய வாகனங்களை வழங்கினார்கள்.

**வணிகவரித்துறை**

அரசுக்குப் பெருமளவு வருவாய் ஈட்டித் தரும் வணிகவரித் துறையின் வரி வசூல் பணிக்காக அலுவலர்கள் பயன்படுத்தி வரும் வாகனங்களில் மிகவும் பழமையான வாகனங்கள் சாலைகளில் செல்வதற்குத் தகுதியற்றவை எனக் கண்டறியப்பட்டு அவற்றிற்குப் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்பட வேண்டுமென கோரப்பட்டு வந்தது. வணிகவரி அதிகாரிகள் வரி வருவாயினைத் திறம்பட வசூலிக்க ஏதுவாக மிகப் பழமையான இந்த வாகனங்களுக்குப் பதிலாக 31 புதிய வாகனங்கள் வாங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

சென்னை, திருச்சி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களின் வணிக வரி உதவி ஆணையர்களுக்கும், சென்னை, திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் வரி அமலாக்க வணிக வரி உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர்களுக்கும் வழங்கப்படுகின்ற இந்த 31 புதிய வாகனங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1-3-2005 அன்று

வழங்கினார்கள். வணிகவரித் துறையின் ஒட்டுநர்களான திரு. எஸ். லூர்துசாமி, திரு. வி.கே. ஏழுமலை, திரு.கே. ஹரி, திரு. என். தனபால் ஆகியோரிடம் வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்.

**சிறுதொழில் துறை**

தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றி நமது மாநிலத்தை முதன்மை மாநிலமாக உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளில் சிறுதொழில் துறையைச் சார்ந்த தொழில் வணிகத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், இதுவரை தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் 216 வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்கள் உருவாக்கப் பட்டுள்ளன. 138.43 கோடி ரூபாய் செலவில் 144 ஊராட்சி ஒன்றியங்களில் உருவாக்கப்பட்டுள்ள இந்த தொழிற்சாலைகளின் மூலம் 5,638 மகளிர் உட்பட 8,335 தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். தமிழகத்தின் அனைத்து ஒன்றியங்களிலும் இதுபோன்ற தொழில்களை உருவாக்க இந்தத் துறையைச் சார்ந்த களப்பணியாளர்கள், உள்ளடங்கிய கிராமப்புறங்களுக்கும் சென்று முனைப்புடன் செயல்படவும், அரசுத் திட்டங்கள் பற்றிய விளக்கங்களை அப்பகுதியில் உள்ள மக்களுக்கு எடுத்துக்கூறி புதிய தொழில் முனைவோரை உருவாக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த ஆண்டில் 16 மாவட்டங்களில் உள்ள மாவட்ட தொழில் மையங்களுக்கு புதிய வாகனங்களை வழங்கிட ஆணையிட்டார்கள். இதன்படி, தேனி, காஞ்சிபுரம், நாமக்கல், தூத்துக்குடி, நீலகிரி, தஞ்சாவூர், ஈரோடு, சேலம், திருச்சிராப்பள்ளி, விருதுநகர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், திருவள்ளூர், வேலூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 16 மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்களுக்கும் 16 வாகனங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று வழங்கினார்கள். மாவட்டத் தொழில் மையங்களில் ஒட்டுநர்களாகப் பணியாற்றுகின்ற தேனி மாவட்டம் திரு. கே. சுப்பையா, காஞ்சிபுரம் மாவட்டம் திரு. எம். கேசவன், நாமக்கல் மாவட்டம் திரு. என். சித்தேஸ்வரன் ஆகியோரிடம் வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்கள்.

**செய்தி மக்கள் தொடர்புத்துறை**

அரசின் சாதனைகள், கொள்கை முடிவுகள், நலத்திட்டங்கள் முதலியவற்றை நவீன தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு விளக்கும் பணியை செய்தி மக்கள் தொடர்புத்துறை மேற்கொண்டு வருகிறது. இதற்கென கிருஷ்ணகிரி, தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, விருதுநகர் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கு புதிய வீடியோ வாகனங்களை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த வாகனங்களுக்கான சாவிகளை செய்தி மக்கள் தொடர்புத் துறை வாகன ஒட்டுநர்களான கிருஷ்ணகிரி மாவட்டம் திரு. எஸ். பாக்யநாதன், திண்டுக்கல் மாவட்டம் திரு. சி. தங்க பாண்டி ஆகியோரிடம் இந்த வாகனங்களை 1.3.2005 அன்று வழங்கினார்கள்.


இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வணிகவரித் துறை செயலாளர் மற்றும் ஆணையர் (பொறுப்பு) திரு. எஸ். ராஜரத்தினம், இ.ஆ.ப., சிறுதொழில் துறை செயலாளர் திரு. டி. ராஜேந்திரன், இ.ஆ.ப., செய்தி மற்றும் சுற்றுலாத் துறை செயலாளர் திரு.வ.ராமதாஸ், இ.ஆ.ப., தொழில் ஆணையரும் தொழில் வணிகத் துறை இயக்குநருமான திரு. என். வாசுதேவன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை ஆணையர் மற்றும் இயக்குநர் மற்றும் அலுவலால் அரசு சிறப்புச் செயலாளர் திரு. வ. கனகராஜ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாகனங்களுக்கான சாவிகளைப் பெற்றுக் கொண்ட வணிக வரித்துறை, சிறுதொழில் துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை ஒட்டுநர்கள் மற்றும் அலுவலர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

❖ ❖ ❖

# தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் திறந்து வைத்தார்கள்




**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2 கோடி ரூபாய் செலவில், சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் முதற்கட்டமாகக் கட்டப்பட்டுள்ள தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடத்தை, 3.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தினுள், தமிழ் வளர்ச்சித் துறைக்கெனவும் மற்றும் தமிழ் வளர்ச்சி – பண்பாடு சார்ந்த துறைகளின் அலுவலகங்கள் அமைந்திடவும் 6.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏழு அடுக்கு மாடிகளுடன் உருவாக்கப்படும் தமிழ் வளர்ச்சி வளாகத்தின் முதற்கட்டப் பணியாக 2 கோடி ரூபாய் செலவில், தரைக்குள் தளம், தரைத்தளம், முதல் தளம் ஆகியன கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தரைக்குள் தளம் 3,751 சதுர அடி, தரைத்தளம் 9,611 சதுர அடி, முதல் தளம் 9,775 சதுர அடி என மொத்தம் 23,137 சதுர அடிப் பரப்பில் இக்கட்டடம் அமைந்துள்ளது. அனைத்து அடிப்படை வசதிகளுடனும், மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புடனும் இந்தப் புதிய கட்டடம் உருவாக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 3.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் இந்தப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி.வி.சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. பு.ஏ.இராமையா, இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. ம.இராசேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தற்போது சென்னை குறளகம் கட்டடத்தில் 55,198 ரூபாய் மாத வாடகையில் இயங்கி வரும் தமிழ் வளர்ச்சி இயக்கக அலுவலகம், இனி தமிழ் வளர்ச்சி வளாகக் கட்டடத்தில் இயங்கும். இந்தப் புதிய கட்டடத்தின் தரைக்குள் தளத்தில் தொல்லியல் துறையின் அச்சகப் பிரிவும், தரைத் தளத்தில் தொல்லியல் துறை இயக்ககமும், முதல் தளத்தில் தமிழ் வளர்ச்சி இயக்ககமும் செயல்படும். ★

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதினைப் பெற்றவர்கள் சந்திப்பு



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தின் ஊரக சுகாதாரத்தை மேம்படுத்த மேற்கொண்ட பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளின் காரணமாக, இந்த ஆண்டு, தூய்மை மற்றும் சுகாதாரத்திற்காக மத்திய அரசு வழங்கும் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதினை (Nirmal Gram Puraskar Award) பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த 12 கிராம ஊராட்சிகளின் தலைவர்கள், ஒரு ஊராட்சி ஒன்றியம் மற்றும் அதனைச் சார்ந்த 10 ஊராட்சிகளின் தலைவர்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 3.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து வாழ்த்துகளைப் பெற்றார்கள்.

தூய்மை கிராமங்களுக்கு நிர்மல் கிராம் புரஸ்கர் விருதுகள் வழங்கும் மத்திய அரசின் இந்தத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு மத்திய அரசு வழங்கிய 39 விருதுகளில், 13 விருதுகளை தமிழகமே பெற்றுள்ளது என்பதும், இதன் மூலம், இதற்கென மத்திய அரசு வழங்குகின்ற ரொக்கப் பரிசில் 35 சதவிகிதத்தை தமிழகமே பெற்று பெருமை சேர்த்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஊரக சுகாதாரத்தில் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன் மாநிலமாக மாற்றிட பல்வேறு முனைப்பான திட்டங்களைத் தீட்டி சுகாதாரப் புரட்சிக்கு வித்திட்டுள்ளார்கள். சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் சமுதாயப் பங்கேற்புடன் கூடிய "தூய்மை கிராம இயக்கம்" (Clean Village Campaign) எனும் உன்னதத் திட்டத்தைச் செயல்படுத்த 2003-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

தூய்மை கிராம இயக்கத்தின் கீழ் சிறப்பாகச் செயல்படும் ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு ஊராட்சிக்கும் 5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

அறிவித்தார்கள். அதன்படி, 15.8.2004 சுதந்திரத் திருநாள் அன்று 15 ஊராட்சிகளுக்கு 75 இலட்சம் ரூபாய் பரிசுகள் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், முழு சுகாதார இயக்கத்தை முழு வீச்சில் செயல்படுத்தி அதனை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினார்கள். 2001ஆம் ஆண்டு 15 சதவிகிதமாக இருந்த சுற்றுப்புற சுகாதாரம், தற்போது 50 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

ஊரக சுகாதாரத்தை மேம்படுத்த தமிழக அரசு எடுத்த பல்வேறு முயற்சிகளை மத்திய அரசு பாராட்டியுள்ளது. முழு சுகாதாரத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழக அரசு முன்னிலை வகிக்கிறது என்று யுனிசெஃப் நிறுவனமும் பாராட்டி உள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தின் தூய்மையான கிராமங் களுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவித்து, 13 மாவட்டங்களில் உள்ள இத்தகைய 15 ஊராட்சிகளுக்கு 15.8.2004 சுதந்திரத் திருநாள் அன்று பரிசுகளை வழங்கினார்கள். இதே ஆண்டில் மத்திய அரசும், இந்தியா முழுமையும் உள்ள தூய்மையான கிராமங்களுக்கு "நிர்மல் கிராம் புரஸ்கார்"என்னும் பெயரில் விருதுகள் வழங்கப்படும் என்றும், அந்த ஊராட்சிகளுக்கு ரொக்கப் பரிசு அளிக்கப்படும் என்றும் அறிவித்தது.

இந்தத் திட்டத்தின்படி, கிராமங்களில் திறந்தவெளியில் மலங்கழித்தலைத் தவிர்த்தல், ஒவ்வொரு வீட்டுக்கும் தனிநபர் கழிவறை கட்டுவதுடன் அதனைப் பயன்படுத்துதல், பள்ளி மற்றும் அங்கன்வாடி கழிப்பறை கட்டுதல் ஆகியவற்றை முழுமையாகச் செயல்படுத்தியதற்காக மத்திய அரசு இந்த ஆண்டு இந்தியா முழுமையும் 39 உள்ளாட்சி அமைப்புகளைத் தேர்வு செய்தது. இதில், தமிழகத்திலிருந்து 12 கிராம ஊராட்சிகளும், ஒரு ஊராட்சி ஒன்றியமும் (10 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கியது) மத்திய அரசின் "நிர்மல் கிராம் புரஸ்கார் விருது"க்காக தேர்ந்தெடுக்கப்பட்டன. இதன் மூலம் மொத்த ரொக்கப் பரிசுத் தொகையில் 35 சதவிகிதத்தை மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு பெற்று பெருமை சேர்த்துள்ளது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களும், ஊராட்சி ஒன்றிய தலைவரும், மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து 24.2.2005 அன்று புதுதில்லியில் உள்ள விஞ்ஞான பவனில் நடைபெற்ற விழாவில் விருதுகள் பெற்றனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தின் சுகாதாரத்தை மேம்படுத்த மேற்கொண்ட பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளைச் செயல்படுத்தியதன் காரணமாக, இவ்வாறு தேசிய விருது பெற்றுள்ள தமிழகத்தின் ஊராட்சித் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவரும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 3.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.


விருது பெற்ற ஊராட்சிகளின் தலைவர்கள் அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், "நீங்கள் தொடங்கி வைத்த தூய்மை கிராமம் திட்டம் (Clean Village Campaign) மற்றும் மழைநீர் சேகரிப்புத் திட்டம் ஆகிய திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியதன் விளைவாகவே நாங்கள் தேசிய விருது பெற முடிந்தது" என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டனர். அதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், "இந்தியாவின் இதயம் கிராமங்களில் தான் உள்ளது என்று மகாத்மா காந்தியடிகள் கூறியதை நீங்கள் மெய்ப்பித்து விட்டீர்கள்" என்று கூறி அவர்களைப் பாராட்டினார்கள். மேலும், கிராமங்களின் தூய்மையைத் தொடர்ந்து பராமரித்து ஒவ்வொரு ஆண்டும் இது போன்ற விருதுகளைப் பெற வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்த்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ரானேஷ்,இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறை முதன்மைச் செயலாளர், திரு. என். நாராயணன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை செயலர் திருமதி. சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் டாக்டர் மூ. இராசாராம், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

★ ★ ★



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு புதிய வலைதளம்




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தொடர்பான தகவல்கள் அடங்கிய புதிய வலைதளத்தினைத் (Website) தொடங்கி வைத்தார்கள். இதன் முகவரி http://www.assembly.tn.gov.in என்பதாகும்.

இவ்வலைதளத்தில், சட்டமன்றப் பேரவை வரலாறு குறித்து விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆளுநர் உரைத்தொகுப்பு, நிதிநிலை அறிக்கைகள், அமைச்சரவை, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் விவரங்கள் பெயர் வாரியாகவும், தொகுதி வாரியாகவும், கட்சி வாரியாகவும் மற்றும் சட்டமன்றப் பேரவை விதிகள், சட்டமன்றக் குழுக்களின் விவரங்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இவ்வலைதளத்தினைத் தொடங்கி வைத்து, ஜனநாயக அமைப்பின் செயல்பாட்டில் ஆர்வம் உள்ள அனைவருக்கும் இந்த வலைதளம் பேருதவியாக அமையும் என்று தெரிவித்து தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வரகூர் அருணாசலம் அவர்கள், பேரவை முன்னவரும், மாண்புமிகு நிதியமைச்சருமான திரு. சி. பொன்னையன் அவர்கள் மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. வெ. ராசாராமன் ஆகியோர் உடனிருந்தனர். ✶



# திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் கணினிமயமான மின்தடை நீக்கப் பணி மையங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்

சென்னை மாநகரில் உள்ள 18 இலட்சம் மின் நுகர்வோர்களின் மின் இணைப்புகளில் ஏற்படும் தடங்கல் மற்றும் மின் தடைகளைச் சீர் செய்திட பல முகவர்களைக் கொண்டு கணினி மூலம் அழைப்புகளை வரிசைப்படுத்தி பிரித்து வழங்குகின்ற பல இணைப்புகள் உடைய தொலைபேசி அமைப்புடன் கூடிய கணினி அடிப்படையிலான மின் தடை நீக்கும் பணி மையம் ஒன்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.11.2003 அன்று தொடங்கி வைத்தார்கள். இதே போன்ற கணினிமயமாக்கப்பட்ட மின் தடை நீக்கும் பணி மையங்கள் (Computerised Power Failure Redressal Centres) திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களிலும் ஏற்படுத்தப்படும் என்று 8.12.2004 அன்று நடைபெற்ற தூத்துக்குடி அனல் மின் நிலைய வெள்ளி விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள்.

இதன்படி, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் 66.08 இலட்சம் ரூபாய் செலவில் கணினிமயமாக்கப்பட்ட மின்தடை நீக்கப் பணி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று மையங்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வீடியோ கலந்தாய்வு முறையில் மதுரை மாநகரத்தில் அமைக்கப்பட்டுள்ள கணினிமயமாக்கப்பட்ட மின்தடை நீக்கப் பணி மையத்துடன் தொடர்பு கொண்டு தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் அமைக்கப்பட்டுள்ள இந்த கணினிமய மின் தடை நீக்கும் பணி மையங்களை அந்தந்த மாநகரங்களில் உள்ள அனைத்து மின் நுகர்வோர்களும் 12660 என்ற ஐந்து இலக்க தொலைபேசியின் மூலம் எளிதில் தொடர்பு கொள்ளலாம். ஒவ்வொன்றும் பத்து தொலைபேசி இணைப்புடன் கூடிய இணைப்பகம் மூலம் மின் தடை பற்றிய புகார்கள் பெறப்பட்டு மின் பழுது பார்ப்பு முழுமையாகவும் திறமையாகவும் கையாளப்படும். எந்த நாளிலும், எந்த நேரத்திலும் மின் நுகர்வோர் தங்களது புகார்களைப் பதிவு செய்யும் வகையில் பயிற்சி பெற்ற பணியாளர்கள் 24 மணி நேரமும் தொடர்ந்து இந்தப் பணி மையங்களில் இருப்பார்கள். புகார் பெறப்பட்டதும் மின் வாரியப் பணியாளர்கள் மின் தடை ஏற்பட்ட இடத்திற்கு விரைந்து சென்று சீர்படுத்துவார்கள். மின் நுகர்வோரின் மின் தடை புகாருக்கு உடனடியாக ஒரு பதிவு எண் வழங்கப்படும். இதன் மூலம் அந்தப் புகார் மீது எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கையின் நிலையினை நுகர்வோர் அறிய முடியும்.

இந்த கணினிமய மின்தடை நீக்கும் பணி மையங்கள் திருச்சி மாநகரில் தலைமைப் பொறியாளர், திருச்சி வளாகம், தென்னூர், மதுரை மாநகரில் தலைமைப் பொறியாளர், மதுரை வளாகம் மற்றும் கோயம்புத்தூர் மாநகரில் 110 K.V. துணை மின் நிலைய வளாகம், டாடாபாத் ஆகிய இடங்களில் இயங்கும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர். விசுவநாதன், எரிசக்தித் துறை செயலாளர் திரு. ஆர். சதபதி, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் திரு.கே. ஸ்கந்தன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். ❖

# தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், புகழ்மிக்க தமிழறிஞர்களின் படைப்புகள் அனைத்தும் எளிதில் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் அந்தச் சான்றோர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கி அவர்களது குடும்பத்தினருக்குப் பரிவுத் தொகைகளை வழங்கிச் சிறப்பித்து வருகிறார்கள். இவ்வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மிகப் பெரும் எழுத்தாளரான புதுமைப்பித்தன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவரது வாரிசுரிமை தாரருக்கு ரூ.5 இலட்சம் பரிவுத் தொகையையும், மற்றும் திருமதி. கு.ப. சேது அம்மாள் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவருக்கு பரிவுத் தொகையாக ரூ. 3 இலட்சமும் 25.9.2002 அன்று வழங்கிச் சிறப்பித்தார்கள். தற்போது, தமிழறிஞர்கள் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. ந.பிச்ச மூர்த்தி, திரு. க. நா. சுப்பிரமணியம் ஆகியோரின் படைப்புகளை நாட்டுடைமையாக்கி இந்த மூவரின் குடும்பத்தாருக்கும் தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 15 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகையாக வழங்க ஆணையிட்டார்கள்.



தஞ்சை மாவட்டம், நடுக் காவேரியில் பிறந்த திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டார், வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி, நக்கீரர், கபிலர், கள்ளர் சரித்திரம், சோழர் சரித்திரம் முதலிய நூல்களையும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய பல இலக்கியங்களுக்கு உரைகளையும் எழுதித் தமிழுக்கு அணி சேர்த்துள்ள சிறந்த படைப்பாளர் ஆவார். இவரது படைப்புகளை நாட்டுடைமையாக்கி,

அதன் பரிவுத் தொகையான ரூபாய் 5 இலட்சத்தை நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் மகன் திரு. வே. நடராசன் மற்றும் மரபுரிமை வாரிசுகளான தையல்நாயகி, அம்புஜம், அகிலா, திருஞானசம்பந்தம், சிதம்பரநாதன் ஆகியோரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று நேரில் வழங்கினார்கள்.

தமிழிலக்கியத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய 'மணிக்கொடி' எழுத்தாளர்களில் ஒருவரும், புதுக்கவிதை வடிவத்தைச் செழுமையோடு நிலை நிறுத்தியவருமான நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடி திரு. ந. பிச்சமூர்த்தி அவர்கள், 130 கவிதைகள், 130 சிறுகதைகள், 10 நாடகங்கள், 40 கட்டுரைகள் முதலியவற்றைப் படைத்து தமிழுக்கு வளம் சேர்த்தவர் ஆவார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இவரது நூல்களை நாட்டுடைமையாக்கி அதன் பரிவுத் தொகையான ரூ.5 இலட்சத்திற்கான காசோலையை அவரது மகள்களான அலமேலு, ராஜலட்சுமி, மீனாட்சி, சிந்தாமணி ஆகியோரிடம் 1.3.2005 அன்று நேரில் வழங்கினார்கள்.

சிறந்த நாவலாசிரியராகவும் சிறுகதை ஆசிரியராகவும், திறனாய்வாளர் மற்றும் மொழி பெயர்ப்பாளராகவும் பல வகைகளில் தன்னை வெளிப்படுத்தி, 100க்கும் மேற்பட்ட சிறுகதைகள், 20 புதினங்கள், 10க்கும் மேற்பட்ட திறனாய்வு நூல்களை எழுதியதோடு, பல கவிதை, கட்டுரைத் தொகுதிகள், நாடகங்கள், மொழி பெயர்ப்பு நூல்களை எழுதி தமிழுக்கு வளம் சேர்த்தவர் திரு. க.நா. சுப்பிரமணியம் அவர்கள். தமிழின் தொன்மை இலக்கியங்களான சிலப்பதிகாரம் மற்றும் குறுந் தொகைப் பாடல்களையும் புதுமைப் பித்தன், கு.ப.ரா., ஜெயகாந்தன் போன்ற நவீன எழுத்தாளர்களின் படைப்புகளையும் இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவரது படைப்புகளை நாட்டுடைமையாக்கி அதற்குரிய பரிவுத் தொகை ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை திரு. க.நா. சுப்பிரமணியம் அவர்களின் மனைவி திருமதி எஸ். இராஜி அவர்களிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று நேரில் வழங்கினார்கள்.

நூல்களை நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், திரு. ந. பிச்சமூர்த்தி, திரு. க.நா. சுப்பிரமணியம் ஆகியோரின் குடும்பத்தினர் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

* * *



உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள ஔவையார் சிலைக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் 8.3.2005 அன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரக அலுவலகத்திற்கென, கிண்டியில் 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரக அலுவலகம் தற்போது சென்னை சேப்பாக்கம் எழிலக வளாகத்தில் உள்ளது. இந்த அலுவலகங்களுக்கு கிண்டி அரசினர் தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் 3046.16 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில், தரைத் தளம் மற்றும் மூன்று மாடிகளுடன் கட்டப்பட்டுள்ள இந்தப் புதிய கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள். இந்தப் புதிய கட்டடத்தில் தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரக அலுவலகமும், மண்டல இணை இயக்குநர், சென்னை அவர்களது அலுவலகமும் செயல்படும். சிறப்பான கூட்ட அரங்கம் ஒன்றும், முழுமையான கணினிப் பிரிவு ஒன்றும் இதன் சிறப்பு அம்சமாக அமைந்திருக்கிறது. அனைத்து அடிப்படை வசதிகளுடனும், மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்போடும் இந்தப் புதிய கட்டடம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.பி. பிராணேஷ், இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் திரு. சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். ★

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலிதா** அவர்கள் திறந்து வைத்தார்கள்.

# கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து செயல்படுத்துகின்ற புங்கர் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலுகின்ற கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில், ஒருவருக்கு 900 ரூபாய் வீதம் 9,473 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மொத்தம் 85 இலட்சத்து 25 ஆயிரத்து 700 ரூபாய் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்கள் பயன் அடையும் வகையில், ஏற்கெனவே செயல்பட்டு வந்த சுய காப்பீட்டுத் திட்டத்தை மாற்றி அமைத்து புங்கர் பீமா யோஜனா என்ற பெயரில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் இணைந்து ஒரு புதிய காப்பீட்டு திட்டத்தை மேலும் அதிக சலுகைகளுடன் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.6.2004 அன்று ஆணையிட்டார்கள்.

இந்த புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நெசவாளர் ஒருவருக்கு, மத்திய அரசின் பங்காக ரூ.150/–, ஆயுள் காப்பீட்டுக் கழகப் பங்காக ரூ.100/–, நெசவாளரின் பங்காக ரூ.130/– ஆக மொத்தம் ரூ.380/– பிரீமியத் தொகையாக செலுத்தப்பட வேண்டும் என்ற போதிலும் கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி ஒவ்வொரு நெசவாளரும் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையான ரூ.130/–ஐ தமிழக அரசே செலுத்திடும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



அறிவித்திருந்தார்கள். இதன்படி சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் தற்போது உறுப்பினர்களாக உள்ள 75,565 கைத்தறி நெசவாளர்கள் ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய மொத்த பிரீமியத் தொகையான 98 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் தொகையையும் தமிழக அரசே இந்த ஆண்டு செலுத்தி உள்ளது.

இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்கள் 60 வயதுக்கு முன்னர் இயற்கையாக இறக்க நேரிட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/–, விபத்தில் மரணம் அடைந்தால் ரூ.80,000/–, விபத்தில் முழுவதும் செயல் இழக்க நேரிட்டால் ரூ.50,000/–, பகுதி செயல் இழப்பு ஏற்படின் ரூ.25,000/– இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுவதுடன் கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு காலாண்டுக்கும் ரூ.300/– என கல்வி உதவித் தொகை வழங்கப்படவும் வகை செய்யப்பட்டுள்ளது.


இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 1.3.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தேனி மாவட்டம், செக்கம்பட்டி இந்து உயர்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு பயிலுகின்ற மாணவி எம். சத்தியா, ஆண்டிபட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவி வி. நாகஜோதி, காஞ்சிபுரம் மாவட்டம் டாக்டர் பி.எஸ். சீனிவாசன் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் 10ஆம் வகுப்பு பயிலுகின்ற மாணவன் எஸ். ஜெயசந்திரன், காஞ்சிபுரம் மாவட்டம் பி.எம்.எஸ். அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவன் எஸ். ரவிகுமார் ஆகிய ஆறு மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக தலா 900 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி பள்ளியில் பயிலுகின்ற கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு புங்கர் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு. சோமசுந்தரம், கைத்தறி, கைவினை துணி நூல் மற்றும் கதர்த் துறை செயலாளர் திரு. இளங்கோவன், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலுகின்ற கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளான 9,473 பள்ளி மாணவ, மாணவிகள் பயன்பெறுவார்கள். மேலும், இவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக மொத்தம் 85 இலட்சத்து 25 ஆயிரத்து 700 ரூபாய் இந்த ஆண்டில் வழங்கப்பட உள்ளது.

* * *

# மூன்று திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கொடை







**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 2002–ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தனது சம்பளத்தை தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் அன்னதானத் திட்டத்திற்காக ஒவ்வொரு மாதமும் ஓர் திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள்.

அதன்படி, 2004 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மற்றும் 2005–ஆம் ஆண்டு ஜனவரி ஆகிய மாதங்களுக்குரிய தனது சம்பளத் தொகை மொத்தம் ரூ.30 ஆயிரத்தை, தலா ரூ.10 ஆயிரம் வீதம் சென்னை மயிலாப்பூர் அருள்மிகு முண்டககன்னியம்மன் திருக்கோயில், தஞ்சை மாவட்டம் திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில் மற்றும் திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக, அருள்மிகு முண்டககன்னியம்மன் திருக்கோயில் செயல் அலுவலர் திரு. டி. மோகனசுந்தரம், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் திரு. ஜி. தென்னரசு, அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் திரு. எல். மாரியப்பன் ஆகியோரிடம் 3.3.2005 அன்று நேரில் வழங்கினார்கள்.

★ ★ ★

# அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில் வென்ற காவல்துறையினருக்கு ரொக்கப் பரிசுகள்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்**



அகில இந்திய காவல் துறை பணித்திறன் போட்டிகள் (All India Police Duty Meet, Dergaon, Assam) சென்ற 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் தேதி முதல் 18ஆம் தேதி வரை அஸ்ஸாம் மாநிலம் டெர்கான் நகரில் நடைபெற்றன. இந்த காவல் பணித் திறன் போட்டிகளில் 21 மாநில அணிகளும், ஒரு யூனியன் பிரதேச (Union Territory) அணியும், 8 மைய அரசு காவல் அமைப்புகளும் என 30 காவல் துறைக் குழுக்கள் கலந்து கொண்டன. இதில், குற்றப் புலானய்வுக்கு அறிவியல் கருவிகளைப் பயன்படுத்துதல், கணிப்பொறி விழிப்புணர்வு, தொழில் முறை நிழற்படக் கலை மற்றும் வீடியோ படக்கலை முதலான காவல் பணி சார்ந்த பல்வேறு பணித் திறன் போட்டிகளில் பங்கேற்ற தமிழ்நாடு காவல் துறை குழு இரண்டு தங்கப்பதக்கங்கள், 4 வெள்ளிப்பதக்கங்கள் மற்றும் 5 வெண்கலப்பதக்கங்கள் உட்பட, 11 பதக்கங்கள் மற்றும் இரண்டு முதலிட கோப்பைகளையும் ஒரு இரண்டாமிட கோப்பையையும் வென்று 3488.97 மதிப்பெண்கள் பெற்று இப்போட்டியில் முதலிடத்தை அடைந்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. இவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.3.2005 அன்று ரொக்கப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

மேலும், தாய்லாந்து நாட்டின் பாங்காக் நகரில் 1.12.2004 முதல் 5.12.2004 முடிய 13ஆவது ஆசிய விற்பன்னர் தடகளப் போட்டிகள் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் தமிழகக் காவல்துறை தடகள அணி பங்கேற்று ஒரு தங்கம் 4 வெள்ளி மற்றும் 5 வெண்கலம் ஆக மொத்தம் 10 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது. சர்வதேச அளவிலான தடகளப் போட்டி ஒன்றில், இத்துணைப் பதக்கங்களை தமிழகக் காவல் துறை வென்றுள்ளது இதுவே முதல் முறையாகும். இவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.3.2005 அன்று ரொக்கப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்கள்.

அஸ்ஸாம் மாநிலம் டெர்கான் நகரில் 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற 48–ஆவது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகளிலும், தாய்லாந்து நாட்டின் பாங்காக் நகரில் 1.12.2004 முதல் 5.12.2004 முடிய நடைபெற்ற ஆசிய விற்பன்னர் தடகளப் போட்டிகளிலும் தங்கம், வெள்ளி, மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்ற தமிழகக் காவல் துறை வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடர்ந்து மேலும் பல சாதனைகள் புரிய தனது மனமுவந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின்போது, தமிழக அரசின் உள்துறைச் செயலாளர் திரு.பவன் ரெய்னா, இ.ஆ.ப., காவல்துறைத் தலைமை இயக்குநர் திரு.ஏ.எக்ஸ். அலெக்சாண்டர், இ.கா.ப., ஆகியோர் உடனிருந்தனர். ★

# மாணவ, மாணவிகளுக்கு கல்வி நிதி உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.2.2005 அன்று தலைமைச் செயலகத்தில், தங்களது கல்வி செலவுக்குப் போதிய நிதி வசதி இல்லாது தவித்த மருத்துவம், கால்நடை மருத்துவம், பொறியியல், பி.எஸ்.சி (வேளாண்மை), செவிலியர் மற்றும் பிசியோதெரபி ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவிகள் 19 பேருக்கு, தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம், மொத்தம் "4 இலட்சத்து 75 ஆயிரத்திற்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள்.

கோவை மாவட்டம் எஸ். நாகராஜன், விருதுநகர் மாவட்டம் கே. ஜீவா ஆகியோர் மருத்துவம் (M.B.B.S.) பயிலவும், ஈரோடு மாவட்டம் ஆர். மைதிலி, பெரம்பலூர் மாவட்டம் பி. சத்தியா ஆகியோர் கால்நடை மருத்துவப் படிப்பு பயிலவும், கோவை மாவட்டம் ஜி. தர்மராஜ், காஞ்சிபுரம் டி. வந்தனாதேவி, நாமக்கல் மாவட்டம் ஆர். கௌரி சங்கர், பி. திவ்ய பாரதி, ஆர். மோகன ராணி, பி. தமிழ்செல்வி, ஜி. யோகமணிகண்டன், மதுரை மாவட்டம் எஸ். முனியசாமி, தஞ்சாவூர் மாவட்டம் ஏ. மணிவண்ணன், தேனி மாவட்டம் பி. விவேக், திருநெல்வேலி மாவட்டம் எம். கலாராணி மற்றும் வேலூர் மாவட்டம் இ. மணிகண்டன் ஆகியோர் பொறியியல் படிப்புப் பயிலவும், மதுரை மாவட்டம் ஜி. கார்த்திகை ஜோதி பி.எஸ்.சி – வேளாண்மை (Agriculture) பயிலவும், கோவை மாவட்டம் ஜெ. அருணா பி.எஸ்.சி – செவிலியர் (Nursing) பயிலவும், திருநெல்வேலி மாவட்டம் எஸ். தபசு நாதன் பிசியோதெரபி பயிலவும், நிதி உதவி வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்கள்.



இவர்களது கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், போதிய நிதி வசதி இல்லாமல் தவித்த இந்த 19 மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் நிதி உதவி வழங்க ஆணையிட்டார்கள்.

இந்த ஆணையின்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இதற்கான காசோலைகளை 28.2.2005 அன்று அந்த மாணவ, மாணவிகளிடம் நேரில் வழங்கினார்கள்.

நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட மாணவ, மாணவிகள் அனைவரும் தங்களது குடும்ப சூழ்நிலையை அறிந்து தக்க நேரத்தில் நிதி உதவி வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

* * *


விழாக்காலம் – கோ-ஆப்டெக்ஸ் காலம்
கோ-ஆப்டெக்ஸ்
காலத்திற்கேற்ற புதுமையுடனும்
பாரம்பரியப் பெருமையுடனும்...
1935 முதல் மிகச் சிறந்த இரகங்களை
உங்களுக்காகவே வழங்குகிறது.
• காஞ்சிபுரம் அசல் பட்டு சேலைகள்
• சேலம் தரமிக்க பட்டு சேலைகள்
• ஆரணி தரமிக்க பட்டு சேலைகள்
• கோயமுத்தூர் உயர்ரக பருத்தி சேலைகள்
• உறையூர் பருத்தி சேலைகள்
• சேலம் உயர்ரக பருத்தி சேலைகள்
• மதுரை சுங்கடி புடவைகள்
• சென்னிமலை ஏற்றுமதி தரம் பாய்ந்த படுக்கை விரிப்புகள்
• கோவை ஏற்றுமதி தரம் வாய்ந்த ஈரலை துண்டுகள் (டவல்கள்)
• குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி தரம் வாய்ந்த லுங்கிகள்
• தாத்தையங்கார்பேட்டை வேட்டிகள்
கோ-ஆப்டெக்ஸ்
Visit us at www.tn.gov.in / www.cooptex.com
இவை அனைத்தும் உங்களுக்காக வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ்.
வாருங்கள், பாருங்கள், வாங்குங்கள், முழு திருப்தியைக் கண்டு மகிழுங்கள்.
ஆண்டுதோறும் 1,00,000 பட்டு புடவைகள், 3,00,000 பருத்தி புடவைகள், 10,00,000 பருத்தி விரிப்புகள் மற்றும் 10,00,000 டவல்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
டெல்லி, மும்பாய், கொல்கத்தா, பெங்களூர், அகமதாபாத், கோவை, திருச்சி மற்றும் இந்தியாவின் பிற முக்கிய நகரங்களில் எங்கள் சேவை உங்களுக்காக.

R.N.I.No.21446/70
RGN No.TN/PMG (CCR) 836/03-05, WPP-518

